# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 14 சனிக்கிழமை (28 – 03 – 1998) SANJEAVY• Regenerative Tamil Weekly சிகரம்: 43


# வவுனியா நகரில் உண்ணாவிரதம்!

## யாழ்ப்பாணம் செல்ல கப்பல் வசதி கோரி

வவுனியா, மார்ச் 28

யாழ்ப்பாணம் செல்ல கப்பல் வசதி செய்து தருமாறு கோரி பல நூற்றுக்கணக்கானோர் வவுனியா திட்டமிடல் பணிமனைக்கு முன்பாக நேற்று உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் செல்வதற்கு கப்பல் வசதியின்றி வவுனியாவில் தங்கியுள்ள அரச ஊழியர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த உண்ணாவிரதப் போராட்டம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி 12 மணிக்கு பூர்த்தியடைந்தது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைப் பார்வையிட்ட வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ், சண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் களப்பலி

வவுனியா, மார்ச் 28

மாங்குளம் பகுதியில் நேற்று படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் செஞ்சுடர் (நவரத்தினம் ஜெயக்குமார் — யாழ்ப்பாணம்) களப்பலியானதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

(உ–3)

## நிந்தவூரில் நேற்றிரவு திடீர்த் தாக்குதல்!

### ஊர்காவலர் பலி;4பேர் காயம்

அம்பாறை, மார்ச் 28

நிந்தவூர் பிரதான வீதியில் உள்ள மருந்துக் கடை (பாமஸி) ஒன்றின் மீது நேற்றிரவு 8. 30 மணியளவில் திடீரென நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் கிரனேட் தாக்குதலில் ஏ. சுஹைர் என்ற முஸ்லிம் ஊர்காவலர் ஒருவர் கொல்லப்பட்டார்; நான்கு முஸ்லிம் இளைஞர்கள் காயமடைந்தனர்.

சுமார் பத்துப்பன்னிரண்டு பேரைக்கொண்ட இளைஞர் அணி ஒன்றே இத்தாக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாயாறில் நேற்று விமான குண்டுவீச்சு!

வவுனியா, மார்ச் 28

நேற்றுக் காலை 7.30 மணியளவில் மணலாறு வான் பரப்பில் நுழைந்த இரு கிபிர் விமானங்கள் நாயாறு கிராமத்தில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதலில் மட்டக்களப்பு கொம்மாந்துறையில் இருந்து இடம்பெயர்ந்து வந்த 30 வயதுடைய குடும்பஸ்தர் இன்பம், ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த குடும்பஸ்தரான 37 வயதுடைய பி. சண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் 7 புலிகள் மரணம்?

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் ஐந்தாவது மைல் கல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 7 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளனர் என பாதுகாப்புப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்துக் கிடைத்த தகவலையடுத்து விசேட அதிரடிப் படையினர் முன் கூட்டியே பதுங்கியிருந்து இத்தாக்குதலை நடத்தினர் என்று அறிவிக்கப்படுகின்றது.

சடலங்களுடன் ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்றும்—

சடலங்கள் நேற்று பிற்பகல் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன என்றும் —

பாதுகாப்புப்படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

(உ–7–14–21)

# உணவையும் மருந்தையும் அரசு போராயுதமாக்குகிறது

## வன்னியிலிருந்து ஐ. நா. செயலருக்கு மனு

வவுனியா, மார்ச் 28

ஸ்ரீ லங்கா அரசின் திட்டமிட்ட இராணுவ, பொருளாதார, சமூக அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு இனப்படுகொலையை எதிர்நோக்கியுள்ள வன்னி வாழ் மக்களின் அவலநிலை குறித்து ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியங்கள் இணைந்து இந்த மகஜரை அனுப்பியுள்ளன.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வன்னி வாழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விட்டுள்ள இராணுவ அடக்குமுறையால் மக்கள் பெரிதும் அவல நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

உணவையும், மருந்தையும் அரசு போராயுதமாகப் பயன்படுத்துகின்றது. இதனால் மக்களின் வாழ்க்கை நிலை சீரழிக்கப்பட்டு மோசமான

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா சிமெந்து ஆலை மூடுவதற்கு முடிவு?

காங்கேசன்துறையில் அமைந்துள்ள லங்கா சிமெந்து நிறுவனத்தின் சிமெந்து ஆலையை மூடுவதென்று அந்தநிறுவன பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பில் மேற்படி சபைகூடி, காங்கேசன்துறையில் உள்ள தமது ஆலையை மூடுவதா? இல்லையா? என்பது குறித்து விரிவாக ஆராய்ந்தது என்றும் —

அதன்பின்பே இந்த முடிவை எடுத்ததாகவும் — தெரிய வந்தது.

இத்தகைய முடிவைத் தொடர்ந்து அத்தொழிற்சாலை தொடர்பாக அடுத்து எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகள் என்னவென்பது பற்றி எவ்விதத் தகவலும் தெரியவரவில்லை. (உ-3)

## ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பு உயர் நீதிமன்றம் இடைநிறுத்தியது

புதுடில்லி, மார்ச் 28

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 26 எதிரிகளுக்கும் எதிராக பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் கடந்த ஜனவரியில் விதித்த மரணதண்டனைத் தீர்ப்பை இடைநிறுத்தி வைத்து புதுடில்லி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

மேற்படி மரணதண்டனை தீர்ப்புக்கு எதிராக 26 எதிரிகளினதும் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டே இந்தத் தடை உத்தரவை உயர் நீதிமன்றம் விடுத்தது.

உயர்நீதிமன்றத் தலைமை நீதியரசர் எம். எம். புன்ஹி, நீதியரசர்கள் வே. வெங்கடசாமி, பி. என். கிருபால் ஆகியோர் இந்த உத்தரவை விடுத்தனர்.

மேற்படி வழக்கில் சாட்சியமளித்த 288 இற்கும் மேற்பட்டோரின் சாட்சியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்பி வைக்குமாறும் —

உயர்நீதிமன்ற விசாரணை முடிந்து தீர்ப்பு வரும் வரை சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பை இடைநிறுத்தி வைக்குமாறும்—

சிறப்பு நீதிமன்றத்துக்கு நீதியரசர்கள் உந்தரவு பிறப்பித்தனர்.

(உ-7)

# படையினரின் கெடுபிடி குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

குடா நாட்டில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. அவற்றைத் தவிர்த்து மக்களுக்குகௌரவமான வாழ்க்கை அமைய உதவ வேண்டும்.

நல்லெண்ணத்துக்கும், சமாதானத்துக்குமான அமைப்பு வடபிராந்திய பாதுகாப்புப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவிடம் மேற்கண்டவாறு கடிதம் மூலம் கோரியுள்ளது.

சம்பந்தப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடப்பெயர்வின் பின்னர் யாழ். குடாநாட்டுக்கு மக்கள் திரும்பிய போது படையினர் மக்களுடன் நட்புடன் பழகினர். பின்னர் தமது கெடுபிடிகளைத் தொடங்கினர்.

அதன் பின்னர் இவை தொடர்பாக உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்கள் இடம்பெற்றதையடுத்து கெடுபிடிகள் தளர்த்தப்பட்டிருந்தன.

ஆனால் மீண்டும்இப்போது படையினரின் கெடுபிடிகள் ஆரம்பித்துள்ளன. சோதனை நிலையங்களில் மக்கள் தேவையற்ற — அநாவசியமான — முறைகளில் நடத்தப்படுகின்றார்கள். தேவையற்ற கேள்விகளுக்கு இலக்காகிறார்கள்.

அத்துடன் சோதனை நிலையங்களுக்கு முன்பாக வீதிக்கு குறுக்கே உயரமான தடைகள் புதிது புதிதாகப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைக் கடலில்

## காணாமற்போன இரண்டு மீனவர்களும் 16 மணி நேரத்தில் கரை சேர்ந்தனர்

வவுனியா, மார்ச் 28

முல்லைக் கடலில் கடற்படையினரின் தாக்குதலை அடுத்துக் காணாமற் போன இரு மீனவர்கள் 16 மணித்தியாலங்களின் பின்னர் கரை சேர்ந்தனர்.

வடமராட்சி உடுத்துறையைச் சேர்ந்த திருச்செல்வம் கிருபாகரன், வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த பிலிப்பையா யோகராசா ஆகிய இருவரும் நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காணாமல் போயிருந்தனர்.

கடலில் நீந்தி 16 மணித்தியாலங்களின் பின்னர் இவர்களில் ஒருவர் சுண்டிக்குளம் பூனைத்தொடுவாயிலும்; மற்றவர் நல்லதண்ணீர்த்தொடுவாயிலும் கரை சேர்ந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

(உ–3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கலர் படச்சுருள்களை
எம்மிடம் ஒப்படைத்தால்
விரைவில் உங்கள் படங்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.

**- சுனில் ஆட்ஸ் -**

**31-03-1998** அன்று படச்சுருள்கள்
அனுப்பி வைக்கப்படும்.

**சுனில் ஆட்ஸ்**
272, ஸ்ரான்லி றோட் (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

(சி/3234)

## அறிவித்தல்

எமது பாடசாலைக்குரிய வாகனமான வொக்ஸ் வெகன் இல. 33 ஸ்ரீ 8120 கொண்ட வானை 25-3-98 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு வேறு நபருக்கு விற்பனை செய்துள்ளோம் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.

அதிபர்
நவீல்ட் பாடசாலை
கைதடி.

(சி/3236)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு சுப்பிரமணியம்

(முன்னாள் நுகர்ச்சி முகாமையாளர்
— சங்கானை ப. நோ. கூ. சங்கம்)

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த முருகேசு சுப்பிரமணியம் அவர்கள் 27 – 03 – 98 இல் காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சுந்தரவதனி (சங்கானை ப. நோ. கூ. சங்கம்), சிவசுந்தரி (டென்மார்க்), சுந்தரராசா (கண்ணன்), மோகனசசி ஆகியோரது அன்புத் தந்தையாரும், ஆனந்தராஜா (சங்கானை ப. நோ. கூ. சங்கம், கனகராஜா (டென்மார்க்) ஆகியோரது மாமனாரும், விக்னேஸ்வரனின் பேரனும், மு. நமசிவாயம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27 - 03 - 98 பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சு. சுந்தரராசா
(கண்ணன்)
(மகன்)

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (54360)

## திருமதி குழந்தைவேலு இலட்சுமிப்பிள்ளை

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி குழந்தைவேலு இலட்சுமிப்பிள்ளை 26-03-98 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் லயன் குழந்தைவேலுவின் அருமை மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி கார்த்திகேசு — வள்ளிப்பிள்ளையின் ஏகபுத்திரியும், ஐயம்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்), கனகசபை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தேவராஜ், கிருபராஜ், தயாளன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தகுமாரி, பத்மராணி, சத்தியவாணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27- 03- 98 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லயன் க. குழந்தைவேல்
(கணவன்)
கு. கிருபராஜ்
(மகன்)

''தேவவாசா''
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (54373)

### திருமதி

## செல்லையா பிலோமினா

(மீனா)

யாழ்ப்பாணம், செபஸ்ரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது வவுனியாவில்வசித்தவருமாகிய செல்லையா (பாறெயின்) அவர்களின் அன்பு மனைவி பிலோமினா 24 . 03 . 98 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் கஸ்பார் ஞானம்மா அவர்களின் அன்பு மகளும், உமாசங்கர் (இத்தாலி), உமாகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லீலாவதி, பிரான்சீஸ் (வவுனியா), றீசா எற்னா இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26. 3. 98 அன்று காலை 10 மணியளவில் வவுனியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
எற்னா அந்தோனிப்பிள்ளை,
(சகோதரி)

இல. 11, செபஸ்ரியார் வீதி,
யாழ்ப்பாணம். (54370)

## சமய சந்நிதியில்

வடமராட்சி வட அல்வை அருள்மிகு குச்சம் ஞானவைரவர் தேவஸ்நான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9. 23 மணிமுதல் நடைபெறும்.

★ ★ ★

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக கிரியைகள் நாளை ஆரம்பமாகும். எண்ணெய்க் காப்பு சாத்துதல் எதிர்வரும் 2 ஆம் திகதியும் மகாகும்பாபிஷேகம் மறுநாள் 3 ஆம் திகதியும் நடைபெறும்.

கும்பாபிஷேக கிரியைகள் கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
சனி, ஞாயிறு
மோகன் - அம்பிகா
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**இதயக் கோயில்**
திங்கள், செவ்வாய்
சங்கர், நளினி
சந்திரசேகர் நடித்த
**'ஒருதலை ராகம்'**
நேரம்:- **10-30, 2-30**
தொலை பேசி இல.
**070 - 212223**
(54347)

யாழ்.
**றீகல்** வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
சரத்குமார்
(இரு வேடங்களில்)
தேவயானி
நடித்த
**சூரியவம்சம்**
அடுத்த வெளியீடு
**குருதிப் புனல்**
தினசரி:- **10-30, 2-30**
(பழைய நேரம்)
(54381)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
**27 - 03 - 98** முதல்
**28 - 03 - 98** வரை
அர்ஜுன் - மதுபாலா
நடித்த
**ஜென்ரில்மேன்**
**29 - 03 - 98** முதல்
கரன் - குஷ்பு
நடித்த
**கலர்கனவுகள்**
காட்சிகள்: **10-30, 2-30**
( பழைய நேரம் )
(சி/2756)

# ஐ.தே.க. பேரணிக்கு அனுமதி மறுப்பு!

கொழும்பு, மார்ச் 28

ஐ.தே.கட்சி ஏப்ரல்மாதம் 3ஆம்திகதி பொலநறுவையில் நடத்தத் திட்டமிட்டிருந்த எதிர்ப்புப் பேரணிக்குப் பொலீஸார் அனுமதி மறுத்துள்ளனர்.

கூட்டம் நடத்துவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது எனவும் ஆனால் கடந்த 24 ஆம்திகதி அந்த அனுமதியும் பொலீஸாரால் வாபஸ் பெறப்பட்டுள்ளது எனவும் ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலீஸாரின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்டபூர்வமான மற்றும் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என ஐ.தே.க. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்,

(ஐ-10)

# வணிகவியல் டிப்ளோமா வினாத்தாளில் குளறுபடி

## பரீட்சார்த்திகள் குழப்பம்

சுன்னாகம், மார்ச் 28

இலங்கை உயர் தொழில் நுட்ப நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் இரண்டாம் வருட உயர் தேசிய வணிகவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கானபரீட்சை வினாத்தாள்களில் பல குளறுபடிகள் நேர்ந்திருப்பது பரீட்சார்த்திகளைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இக்கற்கை நெறி தமிழ் மொழிப் போதனை மூலமே கற்பிக்கப்பட்டதாகவும் ஆனால் கணக்கியல், பொருளியல் ஆகியவற்றுக்கான வினாத்தாள் ஆங்கில மொழியில் அமைந்து இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை — தனியாள் முகாமைத்துவம் என்ற பாட வினாத்தாள் தமிழ் மொழிமூலம் இடம் பெற்றுள்ளது.

பொருளியல் வினாதாத்ளில் ''இறுதியாண்டு மீள் பரீட்சை'' என்று ஆங்கிலத்தில் ஆண்டு மாறி எழுதப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக, மாணவர்கள்வினாக்களைவிளங்கிக் கொள்ள முடியாமல் மிகுந்த சிரமப்பட்டனர்.

(ஐ-27)

# யாழ்ப்பாணத்தில் விளக்கமறியல் சிறைச்சாலை

யாழ். குடாநாட்டில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையில் விளக்கமறியல் சிறைச்சாலை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் விளக்கமறியல் சிறைச்சாலை நிறுவுவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக நீதி அமைச்சைச் சேர்ந்த 3 அதிகாரிகள் அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டது.

(ஐ-7)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் பரிசளிப்பும் கலைவிழாவும் நாளை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் சமாசத் தலைவர் க. நாகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஸ்ணசாமி, சம்மேளனத் தலைவர் ந. போஜன், கிராம சேவை உத்தியோகத்தர் வி. சந்திரசேகரம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பொதுசன தொடர்பு அதிகாரி இ. இரத்தினசிங்கம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் து. சோமசுந்தரம், சு. பூபாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-5-ரி)

## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த
சுன்னாகம் லயன்ஸ் கழக ஆரம்ப கால உறுப்பினர்
**லயன் க. குழந்தைவேலு**
(முன்னாள் செயலாளர்)
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி**
**குழந்தைவேலு இலட்சுமி**
காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

சுன்னாகம்
லயன்ஸ் கழக உறுப்பினர்கள்
(54380)

**பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ்**
அன்
**பேப்பர் மேர்ச்சன்ற்**

★ றோணியோ பேப்பர் ★ ரைப்பிங் சீற் ★ பேரஸ்டர் பேப்பர்
★ நியூஸ் பிறின்ட் ★ பாங் பேப்பர் ★ பொக்ஸ் போர்ட்
★ சிப் போர்ட் ★ ரிசு பேப்பர் ★ பிறிஸ்டல் போர்ட்

மற்றும் சகல விதமான பேப்பர் வகைகளையும்
அச்சகத்துக்குத் தேவையான
★ மை வகைகளையும் ★ றோணியோ மை வகைகளையும்
பெற்றுக் கொள்ள:

**பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ்**
104 (298) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஏவுதளங்களை கண்டுபிடிப்பதற்கு

# புதிய 'ராடர்' கருவிகள் படைகள் வசம்!

**வ**வுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு பாதுகாப்பான தரை வழிப் பாதையைத் திறப்பதற்காகப் பாதுகாப்புப் படைகள் ஆரம்பித்த 'வெற்றிஉறுதி' நடவடிக்கை பத்தரை மாத காலத்தைத் தாண்டி நீண்டு கொண்டே செல்கின்றது.

காலக்கெடுக்கள் காலாவதியானதைத் தவிர, பெரிதாக இறுமாப்பு அடைந்து கொள்வதற்கான வெற்றி எதுவும் 'வெற்றி — உறுதி' மூலம் படைத்தரப்புக்குக் கிடைத்திருப்பதாகக் கூறிவிட முடியாது.

சித்திரைப் புத்தாண்டுக்குள் பாதை திறக்கும் கனவும் காலவரையறையும் கூட முன்னைய காலக்கெடுக்கள் போலகாலாவதியாவது திண்ணம் என்றே சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடுப்பகுதிகளில் இருந்து மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான — பிந்திய — இராணுவ நடவடிக்கைகள் கூட ஆரம்பமாகி மூன்று வாரங்களாகிவிட்டன. எனினும் எதிர்பார்த்த முன்னேற்றத்தைப் படைகளால் மேற்கொள்ள முடியவில்லை. நகர்வு ஆமை வேகத்தில். மறுபுறத்தில் புலிகளின் தாக்குதலினால் ஏற்பட்ட — அளவுக்கு மிஞ்சிய — இழப்புகள்.

படைத்தரப்பு இழப்புக்கு முக்கிய காரணமாக இருப்பது புலிகளின் ஆட்லறி, பீரங்கித் தாக்குதல்களே என களமுனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட வன்னிக்காட்டுப் பிரதேசம் புலிகளைப் பொறுத்தவரை — ஒவ்வொரு ஒவ்வொரு — அங்குலம் அங்குலமாக — அவர்களுக்கு அத்துப்படியானதாம்.

அந்தத் தளத்துக்குள் அகலமாக காலைப்பரப்பி வைத்திருக்கும் படைத்தரப்பை உளவு பார்ப்பது புலிகளின் வேவுப் பிரிவுக்கு அப்படி ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

உளவுப் பிரிவினர் தரும் மிக அச்சொட்டான தகவல்களும் வன்னித்தளப் பிரதேசங்களின் பூகோள தரை அமைப்புப் பற்றி புலிகள் ஏற்கனவே கணிப்பிட்டு வைத்துள்ள துல்லியமான அளவுகளும், படையினரின் கேந்திர நிலைகள் மீது சரியான ஆட்லறி, பீரங்கித் தாக்குதல்களை நடத்துவதற்கு புலிகளுக்கு உதவுவதாகக் கூறப்படுகிறது.

படையினர் புதிதாகக் கைப்பற்றிய ஒரு பிரதேசத்துள் ஓரிடத்தில் இராணுவத்தின் கேந்திர நிலையம் அல்லது தளம் ஒன்று அமைக்கப்பட்டால், புலிகளின் வேவுப் படையணி அப்பிரதேசத்துக்குள் ஊடுருவி அது பற்றிய உளவுத்தகவலை புலிகளின் கட்டளைப் பீடத்துக்கு தெரியப்படுத்தி விடுகின்றது.

அப்பிரதேசம் மற்றும் அது பற்றிய தரையமைப்பு விவரங்களையும் தாம்தற்காலிகமாக — நகர்த்தக் கூடிய வகையில் — ஆங்காங்கே அமைத்திருக்கும் மோட்டார் நிலைகளில் இருந்து அந்தத் தளம் அமைந்துள்ள தூரம் ஆகியவற்றையும் ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் புலிகள் அதனைப் பயன்படுத்தி தமது மோட்டார் தாக்குதல்களுக்கு துல்லியமாக இலக்குகளை நிர்ணயித்து, அந்தத் தாக்குதல்களைத் தொடங்குகின்றார்கள். இதனால் அந்தக் கேந்திர நிலையத்துக்கும் அங்கிருக்கும் படையினருக்கும் பெருஞ் சேதம் ஏற்படுகின்றது.

இத்தகைய சேதங்களே படைத்தரப்பின் முன்னேற்ற நகர்வுகளை முடக்கி தாமதப்படுத்தி வருவதாக களமுனைத் தகவல்கள் கூறுகின்றன.

புலிகளின் மோட்டார், ஷெல் தாக்குதல்களை முறியடிக்கும் உத்திகளைப் படைத்தரப்பு கண்டுபிடித்து கையாளாவிட்டால் 'வெற்றி உறுதி' நடவடிக்கை வெற்றி பெறப்போவதில்லை என்பது உறுதி என மூத்த படை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

புலிகளின் மோட்டார், பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் இவ்வளவு துல்லியாக— பேரிழப்பை ஏற்படுத்துவதாக— இருக்கும் என்று இந்தப் படை நடவடிக்கை ஆரம்பித்த போது அதற்கான திட்டத்தை வகுத்த மூத்த அதிகாரிகள் எதிர் பார்த்திருக்கவில்லை.




புலிகள் ஏதோ வகையில், ஒரு மரபுப் படையணிக்கு இருக்கக் கூடிய அளவுக்கு தமது பீரங்கி, மோட்டார் தாக்குதல் வலுவை அதிகரித்துப் பேணியது படைத்தரப்புக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

போதாக்குறைக்கு படையினருக்கு என ஸிம்பாப்வேயிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 32 ஆயிரத்து 400 எண்ணிக்கை— 80 எம்.எம். அளவுடைய— மோட்டார் ஷெல்களும் இடைவழியில் புலிகளின் கைகளில் வீழ்ந்து புலிகளின் மோட்டார் தாக்குதல் வலுவை மிக உச்சத்துக்குக் கொண்டு போக வைத்து விட்டன.

'வெற்றி உறுதி' ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புதிது புதிதாக பல்முனைகளில் இருந்தும்மோட்டார்தாக்குதல்கள் மூலம் புலிகள் பதிலடி கொடுக்கத் தொடங்கியதை அடுத்து—

புலிகளின் மோட்டார் ஷெல்களுக்கு பதிலடி கொடுக்கும் வழிவகையை அரசுத் தரப்பு சிந்திக்கத் தொடங்கியது.

அதற்காக படை நடவடிக்கை தாமதப்படுத்தப் பட்டது; மோட்டார் ஷெல்கள், ஆட்லறிகள், றொக்கட்டுக்கள் போன்றவற்றை ஏவும் தளங்களைத் துல்லியமாகக் கண்டுபிடித்துக் காட்டக்கூடிய ராடர்களை அவசர அவசரமாகப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.

இந்த விடயத்தில் இலங்கைத் தரப்புக்கு ஆபத்பாந்தவனாகஉதவஅமெரிக்கா முன் வந்தது.

இத்தகைய 'ராடர்' ஒன்றை 77 கோடிரூபா என்ற விலையில் இலங்கைக்கு உடன் வழங்க அமெரிக்கா இணங்கியது.

ஆனால் அத்தகைய 'ராடர்கள்' எத்தனை கொள்வனவு செய்யப்பட்டன என்ற விவரம் தெரிய வரவில்லை.

இடத்துக்கு இடம் நகர்த்தக்கூடிய - PTQ 36 ரகத்தைச் சேர்ந்த — இந்த ராடர் கருவியை வழங்க அமெரிக்கா முன் வந்ததை அடுத்து படை அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று இக்கருவியில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அமெரிக்காவுக்கு விரைந்தது.

இப்போது அதிகாரிகள் குழு பயிற்சிகளை முடித்துக் கொண்டு சம்பந்தப்பட்ட கருவிகளுடன் கொழும்பு திரும்பி விட்டதாகவும் —

யுத்தமுனை நோக்கி தமது 'ராடர்' கருவிகளுடன் படையினர் நகர்ந்து கொண்டிருப்பதாகவும் —

கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

தரைவழிப் பாதையைத் திறப்பதற்காக வெற்றி உறுதி நடவடிக்கையை ஆரம்பித்த படைத்தரப்பு, அந்த நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவதற்காக பல கோடி ரூபா செலவில் மோட்டார்களைக் கொள்வனவு செய்தது; களத்துக்குக் கொண்டு சென்றது.

அந்த மோட்டார்கள் பொருத்தப்பட்ட தளங்களை 'செய் அல்லது செத்து மடி' தொடர் நடவடிக்கைகள் மூலம் தாக்கியழித்த புலிகள், அங்கிருந்த மோட்டார் ஷெல்களை அள்ளிக் கொண்டு சென்று பின்னர் தமது நிலைகளில் இருந்து அவற்றைப் பயன்படுத்தி படைத்தரப்பைத் தாக்கி வருகின்றார்கள்.

அதாவது படையினர் காசு கொடுத்து வாங்கி வந்த மோட்டர்களைப் படைத்தரப்பு மீதே திருப்பிவிட்டிருக்கிறார்கள் புலிகள்.

பலகோடி ரூபா செலவில் தான் கொள்வனவு செய்து, தற்போது புலிகளின் கைகளில் சிக்கியிருக்கும் மோட்டார் ஷெல்களை அழிப்பதற்காக மேலும் பல கோடி ரூபா செலவில் ராடர் கருவிகளைக் கொள்வனவு செய்ய வேண்டியநிலைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றது அரசுத் தரப்பு.

அரசுப் படைகளின் கைகளில் இந்த ராடர் கருவிகள் கிடைத்தால், அது வன்னி யுத்தத்தில் புலிகளுக்கு கணிசமான பாதிப்பை அல்லது பின்னடைவை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகின்றது.

படைத்தரப்பு மீது மோட்டார், பீரங்கி, ஷெல் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் எங்கிருந்து அவை ஏவப்படுகின்றன என்பதை இந்த ராடர்கள் மூலம் கண்காணித்து அந்தஇலக்குகளை நோக்கி படைத்தரப்பினர் பீரங்கி, ஷெல் மழைகளைப் பொழியத் தொடங்குவர்.

அத்தகைய தாக்குதல்கள் புலிகளைப் பாதிக்குமா? அல்லது திடீர் திடீரென வெவ்வேறு இடங்களில் இருந்து தாக்குதல்களை [illegible] தளங்களுடன் வேறு இடத்துக்கு மாறிவிடுதல் போன்ற உத்திகளைப் பயன்படுத்தி படைத்தரப்பின் ராடர்கருவிகளுக்கும் புலிகள் தண்ணீர் காட்டுவார்களா? என்பதை அடுத்த வாரங்களில் நடைபெறும் யுத்தமும் அதன் விளைவுகளும் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

எழுபத்திரண்டு கிலோ மீற்றர் நீளமான—வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான—தரைவழிப் பாதையைக் கைப்பற்றித் தக்க வைத்து அதனூடாக தரைவழிப் போக்குவரத்தையும் விநியோகத்தையும் மேற்கொள்ளுவதுதான் ''வெற்றி உறுதிபடை நடவடிக்கையின் நோக்கம். கடந்த பத்தரை மாத காலத்தில் இவ்வீதியில் 60 சதவீதப்பகுதியையே படைத்தரப்பால் கைப்பற்ற முடிந்திருக்கின்றது.

தற்போது கரிப்பட்ட முறிப்பிலும், ஒலுமடுவிலும் நிலைகொண்டுள்ள படைகள் பெரும் பிரயத்தனப்பட்டு மாங்குளத்தைக் கைப்பற்றினால் கூட அங்கிருந்து கிளிநொச்சி நகரை அடைய மேலும் முப்பது கிலோ மீற்றர் தூரம் கடந்தாக வேண்டும்.

ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கு 'வெற்றி உறுதி' படை நடவடிக்கையை நீடித்து, இந்த முப்பது கிலோமீற்றரையும் அதன் மூலம் கைப்பற்ற முடிந்தால் கூட, கைப்பற்றிய தரைவழிப்பாதையை— அவ்வளவு நீளமான தரை வழியை— தக்க வைத்திருப்பது என்பது கேள்விக்கும், சந்தேகத்திற்கும் உரியதாகவே இருக்கும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பீரங்கி, மோட்டார் தாக்குதல்களை நடத்துவதில் ஒரு மரபுப் படையணி என்ற மட்டத்துக்கு தன் வலிமையை உயர்த்திக் கொண்டுள்ள புலிகள்—

இருபக்கமும் சுமார் நான்கு, ஐந்து கிலோ மீற்றர் அகலத்துக்கு மட்டுமே பரந்துள்ள ஒரு நீண்ட வீதியைக் கொண்ட பாதுகாப்பு வலயத்துக்குள்—

சுமார் 72 கிலோ மீற்றர் நீளத்துக்குப் பரந்துள்ள பாதை வழியே—

தமது கட்டுப்பாட்டை மீறி அரசுப் படைகளால் சர்வசாதாரணமான நிலையில் போக்குவரத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டால்—

அதைப் பார்த்துக் கொண்டு புலிகள் வாளாவிருப்பார்கள் என்று எதிர் பார்க்க முடியாது.

## பாசுபதன்

★ ★ ★

### யாழ். நிலைமை

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் யாழ்ப்பாண நகரையும், பொறுத்த வரையில் ஒரு சுமுகமான வாழ்க்கை நிலை திரும்புவது போல் வெளித்தோற்றத்துக்கு ஒரு காட்சி தெரிகின்றது. வர்த்தக நடவடிக்கைகள் மும்முரமாகிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் நிலைமையை 'நீறு பூத்த நெருப்பு' என்றும் 'புயலுக்கு முந்திய அமைதி' என்றும் வேறு சில வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

குடாநாட்டில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்துவதற்காக மேலும் பல புலிகளின் அணிகள் ஊடுருவியிருப்பதாகச் சில வட்டாரங்கள் கருதுகின்றன.

அண்மையில்வரணியில்புலிகள் நடத்திய தாக்குதலும் அதன் பாணியும் இத்தகைய ஏற்பாடுகளுக்குக் கட்டியம் கூறுவதாக அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

டிராக்டர் ஒன்றில் பொருள்களை ஏற்றுவது போல மண்மூடைகளை அடுக்கி, அந்த மண்மூடைகளின் மறைப்புடன் வரணியில் உள்ள சோதனைத் தடை முகாம் ஒன்றுக்குள் ஊடுருவித் தாக்குதலை நடத்திவிட்டு புலிகள் மாறியிருக்கின்றார்கள்.

இது தவிர குடாநாட்டில் ஆங்காங்கே புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

கடந்த வாரம் நவீன சந்தைக்கடை ஒன்றில் சிப்பாய் ஒருவர் பொருள்களை வாங்கிக் கொண்டிருந்த சமயம் கடையின் அலுமாரிக் கண்ணாடியை உடைத்துக் கொண்டு கிரனேட் ஒன்று விழுந்துள்ளது. 'கிளிப்' கழற்றப்பட்ட நிலையில் விழுந்த இந்த கிரனேட் வெடிக்காததால் கடையும் தப்பியது; உள்ளேயிருந்த சிப்பாயும் ஏனையோரும் தப்பினர்.

இதேபோன்று நேற்று முன்தினம் நவீன சந்தைக்கு அருகில் கிரனேட் தாக்குதல் ஒன்று நடந்திருக்கிறது.

இது தவிர,

யாழ்ப்பாணத்துக்கு மீள வந்து குடியேறும் முஸ்லிம்கள் சம்பந்தமான சில விடயங்களைத் தெரிவிக்கும் விதத்தில் — புலிகளின் பெயருடன் — சில சுவரொட்டிகள் நவீன சந்தைக்குள் நேற்று முன்தினம் ஒட்டப் பட்டிருந்தன.

அத்தோடு திணைக்களத் தலைவர்கள், மூத்த அரச அதிகாரிகள், வர்த்தகர்கள் போன்றோருக்கும் கடந்த இரு வாரங்களாக புலிகளின் பெயர்களில் பல கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அறியவருகின்றது.

இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்ற விரும்பாத அரச திணைக்கள அதிகாரி ஒருவர் ''வேலையும் வேண்டாம்; சம்பளமும் வேண்டாம். ஆளை விட்டால் போதும்'' என்று கூறிவிட்டு வேலையைத் துறந்து, தமது ஊரில் உள்ள கோயில், குளத்தை நாடிச் சென்றுவிட்டார்.

குடாநாட்டில் புலிகள் தமது செயற்பாடுகளை மீளவும் தீவிரப்படுத்த முயற்சிப்பது இங்கு தமது கைப்பிடியை இறுக்குவதற்கு அவர்கள் முடிவெடுத்து தயாராகி வருகின்றார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இதற்குப் பதிலாக படைத்தரப்பு ஏதும் நடவடிக்கைகளை எடுக்க உத்தேசிக்கக் கூடும். அப்படி ஏற்படும் போது நிலைமை விபரீதமாகும்.

எனவே யாழ். குடாநாட்டு நிலைமை 'நீறு பூத்த நெருப்புப் போன்றது' என்று சில சாரார் கூறுவது உண்மையாகவே அமைந்துவிடும்.

### புளொட்டும் பிரச்சினைகளும்

புலிகள் உறுப்பினர் அல்லது முன்னாள் புலிகள் உறுப்பினர் ஒருவர் சாவகச்சேரியில் உள்ள புளொட் அலுவலகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கும் நிகழ்வு யாழ். குடாநாட்டின் படை வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்ப

( 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இளஞ்சோடி வான்கோழிகள், மணித்தாரா, கினிச்கோழி, சில்க்கி, பாப்படிக்ன், பன்ரம் கோழிகளும், குஞ்சுகளும், பொமனேரியன் பெண்குட்டி 3 மாதம் நிரம்பியது விற்பனைக்குண்டு. தொடர்பு: விநாயகமூர்த்தி மயூரன், நவாலி, அரசடி மானிப்பாய். [54231]

Reconditioned C70 ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 30,000. தொடர்ப: இ. பேபி சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். [54332]

பிறிமா, கைலைன் பிறவுண் ஒருநாள் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலியில் தொடர்பு கொள்ளவும். [சி/3221]

குளிர்சாதனப் பெட்டி, மேசைகள், கதிரைகள். கவுண்டர் மேசை, கட்டில்கள், கதவுகள், நிலைகள், சீலிங் (F) பான் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். நா. நெல்லைநாதன், 226, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [54278]

### சிங்களம

சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் 28-03-98 இன்று ஆரம்பமாகும். பிரத்தியேக வகுப்புக்களும் ஒழுங்கு செய்யலாம். விவரங்களுக்கு— T. SAGATHEVAN 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (54155)

### தவறிவிட்டது

யோகலிங்கம் கஜேந்திரன் என்பவரின் 0907003490 இலக்கமுடைய விசேட அடையாள அட்டையும், பாடசாலை அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கவி போட்டோ, கே. கே. எஸ். வீதி, இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [50007]

புலோலிதெற்கு சிவசம்பு சுதாகரன் ஆகிய எனது தேசிய (367171116V), விசேட (090804588) அடையாள அட்டைகள், முத்திரைச் சந்திக்கும் புத்தூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஜெயதரன், சாரையடி புலோலி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [54364]

### தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகபார்ப்பதற்குபுதியஅன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுது பார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் (B.Sc.) Ceylon Dip. In Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3068]

### வீடு விற்பனைக்கு

5 பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளையும் கொண்ட வீடு சம்பியன் ஒழுங்கை, கொக்குவிலில் விற்பனைக்குண்டு. (யாழ். பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிக்கு 1/2 மைல் தூரத்தில்) தொடர்பு இல:- 721 C/O உதயன், யாழ்ப்பாணம். (54342)

### திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், சட்டத்தரணி, ஆசிரியர், விரிவுரையாளர், பட்டதாரிகள், வர்த்தகர்கள் உட்பட சகல மதம், சமூகம் உள்நாடு, வெளிநாடு மணமக்கள் தேர்வுக்கு, ''சேவை நம்பகம்'' திருமண சேவை, வைமன் வீதி, நல்லூர். (54300)

### இசைக்கருவிகள்

Yamaha, PSS – 480, SS – 390 ஓகன்களும் மேலும் பல ஆர்மோனியங்களும், கிற்றார்களும் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு: கரவீணா இல: 23 குறோசெற் வீதி, சுண்டிக்குளி (கல்வி வலயம் 1 இன் தற்போதைய காரியாலயத்திற்கு அருகில்). (54142)

### வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் புதிய பிரிவு சனி, ஞாயிறு (28-03-98) இன்று ஆரம்பம். தொடர்பு: R. மருதலிங்கம், 116, பலாலி வீதி, (கராஜ் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (54330)

## வாழ்த்துகின்றோம்

சங்கானை வல்லை வீதியைச் சேர்ந்த சமூகத் தொண்டன்

**திரு. வயித்தி அரசன்**

அவர்கள்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை சங்கானை காளி கோயிலடி அம்பாள் சனசமூக நிலையத்தினரும் ஊர்மக்களும் மனமாரப் பாராட்டுகின்றார்கள்.

நன்றி!

அம்பாள் சனசமூக நிலையத்தினர்,
சங்கானை.

[56355]

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 02 — 03 — 1910

இறப்பு: 08 — 04 — 1997

**பரமு மாணிக்கம்**

திதி: 28 — 03 — 1998

ஆத்மா சாந்தி அடைவதாக!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

82/17 பருத்தித்துறை றோட்,
3-ம் ஒழுங்கை,
ஆரியகுளம். (54271)

## எழுத்தாளர் தேவை

தினசரிப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைத் தொகுத்துக் கவர்ச்சிகரமாக எழுதக்கூடிய ஓர் எழுத்தாளர் தேவை. பகுதி நேரமாகவும் காலை நேரங்களில்வீட்டிலிருந்தே எழுதலாம்.

யாழ். நகரப் பகுதியில் வசிப்பவர்கள், தங்களைப் பற்றிய முழு விவரங்களுடன் **05 - 04 - 1998** க்கு முன்பு விண்ணப்பிக்குக.

**வரதர் வெளியீடு**

226, காங்கேசன்
துறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

[ 54338 ]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி

**விசுவலிங்கம் பவளம்மா**

(மல்லாகம்)

தோற்றம்: **06—10—1920**

மறைவு: **26—02—1998**

திதி: 28 - 03 - 1998

எங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தித்து, தம் வாழ்வினை அர்ப்பணம் செய்த பாசம் மிக்க அம்மாவை இன்று நாம் இழந்து நிற்கின்றோம். அவருடைய ஆத்மா எங்களை வழி நடத்தும். எங்கள் வாழ்வு வளம் பெறக் கண்டு சாந்தி பெறும் என்ற நம்பிக்கையோடு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம் தாயே!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீலியம்பனை,
மல்லாகம். (50006)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 09 — 1919

மறைவு: 12 — 04 — 1993

உயர்திரு.

**கந்தையா தம்பிப்பிள்ளை J. P**

(உரிமையாளர், நியூ லீலாவதி வர்த்தகக் களஞ்சியம், கைதடிச் சந்தி, கைதடி)

**28 - 03 - 1998** சனிக்கிழமை

கருணை, கனிவு, பணிவு கொண்டு எங்களை வழி நடத்திய அன்பின் திருவுருவம், அன்பின் பிறப்பிடம், பொறுமையின் இருப்பிடம் எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் எம் உள்ளங்களில் நிறைந்து இருக்கிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்காத நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி கிழக்கு,
கைதடி. (54335)

## விற்பனைக்கு

டீசல் (ELF) 350 இன்ஜின் முழுமையாகவும், பகுதியாகவும் LD 2 இன்ஜின் ஒன்றும், BMC 22 SRI, 24 SRI இன்ஜின்களும் விற்பனைக்குண்டு. சனிக்கிழமை பார்வையிடலாம்.

அண்ணா
தொழிலகம்,
இணுவில். (54344)

## கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

சகல வசதிகளுடனும் தங்குவதற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

**ஏ. கே. பி. லொட்ஜ்** ( சுலைமான் ஆஸ்பத்திரிக்கு முன்பாக )

என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

T. P. NO:- 075330356
075330354

**A. K. B. LODGE,** 9, GRANDPASS ROAD, COLOMBO - 14

(54223)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க போட்டிப் பரீட்சை நடத்தும் தீர்மானத்துக்கு எதிர்ப்பு

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தீர்மானம்

அம்பாறை, மார்ச் 28

வேலை அற்ற பட்டதாரிகளை உதவி ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கென போட்டிப் பரீட்சை ஒன்றை(எழுத்துப் பரீட்சை) நடத்தவிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் தீர்மானமும், அதற்கான ஏற்பாடுகளும் உடனடியாக வாபஸ் பெறப்பட்டு பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை மூலம் ஆசிரிய நியமனம் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரைக் கோரும் தீர்மானம் ஒன்றை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் மத்திய நிர்வாக சபைக் கூட்டம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

பட்டதாரிகளை நியமனத்திற்கென எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றச் செய்வது உயர் தரக் கல்வியை மலினப்படுத்தும் செயல் என்றும் அக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை மூதூரில் உள்ள பயலுநர் ஆசிரியர்கள் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாகஅறிவித்துள்ளனர். கல்வி அமைச்சின் 96/3 இலக்கச் சுற்றறிக்கையின் படி தொலைக்கல்வி — 2 பரீட்சையில் சித்தியடைந்தோர் அவர்கள் எப்போது நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்தார்களோ அன்றிலிருந்து நிரந்தர ஆசிரியர்களாகக் கணக்கிடப்பட்டு 4 ஆயிரத்து 802 ரூபா சம்பள அடிப்படையில் வகுப்பு 3 தரம் 1 க்குள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

எனினும் மேற்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்தும் இவ்வாசிரியர்களுக்கு குறிப்பிட்ட உரிமைகள் வழங்கப்படவில்லை. எனவே இதை ஆட்சேபித்து தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக மூதூர் பயிலுநர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மகஜர்கள் ''பக்ஸ்'' மூலம் ஜனாதிபதிக்கும் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-ரீ)

# இரவில் வரும் கட்டாக்காலி மாடுகளால் பயிர் அழிவு

சண்டிலிப்பாய், மார்ச் 28

பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதால் இப்பகுதி விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். இரவு வேளைகளில் கூட்டமாக இப்பகுதி வயல் வெளிகளுக்கு வரும் கட்டாக்காலி மாடுகள் பயிர் வகைகளை அழித்து வருகின்றன. இரவில் ஊரடங்குச் சட்டம் இருப்பதால் தங்கள் வயற் காணிகளுக்குச் சென்று கட்டாக்காலி மாடுகளை விரட்ட முடியாது இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-135)

## மண்டபம் திறப்புவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

பண்டாரக் குளம் மருதவளவு ஸ்ரீ பிள்ளையார் கோயில் உள் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத் திறப்புவிழா நாளை ஞாயிறு பிற்பகல் 5 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஐ)

## புகையிலை அறுவடை

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளது. ஒரு புகையிலைக் கன்று 30 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை விற்பனையாகிறது. இம்முறை இப்பிரதேசத்தில் புகையிலைச் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (ஐ-173)

## தேர்தல் குறித்து ஆராய்வு


தெற்கில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்தது.

தென்மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணசபைகளின் ஆயுள்காலம் எதிர்வரும் ஜூன் மாதம் முடிவடைவதால், அதன்பின் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டிய சூழ்நிலை குறித்து நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

தேர்தலுக்கு முன்னோடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய [illegible] பணிகளுக்காக குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன. (இ-2)

---

7 ஆம் வருட நினைவஞ்சலி



அன்னை மடியில்:

**04 – 08 – 1966**

ஆண்டவன் பிடியில்:

**17 – 03 – 1991**

அமரர்

## சிவபுரநாதர் சிவராசா

(சிவன்)

(பாதுகாப்பு ஊழியர், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.)

திதி: 28 - 3 - 1998

ஏழாண்டு முடிந்தாலும் -- உனை
இழந்த ஏக்கம் இன்னும் தீரவில்லை
மீளாத்துயில் ஏன் கொண்டாய்?
மீண்டும் எமைவந்து சேராயோ?
இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு நன்றி!

ஓம் சாந்தி!

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அக்கா, மருமகன்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(54350)

---

# அருள்நெறி விழா - 1998

1997ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட

## சிறந்த இந்துசமய நூல்களுக்குப் பரிசளித்தல்

1997 ஜனவரி 1ஆம் திகதி முதல் 1997 டிசம்பர் 31ஆம் திகதி வரையுள்ள (இரண்டு தினங்களும் உட்பட) காலப்பகுதியில் வெளியிடப்பட்டனவும், இந்துசமயம் பற்றியனவுமான நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுத் தகுதி வாய்ந்த நூல்களின் ஆசிரியர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளையும் அஞ்சல் மூலம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பத்தையும் நூல்களையும் நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.

விண்ணப்பங்களுடன் நூல்களும் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியாகும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

எஸ். தில்லைநடராஜா
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம்.

98, வோட்பிளேஸ்,
கொழும்பு - 07.

## அருள்நெறி விழா - 1998

இந்துசமய நூற்பரிசுத் தேர்வு (1997)

மாதிரி விண்ணப்பப்படிவம்

01. நூலின் பெயர்:-
02. நூலாசிரியரின் பெயர்:-
03. தற்போதைய முகவரி:
04. நிரந்தர முகவரி:-
05. நூல் பதிப்பிக்கப்பட்ட நாடும் அச்சக முகவரியும்:-
06. நூல் வெளியிட்ட வருடம்:- மாதம்:- திகதி:-
07. நூலின் விலை:-

இந்நூல் முதற்பதிப்பு என்பதனையும் இந்நூலின் பகுதிகள் ஏற்கனவே வேறு நூல்களில் இடம்பெறவில்லை என்பதனையும், நூல் முழுமையும் தனி ஒருவராகிய என்னால் எழுதப்பட்டது என்பதனையும் தெரிவிப்பதுடன்,

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவையென்றும் போட்டி விதிகளுக்கு உடன்படுகின்றேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

........ ....................
விண்ணப்பதாரர் கையொப்பம்

திகதி: ....................

(சி-3207)

---

# வாழ்த்துகின்றோம்

## திரு. A. K. நடராசா

(B. A., L. L. B.)

வதிரியைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி அவர்கள்
சமாதான நீதிவானாகவும்,
உத்தியோகப் பற்றற்ற நீதிவானாகவும்
(J. P. U. M.)
நியமனம் பெற்றதையிட்டு மன மகிழ்ச்சியடைந்து அவரை வாழ்த்துகின்றோம்.

ஐ. கணேசு குடும்பத்தினர்,
ப. ஈஸ்வரநாதன் குடும்பத்தினர்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(54366)

---

# வாழ்க! வளர்க! ஓங்குக!

சமாதான நீதிவானாகவும்
உத்தியோகப்பற்றற்ற நீதிவானாகவும்
1998 - 03 - 19 அன்று சத்தியப்பிரமாணம்
செய்து பதவியேற்றுள்ள சட்டத்தரணி

## திரு. அ. க. நடராசா

அவர்களை நலமுற்று இதம்பெற
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

ஏ. சோமசுந்தரம் (தலைவர்)
நலன்புரிச்சங்கம்

அதிபர்: திருமதி ச. சுந்தரலிங்கம்
ஆசிரியர்: க. நவரத்தினம்
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

[ 54367 ]

---

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வி

## திவ்யா மணிவண்ணன்

28–03–1998

தெ. மணிவண்ணன் அனுஷியா தம்பதிகளின்
செல்வப் புதல்வி திவ்யா

இன்று தனது முதலாவது பிறந்தநாளை நோர்வேயில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டன், பூட்டி, மதிச்சித்தப்பா, குமு தம்சித்தி, முரளிச்சித்தப்பா, அருண்சித்தப்பா, சங்கர் மாமா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

— தெய்வேந்திரராஜா சிவராஜ்

திருநெல்வேலி.

(சி/3220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

### அனுமதி தர வாருமையா!

புள்ளிருக்கும் வேளூர்ப் பதியானை உள்ளுருவாய்
வள்ளல் வைத்திலிங்கச் செட்டியாரமைத்த எங்கள்
வண்ணை வைத்தீசா தையலுமை பாகா
கண்ணைத் திறவாயோ கவலைகளைத் தீர்க்க!

பாட்டின் பொருளானாய் பாதி வடிவானாய்
கேட்கும் இடங்களெல்லாம் கீத ஒலியானாய்
மாட்டில் வலம் வருவாய் மாவண்ணை வைத்தீசா
நாட்டில் அமைதியினை நல்கிடவே வாருமையா!

- அன்னைதாசன்

(இன்று சனிக்கிழமை — ஆறாம் திருவிழா)

## அசாதாரண வளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டவர் விடுவிப்பு

விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களை பாதுகாப்புத் துறையினருக்கு மறைத்த குற்றத்துக்காக 6 மாத கால கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார்.

எஸ். கிருபாகரன் என்ற சுமார் எட்டரை அடி உயரம் உள்ள இந்தக் குற்றவாளி தாம் அசாதாரணமான வளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் — தமது உயிரைப்பாதுகாக்க சென்னை சென்று அங்குள்ள அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டி இருப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நீதியரசர் ரைட்டஸ் பி. சூரே எதிரியின் வேண்டுகோளை ஏற்று அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை அவர் விளக்க மறியலில் இருந்த காலத்துடன் கழித்து அவரை விடுதலை செய்தார். (இ-10)

### அகவை அறுபதை எய்தும்

இளவாலையூர்

சைவப்புலவர்- சுப்பிரமணியம் செல்லத்துரை

அவர்கள்

சைவமுந் தமிழும் தன்னிரு கண்ணென
சைவமாப் புலவன் தவமெனக் கொண்டவன்
சைவமுந் தமிழும் தரணியில் நிலைத்திட
சைவமாய்த் தமிழாய் வாழிய பல்லாண்டு!

—ஏழூர்

(54376)

### கண்ணீர்க் காணிக்கை

பண்ணாகம்

வெற்றிவேலு சின்னையாவின்

பேரன்

**கனகநாயகம் திருக்குமரன்**

(பாபு)

பார் புகழ வாழ வந்த எங்கள் பாபு! எங்கே நீ போய் விட்டாய்? துயரச் செய்தி இதை நாம் கேட்டுத் துடித்தோம், துவண்டோம், ஆற்றாமலே இம் மண்ணில் அழுது புரண்டோம். சுயநலம் தேட இது சுவையான செய்தியல்ல. வியாபாரம் பெருக்க இது விளம்பரச் செய்தியுமில்லை. இதயம் வெடிக்கும் பூகம்பச் செய்தியடா! உன் சித்தப்பா நானே மெத்தப் பதைக்கின்றேன். உன் அப்பா அங்கே என்னப்பா செய்வார்? ஆற்றாமல் அழும் அவரைத்தேற்றுவார் யாருமுண்டோ? மீண்டும் அவர் வாழ்வில் நீ வந்து சேர்ந்திடப்பா!

உன் பிரிவால் துயரடையும்
சித்தப்பா
சின்னையா தயாபரசிவம்.

பண்ணாகம் (54375)

### கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தில் முன்னாள் பணியாளராக இருந்து பின்னர் செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து கல்விப்புலத்தை அலங்கரித்துவந்த

**அமரர் நடராசா அம்பிகைபாகன்**

அவர்களின் திடீர் மறைவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி நிற்கின்றது. அன்னாருக்கு எமது கண்ணீர்த் துளிகள் காணிக்கையாகின்றன.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

தலைவர், நெறியாளர்கள்,
பொதுமுகாமையாளர்,
பணியாளர்கள்.

**வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்**

தலைமைக்காரியாலயம்,
மருதங்கேணி. [சி/3227]

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

சங்கானை வல்லை வீதியைச் சேர்ந்த க. வ. அரசன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை முன்னிட்டு சங்கானை ஸ்ரீ பாரதி சனசமூக நிலையமும், நலன்புரி சிக்கன கூட்டுறவுச் சங்கமும் நூல்நிலைய அங்கத்தவர்களும் இணைந்து நடத்தும் பாராட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

## கந்தபுராண படனம்

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் கந்தபுராண படனம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அடுத்த மாதம் 10 ஆம் திகதி கந்தபுராணபடன பூர்த்தி இடம்பெறும். மறுநாள் 11 ஆம் திகதி அன்னதானமும் நடைபெறும். (ஐ-173)

## புலிகளின் ஏவு..

(மூன்றாம் பக்கத் தொடர்)

தாகத் தெரியவருகின்றது.

சாவகச்சேரியில் புலிகளின் 'நோட்டீஸ்' வைத்திருந்த ஒருவர் வழியில் படையினரிடம் பிடிபட்டதாகவும்—

அவருக்கு அந்த 'நோட்டீசை'க் கொடுத்ததாகக் கூறப்படும் மற்றொருவரை படையினர் கைது செய்ததாகவும்—

அந்த மற்றொரு நபர் கொடுத்த தகவலின் பேரிலேயே புளொட் அலுவலகத்தில் இருந்த ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும்—

அங்கிருந்து புலிகளினுடையது என்று சந்தேகிக்கப்படும் இரு கிரனேட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும்—

படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நபர் புலிகள் இயக்கத்தில் முன்னர் இருந்தவர் என்பதை ஒப்புக்கொண்டுள்ள புளொட் வட்டாரங்கள் அவர் தாம் விரும்பிய இடத்துக்குச் சென்று புனர்வாழ்வு பெறுவதற்குவசதியாகவே அவருக்குத் தாங்கள் புகலிடம் கொடுத்து வைத்திருந்ததாகவும் தெரிவித்துள்ளன.

பாதுகாப்புக் கருதி எம்மிடம் சரணடைந்த எவரையும் அரச படையினரிடம் கையளிப்பது என்பது எமது கழகத்தில் எப்போதும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்த புளொட் உப தலைவர், மாணிக்கதாஸன்—

இவ்வாறு சரணடைவோர் அவர்களது விருப்பத்துக்கு ஏற்ப பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும் வரை அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து உதவுவது, அவர்கள் எமது உறவு இரத்தம் என்ற வகையில் எமது கடமையுமாகும் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

இந்த அறிவிப்பு புளொட் குறித்து படைத்தரப்பைச் சீற்றமும் சந்தேகமும் கொள்ள வைத்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

குடாநாட்டில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு திரை மறைவில் 'புளொட்டினால் ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றதா? என்ற சந்தேகம் சில படை உயரதிகாரிகள் மத்தியில் நிலவுவதையும் உணர முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவருக்கு பாதுகாப்பும், தஞ்சமும் கொடுத்ததற்காக படையினருக்கு புளொட் மீது கோபம்.

திருகோணமலையில் பொது மக்களில் ஒருவரை (ஓட்டோச் சாரதி ஒருவர்) தடுத்து வைத்ததற்காக பொது மக்களுக்கு புளொட் மீது கோபம்.

இரு இடங்களிலும் எதி[illegible] கள் புளொட்டுக்கு!

★

## அதிரடி அரங்கு

பிரதேசக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் கைமாறும் போது சமூகக் கட்டுப்பாட்டு வரைமுறைகளும் மாறிப் போகின்றன.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் குடாநாட்டில் இருந்த பல கட்டுப்பாடுகள், விதிகள் தளர்ந்து போனதால், மிகப்பெரும் சீரழிவை நோக்கி எமது சமூகம் இன்று வீழ்ந்து கொண்டிருப்பதாகப் பலரும் கருதுகின்றனர்.

கட்டுப்பாடுகளின் தளர்வும் கண்காணிப்பின்மையும் எமது இளம் சமூகத்தைப் படுகுழியில் வீழ்த்திவிடுமோ என்ற அச்சம் பரவுவது நியாயமானதே!

மினி சினிமாக்களில் காட்டப்படும் சில படங்கள், விற்பனைக்கு வரும் சில சஞ்சிகைகள், பரவி வரும் கசிப்பு சாம்ராஜ்யம், அடுத்தவர் பொருளைச் சூறையாடும் சிறிய சிறிய களவுகள், கொள்ளை, பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் போன்றவை இந்த அச்சத்தைத்தான் ஏற்படுத்துகின்றன.

அந்த வரிசையில் இத்தகவலும் ஒன்று. குறிப்பாக உயர்வகுப்பு மாணவர்களின் பெற்றோருக்கு இதைச் சமர்ப்பிக்கின்றோம்.

கடந்தகால பொருளாதார நெருக்கடிகள், தடைகள், விலைவாசி உயர்வு, உழைப்பின்மை போன்றவை காரணமாக எமது சமூகத்தில் பல குடும்பங்களுக்கு சிகரெட் எட்டாத பொருளாகி சிகரெட்டுக்கு அடிமையானோர் எண்ணிக்கை மிக மோசமாக வீழ்ச்சியடைந்த ஒரு கட்டம் இருந்தது.

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. சிகரெட் தாராளம். உயர் வகுப்புமாணவர்களின் கைகளில் பணப்புழக்கமும் தாராளம்.

'டே கிளாஸ்', 'வீக்எண்ட் கிளாஸ்' என்று நகரத்துக்கு வரும் உயர்வகுப்பு மாணவர்கள் கிடைக்கும் இடைநேரத்தில் அருகில் இருக்கும் கடைகளில் கூட்டம் கூட்டமாக ஒன்றுசேர்ந்துபுகைத்துத்தள்ளுவதை பல இடங்களிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்று பகிடிக்கு — பொழுதுபோக்குக்கு — நடக்கும் இக்காரியம் நாளைக்கு உங்கள் பிள்ளையை நிரந்தர அடிமையாக்கி விடலாம். எனவே உங்கள் பிள்ளைகளை ரியூஷனுக்கு விடுவதோடு ஒதுங்கி விடாதீர்கள்! கண்காணிப்பு அவசியம். உங்கள் அசிரத்தை, பின்னாளில் உங்கள் சந்ததிக்கே வினையாகி விடலாம்.

★ ★ ★ ★

குடாநாட்டில் கட்டுப்பாடு தளர்ந்ததால் எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கின்ற விவகாரங்களில் தனியார் ரியூட்டறிகள் சிலவும் உள்ளன. ரியூட்டறிப் போட்டிகளும் வேறு.

நகரில் உள்ள தனியார் ரியூட்டறி ஒன்றின் பொறுப்பாளர் ஒரு பெண்மணி. அவரின் படிப்பித்தல் முறை சரியில்லை என்று விமர்சித்திருக்கின்றார் நகர்ப் புறத்தை அண்டிய பாடசாலை ஒன்றில் போதிக்கும் மற்றொரு ஆசிரியை.

பாடசாலை வகுப்பில் நடந்த விமர்சனத்தை யாரோ ஒரு மாணவி ரியூட்டறிக்கு வந்து அவிழ்த்து விட்டார்; அவ்வளவுதான். ரியூட்டறிக்குப் பொறுப்பான பெண்மணிக்கு வந்ததே கோபம். பாடசாலைக்கு விரைந்தார் — சம்பந்தப்பட்ட ஆசிரியையோடு நேரடியாகப் பாய்வதற்கு. நல்ல காலம்அதிபர் அதற்கு அனுமதிக்கவில்லை. முழு ஏச்சையும் தாமே வாங்கிக் கட்டிக் கொண்டு, சம்பந்தப்பட்ட பெண்மணியைச் சமாளித்து அனுப்பிவிட்டார்.

இதிலிருந்து பாடசாலைஆசிரியர்களுக்குக்கிடைக்கும் பாடம் அல்லது நீதி என்ன தெரியுமா?

''ரியூட்டறிகளை விமர்சித்து வாங்கிக் கட்டிக் கொள்ளாதீர்கள்!'' — என்பதுதான்.

★ ★ ★ ★

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடல் மார்க்கமாக வரும் பொருள்களில் பல மாயமாக மறைவதாகத் தெரிய வருகிறது.

பல தடவைகளில் வேலியே பயிரை மேய்ந்ததும் உண்டாம். யாழ்ப்பாணத்திலிருந்து 100கிலோ இறால் 'பைக்கெற்' செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கப்பலில் ஏற்றப்பட்டது. கொழும்பு துறைமுகத்தில் இறால் பைக்கெற்றை இறக்கிய போது 75 கிலோ இறால் இல்லை. 25 கிலோ மட்டுமே எஞ்சியிருந்தது.

இதேபோல யு. என். எச். ஸி. ஆரினால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட மீன்பிடி வலைகள் இடைவழியில் சுவீகரிக்கப்பட்டதாகத் தகவல். பருத்தித்துறையில் வலைகளைப் பொறுப்பேற்ற போது ஒரு தொகுதி வலைகளைக் காணவில்லையாம். சிலநாள்களின் பின்னர் அதே வலைகள் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொன்றும் 900 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் கொழும்பில் அதே ரக வலை ஒன்றின் விலை ஆயிரம் ரூபா. யாழ்ப்பாணத்தில் நூறு ரூபா எப்படிக் குறைந்தது? சும்மா வந்தது தானே; விலை தெரியாமல் ஒரு குத்துமதிப்பில் விற்கப்பட்டதாகத் தகவல்!

★ ★ ★ ★

கொழும்பில் ஒரு போத்தல் பியரின் விலை 48 ரூபா; யாழ்ப்பாணத்தில் 110 ரூபா. போக்குவரத்துக் கட்டணத்துக்காக 62 ரூபா கூட்டி விற்கப்படுகிறதா? கப்பலில் கொண்டு வந்து சேர்க்கும் போது அரைவாசிப் போத்தல்கள் குறைவதால் அதனை ஈடு செய்வதற்காகவே இந்த விலை அதிகரிப்பு என்று விசாரித்ததில் தெரியவந்தது.

இப்படித்தான் எல்லாப் பொருள்களுக்கும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறதோ......?

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாண முதல்வர் பதவிக்கு சுனேத்திரா பண்டாரநாயக்கா?

கொழும்பு, மார்ச் 28

மேல்மாகாண சபைக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக ஜனாதிபதியின் சகோதரி சுனேத்திரா பண்டாரநாயக்கா நிறுத்தப்படலாம் என பண்டாரநாயக்கா குடும்பத் தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பு வார இதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பண்டாரநாயக்கா குடும்பத்தில் நீண்டகாலமாக அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கும் ஒரே உறுப்பினராக சுனேத்திரா பண்டாரநாயக்கா இருந்து வருகிறார்.

சந்திரிகா ஜனாதிபதியாக பதவிக்கு வந்த வேளையில் சகோதரிகள் இருவருக்கிடையே ஒற்றுமை நிலவவில்லை எனவும் —

ஆனால் தற்போது இருவருக்குமிடையே நல்லுறவு நிலவுவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## கொழும்பில் முதல் ஆட்டம்;
# சிறப்பாக விளையாடிய யாழ். மகளிர் அணி!

கொழும்பு சென்றுள்ள யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட தெரிவுக்குழுவுக்கும், ஸ்ரீலங்கா தேசிய மட்டத் தெரிவுக்குழு ஒன்றுக்கும் இடையில் நேற்று கொழும்பில் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் தேசிய மட்டத் தெரிவுக்குழு அணி 31 — 22 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

யாழ். மகளிர் அணி தோல்வியடைந்த போதிலும் சிறப்பாக விளையாடியதாக அணிக்குப் பொறுப்பான அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.

இடைவேளைக்கு முன்னர் புள்ளி நிலைமை 18—9 என்ற கணக்கில் இருந்தது. இடைவேளைக்குப் பின்னர் இரு அணிகளும் தலா 13 புள்ளிகளைப் பெற்றன.

யாழ். தெரிவு அணி இன்று பிற்பகல் 3 மணிக்கு இளைஞர் சேவை மன்ற அணியுடன் மகரகம விளையாட்டரங்கில் மோதவிருக்கிறது.

நேற்று முன்தினம் கொழும்பைச் சென்றடைந்த யாழ். அணியினருக்கு அன்றிரவு விளையாட்டு அமைச்சில் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது.

விளையாட்டு உபகரணங்கள் இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவால் அங்கு வைத்து வழங்கப்பட்டன. (உ-3)

## விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொக்குவில் மேற்கு சி.சி. த. க. பாடசாலையும், கொக்குவில் ஸ்தான சி. சி, த. க. பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ. அருளானந்தம் பிரதம விருந்தினராகவும், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர். (உ-3)

## கோப்பாய் கல்லூரியில்
# கட்டட இடிபாடுகள் நேற்று அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 28

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நீண்டகாலமாக அகற்றப்படாமலிருந்த கட்டட இடிபாடுகள் நேற்றுசிரமதானம் மூலம் அகற்றப்பட்டன.

இந்தியப்படை நிலைகொண்டிருந்த சமயம் சேதமாக்கப்பட்ட கல்லூரியின் கட்டட இடிபாடுகள் அகற்றப்படாததால் கல்லூரியின் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வியை தற்காலிக கொட்டகையில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த நிலைமை குறித்து கல்லூரி அதிபர், ஆசிரியர்களுடன் உரையாடிய ஈ.பி.டி.பி. அமைப்பினர் அதைத் தொடர்ந்து 511ஆவது படையணியின் தளபதியான பிரிகேடியர் ஜி.எம். றொச்வூட்டுடன் தொடர்பு கொண்டனர், அவரின் உதவியுடன் புல்டோஸர் ஒன்றை பெற்று அதனைப் பயன்படுத்தி சிரமதானத்துடன் அந்த கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டன. இந்தக் கல்லூரிக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு கம்பியூட்டர் தொகுதியை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்தார். (உ-3)

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், மார்ச் 28

பழைமைவாய்ந்த நவாலி களையோடை அம்மன் ஆலயம் நவாலி வடக்கு இளைஞர்களால் சிரமதானம் மூலம் புனரமைக்கும் பணி இன்றும், நாளையும் நடைபெறவிருக்கிறது. (உ-185)

★ ★ ★

யாழ். முருகமூர்த்தி வீதி ஞானக்குழந்தை இல்ல மாணவர்களின் பேச்சுத் திறன் காணும் வைபவம் இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

வலி-வடக்கு பிரதேசசபையின் முதலாவது கூட்டம் இன்று தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் வலி-வடக்கு மல்லாகம் உப பணிமனையில் நடைபெறவுள்ளது. உறுப்பினர் பதவியேற்றம் இன்று இடம்பெறும். (உ-86)

★ ★ ★

கைதடி நவீல்ட் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற கந்தசாமி கோபாலகிருஷ்ணனின் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய மண்டபத்தில் தென்மராட்சி பிரதிக்கல்விப்பணிப்பாளர் நா. சத்தியநாதன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பூ. சுந்தரம்பிள்ளை கலந்துகொள்கின்றார். ஆசியுரைகள், பாராட்டுரைகள், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

சிறப்பு நிகழ்வாக டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன் குழுவினரின் பட்டிமன்றமும் இடம்பெறும். (ஐ-5)

★ ★ ★

தந்தை செல்வா நூற்றாண்டு விழா தொடர் பொதுக்கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2.00மணிக்கு மானிப்பாய் கட்டுடை சைவ வித்தியாசாலையில் நடைபெறும்.

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சபைத்தலைவர் வ. பொ. க. மா. முதலியார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி புலவர் எம். திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார்.

இசைநாடக வித்தகர், நாடகச்சக்கரவர்த்தி வி. என். செல்வராசாவைப் பாராட்டும் நிகழ்வும் இக்கூட்டத்துடன் இடம்பெறும். (உ-3-4)

# சந்தேகநபர் கைது!

பதுளை நகரில் கடையொன்றில் பணியாற்றிய உடுப்பிட்டி வாசியொருவர் நேற்று பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நடராசா ரமேஸ்காந்தா என்ற மேற்படி இளைஞருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாக பொலீஸ் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

# ஒடியல், புளுக்கொடியல் என்பன கிலோ 30 ரூபாவுக்கு கொள்வனவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

புளுக்கொடியல், ஒடியல் ஆகியவற்றை உற்பத்தி செய்வோரின் நலன்களைப் பேணும் பொருட்டு பனை அபிவிருத்திச் சபை அவற்றைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது.

வெளிமாவட்டங்களில் ஒடியல், புளுக்கொடியல் என்பவற்றிற்கு அதிகளவில் வரவேற்புக் கிடைக்கின்றது. இதனால் இங்கு அவற்றைக் கொள்வனவு செய்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கும் பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

உள்நாட்டில் இவற்றை உற்பத்தி செய்பவர்களது வருமானம் பாதிக்காத வகையில் இவற்றை ஒரு கிலோ 30 ரூபா வீதம் கொள்வனவு செய்யவும் பனைஅபிவிருத்தி சபை முடிவு செய்துள்ளது.

இவற்றை விற்பனை செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள் பனை அபிவிருத்திச் சபையுடன் அல்லது கற்பகம் விற்பனை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றை விற்பனை செய்ய முடியும் என்று பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-9)

# களப்பலி

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது கப்டன் முல்லை (தம்பிராசா றஜனி —வட்டக்கச்சி) களப்பலியானதாக 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

அதே தினம் ஒலுமடு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் முரசன் (திருஞானபிள்ளை குமார்—மட்டக்களப்பு) களப்பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ரூ. 1 கோடி நஷ்டஈடு கோரி
# தாதியர் சங்க தலைவருக்கு அமைச்சர் நோட்டீஸ்!

கொழும்பு, மார்ச் 28

அரசாங்க தாதியர் சங்கத் தலைவர் வண. முரத்தெட்டுவே ஆனந்த தேரரிடம் ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கோரி சுகாதார, சுதேச வைத்திய சேவைப் பணிப்பாளர் தூலாந்தன பெரேரா தமது சட்டத்தரணி மூலம் நோட்டீஸ்அனுப்பியுள்ளார்.

காரணம் எதுவும் கூறாமல் தாம் வகித்த பதவியில் இருந்து தம்மை நீக்க வேண்டும் என்று கோரியதன் மூலம் தமக்கு அகௌரவத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவித்தே அவர் இந்த நோட்டீஸை அனுப்பியுள்ளார்.

நோட்டீஸ் கிடைத்து 14 நாள்களுக்குள் ஒருகோடியை வழங்கவேண்டும் என்றும் —

அவ்வாறு செய்யாத பட்சத்தில் தாம் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் —

அவர் தெரிவித்துள்ளார். (உ-10-3)


JAFFNA DISTRICT A.A.A.

## யாழ்ப்பாண மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைசங்கம்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 19-04-1998 அன்று நடைபெறவிருக்கின்றது. எனவே இது பற்றிய தகவல்களை சம்பந்தப்பட்ட கழகப் பிரதிநிதிகளுக்கு அறிவிப்பதற்காக எமது சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள பின்வரும் கழகங்கள் தமது தலைவர், செயலாளர் மற்றும் தமது கழகத்தின் சார்பில் எமது சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றும் இரு பிரதிநிதிகள் ஆகியோரின் பெயர், விலாசம் மற்றும் விவரங்களை செயலாளருக்கு உடன் எழுத்து மூலம் தெரியப்படுத்தும்படி வேண்டுகின்றோம்.

அங்கத்துவக் கழகங்கள்

01. ஜொனியன்ஸ் வி. க., யாழ்ப்பாணம்.
02. கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி. க., கொக்குவில்.
03. உதயன் வி. க., யாழ்ப்பாணம்.
04. ஐங்கிய வி. க., தொண்டமானாறு.
05. அராலி ஐக்கிய வி. க., அராலி.
06. யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறை.
07. அத்துளு அம்பாள் வி. க., கரவெட்டி.
08. காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை உத்தியோகத்தர் கழகம், காங்கேசன்துறை,
09. ஜொலி ஸ்ரார்ஸ் வி. க., யாழ்ப்பாணம்.
10. யுத் கார்மல் வி. க., யாழ்ப்பாணம்.
11. திருநெல்வேலி கலாமன்றம் வி. க., திருநெல்வேலி.
12. அரியாலை ஐக்கிய வி. க., அரியாலை.
13. குருநகர் பாடும்மீன் வி. க., குருநகர்.
14. றிம்மர்ஸ் வி. க., யாழ்ப்பாணம்.
15. வல்வை வி. க., வல்வெட்டிதுறை.
16. ஐக்கிய வி. க., பருத்தித்துறை.
17. மாவத்தை வி. க., அராலி.
18. யங்றோயல் வி. க., காங்கேசன்துறை.
19. மின்னொளி வி. க., கைதடி.
20. பலாலி ஆசிரிய கலாசாலை வி. க., திருநெல்வேலி.
21. கிறாஸ்கொப்பர்ஸ் வி. க., தெல்லிப்பழை.
22. சென். அந்தனீஸ் வி. க., பாஷையூர்.
23. சோலையன் வி. க., காரைநகர்.
24. சென்றலைட்ஸ் வி. க., யாழ்ப்பாணம்.
25. நெல்லியடி சனசமூக நிலைய வி. க., நெல்லியடி.
26. காங்கேசன்துறை ஐக்கிய வி. க., காங்கேசன்துறை.

செயலாளர்,
யாழ். மாவட்ட அமெச்சூர்
மெய்வன்மைச் சங்கம்.

12, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி/3239)

## மரண அறிவித்தல்

### கணேசன் முகுந்தன்

மீசாலை கிழக்கைச் சேர்ந்த க. முகுந்தன் 27-3-98 இல் அகாலமரணமானார்.

இவர் சி. கணேசன் (இளைப்பாறிய பிரதம லிகிதர்), க. சிவபாக்கியம தம்பதிகளின் அன்பு மகனும், இராசேஸ்வரியின் பெறாமகனும், திரிபுரசுந்தரியின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28-03-98) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்;
மீசாலை கிழக்கு, .சி கணேசன்
மீசாலை. (சி/3238) (தந்தை)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**நாயாறில்...**
(முதலாம் பக்கத் தொடர்)
முகம் ஆகியோர் காயமடைந்தனர் இவர்களில் இன்பம் அபாயகர நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

**படையினரின்...**
(முதலாம் பக்கத் தொடர்)
போடப்படுகின்றன.

இந்த தடைகள், கெடுபிடிகள் காரணமாகமக்கள் மனம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. மக்களின் மனதை வெற்றி கொள்ளத்தக்க வகையில் படையினர் செயற்பட்டால் தான் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை நடத்த முடியும்.

காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பகுதியில் பொது மக்கள் போக்குவரத்துக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதி போன்ற வசதி சகல சோதனை நிலையங்களிலும் ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் நேரடியாகவே வாகனங்கள், சைக்கிள்களில் செல்லக் கூடியதாக இருக்கும்.

நோயாளர்கள், வயோதிபர்கள் சோதனை நிலையங்களில் இறங்காமல் வாகனங்களிலே செல்ல வசதி செய்ய வேண்டும் — இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

**வவுனியா...**
(முதலாம் பக்கத் தொடர்)
முகநாதன் அங்கு விடுத்த கோரிக்கையை அடுத்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

''அகதிகளின் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பாகப் பல போராட்டங்களை எமது அமைப்பு நடத்தியுள்ளது. ஆனால் பயன் ஏதும் ஏற்படவில்லை.

''திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் தங்கியுள்ள அகதிகளின் போக்குவரத்துப் பிரச்சினை குறித்து கூட்டாக பெரிய அளவில் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்வோம்'' என்று அவர் அங்கு பேசுகையில் தெரிவித்தார்.

உண்ணாவிரத முடிவில் உண்ணாவிரதப் போராட்ட அமைப்பாளர்கள், செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளைத் தலைவர் சிவநாதன் கிஷோர், வவுனியா அரச அதிபர் ஆகியோருக்கு மகஜர்களைக் கையளித்தனர். (உ-164-3)

# வடக்கு ரயில் பயணிகளிடம் ரூ.5 லட்சம் வரை கொள்ளை

## தாக்குதலுக்கு இலக்காகி தமிழர் ஒருவர் பலி

கொழும்பு, மார்ச் 28

கொழும்புக்கும் வவுனியாவுக்குமிடையே சேவையில் ஈடுபட்டுள்ள இரவுத் தபால் ரயில்களில் பயணம் செய்த பயணிகளிடமிருந்து சுமார் 5 லட்ச ரூபா பெறுமதியான பணமும் நகைகளும் கடந்த வாரத்தில் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி, அடையாள அட்டையைக் காண்பித்து, பிரயாணிகளை விசாரிக்கப்போவதாகக் கூறி அவர்களை ரயிலில் இருந்து இறக்கிய பின்னர் அவர்களிடம் இருந்து பணமும் நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16 ஆம் திகதி நடேசலிங்கம் என்ற பயணி கொள்ளையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். அவரிடமிருந்த 40 ஆயிரம் ரூபா பணமும் ஒன்பதரைப் பவுண் நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன. கடுமையாகத் தாக்கப்பட்ட அந்தப் பயணி அனுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானார்.

பாதுகாப்புப் படைகளில் இருந்து தப்பி ஓடியவர்களே இந்தக் கொள்ளைகளை மேற்கொண்டு வருகின்றனர் என சந்தேகிப்பதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும் கொள்ளையர்கள் ரயில்வே பகுதி பாதுகாப்பு ஊழியர்களின் அனுசரணையுடன்தான் இந்தக் கொள்ளைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என வடபகுதி ரயில் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 16, 18, 20, 23ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைகளில் வடபகுதிப் பயணிகள் 5 லட்சம் ரூபா பெறுமதியான பணத்தையும் நகைகளையும் பறிகொடுத்துள்ளனர்.

பல காலமாக ரயில்களில் இவ்வாறான கொள்ளைகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் ரயில்வேப் பாதுகாப்புப் பிரிவினர் மௌனமாக இருப்பது குறித்து வடபகுதிப் பயணிகள் அதிருப்தி அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

**நிந்தவூரில்...**
(முதலாம் பக்கத் தொடர்)
தலை நடத்தியது.

காயமுற்ற நான்கு முஸ்லிம்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருந்தது. முதலில் நிந்தவூர் மாவட்ட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர்கள், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

புலிகளே வயல் வழியாக வந்து நிந்தவூர் பிரதான வீதியில் ஏறி இத்தாக்குதலை நடத்தியதாகக் கூறப்பட்டது.

இத்தாக்குதல் இடம்பெறுவதற்கு சற்று முன்னர்தான் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் கல்முனையிலிருந்து ஒலுவிலில் நடைபெறும் ஒரு பிரசாரக் கூட்டத்துக்காக வாகன அணியாக இந்த வீதி வழியே சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-14-21)

# புனர்வாழ்வு சபையின் தலைவர் வடக்கில்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்டத்தில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேற்று யாழ். வந்த வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவரும் அத்தியாவசிய சேவைகள் நாயகமுமான எம். எம். ஒபடகே திணைக்கள, படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

மீள்குடியமர்வு அதிகார சபை உதவிப் பொது முகாமையாளர் பெரேரா, பொது முகாமையாளர் எஸ். வாமதேவா ஆகியோர் சகிதம் நேற்று பலாலி வந்த அவர், வடமாகாணப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் யாழ். நிலைமை குறித்து ஆராய்ந்தார்.

அதன் பின்னர் யாழ். செயலகத்துக்குச் சென்ற அவர், அங்கு வைத்து திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடி இங்குள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இக்குழுவினர் இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் ஆகியவற்றுக்கு செல்வர்.

தெல்லிப்பழையில் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர் யாழ். பல்கலைக்கழகம், யாழ். ஆஸ்பத்திரி, தொலைத் தொடர்பு நிலையம், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் தலைமையகம் ஆகியவற்றுக்கும் அவர்கள் செல்வர். (உ-3-139)

**உணவையும்...**
(முதலாம் பக்கத் தொடர்)
நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது.

தொடரும் இராணுவ நடவடிக்கை, வேலைவாய்ப்பின்மை, பொருளாதாரத் தடை என்பவற்றால் வன்னி மாவட்டங்களில் வாழும் மக்களில் 80 சத வீதத்தினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகிறார்கள்.

இங்கு பிறக்கும் பிள்ளைகளில் 60 சத வீதத்தினர் நிறை குறைவாகப் பிறக்கின்றனர். இதனால் ஆரோக்கியமற்ற சமூகம் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இம் மாவட்டங்களில் இடம் பெயர்ந்துள்ள 4 லட்சம் மக்களில் அரைவாசித் தொகையினருக்கு உலர் உணவு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதி மறுத்துள்ளது. இதனால் அவர்கள் பட்டினிச்சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

வேலை வாய்ப்பின்மையும், போக்குவரத்துப் பிரச்சினையும் மக்களைப் பெரிதும் துன்பத்துக்குள்ளாக்கி உள்ளன. ஸ்ரீலங்கா அரசின் மருந்துத் தடையால் மலேரியா, செப்ரிசீமியா, தைபோயிட் என பல நோய்கள் அபாயகரமான விதத்தில் பரவி வருகின்றன.

இதற்கான மருந்துகளோ, நோய்களைக் கண்டு பிடிப்பதற்கான ஆய்வுகூட வசதிகளோ மிகவும் பற்றாக்குறையாக உள்ளன. இங்குள்ள வைத்தியசாலைகளும் ஏராளமான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய நிலையில் இல்லை.

போசாக்கின்மை தலைவிரித்தாடுகிறது. பாடசாலைகள் பெரும்பாலும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவற்றுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கல்வி நிலை சீரழிந்து வருகிறது.

வன்னி வாழ் மக்களின் வாழ்வியக்கத்தை சிதைப்பதை அடிப்படையாகக் கொண்ட ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை காரணமாக ஏராளமான மக்களின் வாழ்விடங்கள் சிதைக்கப்பட்டும், பலர் கொல்லப்பட்டும், காயம் அடைந்தும், ஏனையோர் அகதி முகாம்களில் அகதிகளாக்கப்பட்டும் உள்ளனர்.

இவ்வாறான ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட இராணுவ பொருளாதார, சமூக அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு இனப்படுகொலையை எதிர்நோக்கியுள்ள வன்னி வாழ் மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்— இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும், ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

## அரும்பொருள் கண்காட்சி

கலைஞானி அரும்பொருள் பணிமனை அரும்பொருள்கள், ஓவியங்கள் கொண்ட கண்காட்சியொன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் பத்துத் தினங்களுக்கு இக்கண்காட்சி நடைபெறும். பாடசாலை மாணவருக்குப் பயன்படும் பல்வேறு விடயங்களும் இக் கண்காட்சியில் உள்ளடக்கப்படும் என ''கலைஞானி'' செல்வரத்தினம் தெரிவித்தார்.

இலங்கையிலும் இந்தியாவிலும் தனியாள் அரும்பொருள் சேகரிப்பில் முதன்மையானவராகக் கருதப்படும் கலைஞானி கடந்த 50 ஆண்டுகளாக அரும்பொருள் சேகரிப்பினை மேற்கொண்டு வருகிறார்.

இராணுவ நடவடிக்கை மற்றும் இடம்பெயர்வின்காரணமாக இவரது சேகரிப்பில் கணிசமான பொருள்கள் அழிக்கப்பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது.

## காயம்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று சைக்கிளும், மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் வந்த இந்துக்குருக்கள்ஒருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ரவீந்திரன் க்ணேசையர் (வயது 42) என்பவரே காயமுற்றார். (உ-139)

**வாஜ்பாய் அரசு மீதான**

# நம்பிக்கைப் பிரேரணை தொடர்ந்து விவாதம்

புதுடில்லி, மார்ச் 28

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தமது பாரதீய ஜனதாக்கட்சி தலைமையிலான கூட்டணி அரசு மீதான நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரேரணை மீதான விவாதம் பலத்த சர்ச்சைகள், சலசலப்புகள், குழப்பங்கள், கூச்சல்கள், குறுக்கீடுகளுக்கு மத்தியில் நேற்றிரவு வரை தொடர்ந்து நடைபெற்றது. நம்பிக்கைப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று பிற்பகலில் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-7)

## பாண் தயாரிப்பு பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

தற்போது யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாட்டினால் பாண் தயாரிப்புக் கூடப் பாதிப்படைந்துள்ளது.

பாணுக்குப் பாவிக்கப்படும் 'ஈஸ்ட்' நொதிப்பதற்காக சிறிதளவு சீனி பாண் உற்பத்தியின்போது சேர்க்கப்படுகின்றது. தற்போது சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பாண் உற்பத்தியும் பாதிப்புற்றுள்ளது. (உ-ரி-5)

## நாடகப் பயிற்சி

இணுவில் தெஸ்பியன் கலை வட்டத்தினரால் நாடகப் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

இப்பட்டறை பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் மாலை 3-30 மணி முதல் இரு மணி நேரம் இணுவில் சிவகாமியம்மன் கோயில் அன்னதான மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

40 மாணவர்கள் கலந்து கொள்ளும் இப்பட்டறையை க. ஸ்ரீ கந்தவேள் நடத்தி வருகிறார். (உ-27)

## நாளை

பங்குனி 15

ஞாயிற்றுக்கிழமை

திதி: பிரதமை

காலை: 6.59 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பிற்பகல்: 1.00 வரை.

சுபநேரம்: 9.13-10.43

ராகு காலம்: 4.43- 06.13

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

மங்களகரமான திறப்புவிழா

**தொலைபேசிச் சேவை**

யாழ். மக்களின் நெருக்கடியான தொலைபேசித் தேவைகளைப் பூர்த்திசெய்ய இன்று முதல் வண்ணை சிவன்கோயில் அருகில் பகல் 11-00 முதல் 12-00 மணி வரையுள்ள சுபவேளையில் எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ள

**உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசிச் சேவைகளை**

இரவு, பகல் சேவையாக நடத்துகிறோம் என்பதனை எமது அன்புக்கினிய புதிய வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

★ உங்களுக்கு வரும் உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசிச் செய்திகளை இலவசமாக உங்கள் இல்லங்களுக்கு அனுப்பும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

உங்கள் தொலைபேசித் தேவைகளைப் பூர்த்திசெய்ய எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**குமார் ஏஜென்ட்,**
இல. 367, காங்கேசன்துறை வீதி,
(வண்ணை சிவன் கோயில் அருகில்)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 - 2999

குறிப்பு: வண்ணை சிவன் கோயில் தெற்கு நோக்கி 100 யார் தூரத்தில்.

(54382)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை
28 - 03 - 1998 சஞ்சீவி

றெனி மூக்குக் கண்ணாடி
அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து கண்ணாடிகளை உடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.
றெனி மூக்குக் கண்ணாடி அகம்
இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
கண்டிவீதி, (பிரதேசசெயலகம் முன்பாக) சாவகச்சேரி.
(சி/3190)

## கருத்துக் கலசம்

### மறவா வரலாறு

வரலாறு என்பது மனித வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது; பிரதானமானது. நாட்டுக்கும், சமூகத்துக்கும் மட்டுமே வரலாறு உண்டு என்பதல்ல.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும், குடும்பத்துக்கும் வரலாறு உண்டு. மக்கள் ஸ்தாபனங்கள், சமய, சமூக நிறுவனங்கள், கட்சிகள், சங்கங்கள் எல்லாவற்றுக்குமே வரலாறுகள் உண்டு.

மனித சமுதாயத்தின் இன்றைய முன்னேற்றத்துக்கும், உலகத்தின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் முந்திய வரலாறே அத்திவாரமாக அமைகிறது. எல்லாவற்றுக்கும் ஒரு வரலாறு — சிறப்புடையதோ, சிறப்பில்லாததோ—ஏதோ ஒரு வரலாறு — இருக்கும். எத்தகையதாயினும் அந்த வரலாற்றை மறந்து விடலாகாது.

வரலாற்றை மறந்தவன், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் முன்னேற முடியாது. அதனால் அவன் எவ்வித புதிய சாதனைகளையும் படைக்கவும் முடியாது.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் எங்களில் பலர் எமது வரலாற்றை மறந்துவிட்டவர்களாகவே இருக்கிறார்கள். இது மிகவும் கவலைக்குரியது.

எங்கள் முன்னோர் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரத் துறைகளில் சிறப்புமிக்கவர்களாக வாழ்ந்தார்கள் என்று பெருமை பேசுவதும், எழுதுவதும் நாம் வரலாற்றை நினைக்கிறோம் என்பதற்கு அடையாளங்களாக அமையலாம். அந்த நினைவு கொள்ளுதல் மட்டும் செயலளவில் எவ்வித பயனையும் செய்யாது.

எமது இன்றைய வாழ்வு, முந்திய வரலாற்றை விடச் சிறப்பாக இருக்கிறதா — உயர்ந்து நிற்கிறதா — அல்லது தாழ்ந்து போய்க் கிடக்கிறதா என்பதனை மதிப்பீடு செய்ய வேண்டும். சிறப்புடையதாயின் மேலும் அதிசிறப்பு நிலையை எய்த உழைக்க வேண்டும். தாழ்ந்து போயிருப்பின் முந்தியநிலைக்கு உயர்த்தவாவது உழைக்க வேண்டும்.

இன்றைய அரசியல் நிலை தொடக்கம் எங்கள் சமூக நடப்பியல்கள் வரை வரலாற்றுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்வது அவசியம். பழையனவற்றில் நல்லவற்றை, சிறந்தனவற்றை கைக்கொள்ளவும் அவற்றுக்குப் புதுமெருகு கொடுக்கவும் செயற்பட வேண்டும்.

வரலாற்றுக் காலத்தில் அரசநீதி, அறம், தெய்வபக்தி, தர்மம், நியாயம், நீதி, தானம், தவம், நற்பண்புகள், நற்குணங்கள், இயற்கையைப் பேணுதல், உலகியல் குற்றங்களைக் களைதல் ஆகியன மேலோங்கி நின்றன.

ஆனால் இன்று அவை மறக்கப்பட்டுவிட்டன; பொருட்படுத்தப்படுவதில்லை; கைக்கொள்ளப்படுவதில்லை. அதனால் கேடுகளே மலிந்துள்ளன. வரலாற்றை மறவாதிருப்பது என்பது ஒரு வகையில் முந்திய நற்பண்புகளை எமது வாழ்க்கையில் நடைமுறைக்குக் கொண்டு வருதலே ஆகும்.

# ஏழை, எளியவர், அநாதைகளுடன் வாழ்வைப் பகிரும் தவக்காலம்

கிறிஸ்தவர்களின் புனித தவக்காலம் இப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது. அதை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

தவக்காலம் என்றதும் எமது மனத்திரையில் ஓடி மறைபவை யேசுவின் பாடுகளும், மரணமும், உயிர்ப்புமே. ஆனால் இதன் வரலாற்றுப் பின்னணி, இக்காலம் உருப்பெற்ற விதம் ஆகியவை பற்றியும்! இக்காலத்தில் எமது செயற்பாடுகள், கடமைகள் எவை? இக்காலம் கூறும் செய்தி என்ன? ஆகியவை பற்றியும் நாம் சிந்திக்க மறந்து விடுகின்றோம்.

கத்தோலிக்க—கிறிஸ்தவ—மக்களைப் பொறுத்தமட்டில் திருவழிபாட்டு ஆண்டில் வருகின்ற தவக்காலம் என்பது மிக முக்கியமான காலப் பகுதியாகும். இந்தத் தவக்காலமானது திருநீற்றுப் புதனன்று (விபூதிப்புதன்) குரு நெற்றியில் சாம்பல் பூசி ''மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற்கு 1:15) என்ற அறை கூவலோடு ஆரம்பமாகி, புனித வாரத்தில் (பெரிய வியாழன், பெரிய வெள்ளி, புனிதசனி) வருகின்ற புனித சனியோடு நிறைவு பெறுகின்றது.

எவ்வாறு தவக்காலம் உருவானது?

ஆதிக் கிறிஸ்தவர்கள், ஆரம்பத்தில் உயிர்ப்பு விழாவை மட்டுமே கொண்டாடினர். இவ் விழாவிற்கு ஆயத்தமாக ஒரு சில நாள்கள் நோன்பிருந்து செபித்தனர். இன்னும் ஆரம்ப காலத்தில் யாராவது திருச்சபையில் சேர விரும்பினால் அவர்கள் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் பழைய வாழ்விலிருந்து திருந்தி, மனம்மாறி வாழ்வதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இந்த நாள்களில் தங்கள் பழைய வாழ்க்கையை விட்டு விடுவதாக உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பதிதைப் பயன்படுத்தி ஆரம்பக் கிறிஸ்தவர்களும் தாங்கள் திருமுழுக்கில் எடுத்துக்கொண்ட வாக்குறுதிகளைப் புதுப்பித்துக்கொண்டனர். இவை உயிர்ப்பு விழாவின் பின்னணியில் நடந்தேறின.

மேலும் ஆதிக் கிறிஸ்தவர்கள் இந்தக் காலத்தை மனந்திரும்பும் காலமாகப் பயன்படுத்தி, கடுமையான குற்றம் புரிந்தவர்களை திருச்சபைக்குப் புறம்பாக்கினார்கள் தங்கள் பாவங்களிலின்று விடுதலை பெற்ற பின்னர் மீண்டும் திருச்சபையோடு இணைக்கப்பட்டனர். மேற்சொல்லப்பட்ட காரணங்கள் அனைத்தும் தவக்காலம் உருவாவதற்குரிய காரணிகளாயின.

40 நாள்கள் நோன்பு ஏன்?

ஆரம்ப நாள்களில் நோன்புக்குரிய காலம் வரையறுக்கப்படவில்லை. கி.பி.190இல் வாழ்ந்த இரேனியுஸ் நோன்பு நாள்களைப் பற்றிக் கூறும் போது மக்கள் இரண்டு அல்லது மூன்று நாள்கள் நோன்பிருந்ததாகக் குறிப்பிடுகின்றார். கி. பி. 3ஆம்,



4ஆம் நூற்றாண்டுகளிலேயே உயிர்ப்பு விழாவுக்கு (ஈஸ்ரர்) 40 நாள்கள் தவக்காலத் தயாரிப்பு ஆரம்பமாயிற்று. 40 என்ற எண்ணானது ஒரு குறியீட்டு எண்ணாக திருச்சபையின் தந்தையர்களால் விவரிக்கப்படுகின்றது. 40 நாள்கள் தவக்காலத்திற்கு ஒதுக்கப்பட்டதற்கு காரணங்கள் வருமாறு;

★ நோவா காலத்துப் பெருவெள்ளம் நீடித்தது 40 நாள்கள்.

★ இஸ்ராயேல் மக்கள் பாலை நிலத்தில் பயணம் செய்தது 40 ஆண்டுகள்.

★ எலியாஸ் இறைவாக்கினர் உண்ணா நோன்பிருந்தது 40 பகலும், 40 இரவும்.

★ மோயீசன் சீனாய் மலையில் உண்ணா நோன்பிருந்தது 40 நாள்கள்.

★ யோனாஸ் இறைவாக்கினரின் போதனையைக் கேட்டு நினிவே மக்கள் கடுந்தவம் புரிந்தது 40 நாள்கள்.

★ புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் யேசு பாலை வனத்தில் உண்ணா நோன்பிருந்தது 40 நாள்கள்.

தவக்காலம் பற்றிய திருச்சபையின் போதனை

தவக்காலம் பற்றியும், தவக்காலத்தில் கத்தோலிக்க மக்கள் செய்ய வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றியும் திருச்சபை கூறியிருப்பதை ஆராய்வோம்.

திருச்சபையின் கட்டளைப்படி தவக்காலத்தில் 18 வயது [illegible] கத்தோலிக்கர்களும் திருநீற்றுப் புதனிலும் பெரிய வெள்ளியிலும் (திருப்பாடுகளின் வெள்ளி) கட்டாயம் நோன்பிருக்க பணிக்கப்படுகின்றனர். 14வயதிற்கு மேற்பட்டோர் அனைவரும் தவக்காலத்தில் வரும் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் சுத்த போசனம் அனுசரிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

இந்தக் காலத்தில் சிறப்பாக—யேசுவின் பாடுகள், மரணம் இவற்றைப் பற்றி—சிந்திக்கவும், அவரோடு ஒன்றிக்கவும், தேவையற்ற விழாக்களையும் வீண் ஆடம்பரங்களையும் தவிர்க்கவும் திருச்சபை அழைப்பு விடுக்கின்றது.

தவக்காலம் என்பது துன்பத்தின் காலமல்ல. அன்றாடம் கிறிஸ்தவ விழுமியங்களைப் போதிக்கின்ற திருச்சபை, இந்தக் காலத்தில் அவற்றிற்கு அதிக மதிப்பளித்து, அவை வாழப்பட வேண்டும் என்று மக்களை ஊக்குவிக்கின்றது.

''மக்கள் மீட்பு'' என்ற ஒரே ஒரு இலட்சியத்திற்காக தனது மனித வாழ்வை மூன்றே மூன்று ஆணிகளுக்குள் அறைந்து விட்டவர் தான் எம் ஆண்டவர் யேசு. எனவே எமது இலட்சியங்களையும் யேசுவின் இலட்சியத்தோடு ஒப்புநோக்கி எமது இலட்சியத்தின் பாதையில் வருகின்ற சவால்களை, தடைகளை வெற்றிகொள்வதற்கு உறுதி பெறும் காலம் இது.

அன்றாடம் அரைவயிற்றுக்கு அவதிப்படும் ஏழைகளோடும் அநாதைகளோடும் எமது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும் காலம்; நைதுகளாலும், இறப்புக்களாலும், உறவுப் பிரிவுகளாலும், உரிமை—உடைமை இழப்புகளாலும் நொந்து போயிருக்கின்ற உள்ளங்களைத் தேடிச் சென்று அவர்களது சுமைகளைக் குறைத்து தேற்றும் காலம்.

- திராட்சையூர் றஜன் -

உடைமைகள் சூறையாடப்

(XI ஆம் பக்கம் பார்க்க)

## சிலேடை வெண்பாக்கள்

குடிகாரனுக்கும் யாழ்ப்பாணத்து
மின்சாரத்திற்கும்

ஆடி அனுங்கி அதிகாலை போவதால்
வீடு வருமிடையில் வீழ்வதால்—பாடுவதால்
ஓடுவதால்; பட்டென்று நிற்பதனால்; ஊர்க்கரண்டே
சோடு; குடிகாரற் கு.

கப்பற்சேவையும், வெளிநாட்டுக்கணவரும்

கடிதம் அனுப்புதலால்; காத்திருக்க வைத்து
நெடுநாள் கழித்து நெருங்கி — வருதலால்
வெல்லச் சுவையீந்து வேண்டுவன வும்தந்து
செல்லலால் கப்பலும் அவர்.

''சீனியர்களும்'' சித்திவிநாயகரும்

தோப்படிக்கச் சொல்வதால்; துண்டகற்றிச்
''செந்தமிழில்''
''பாப்படிக்க'' ''ஞான''மது பருக்குவதால்
—வாய்ப்பிருந்தால்
''முக்தி (?)'' அளிக்கும் முறைகளால் சீனியரும்
சித்தி விநாயகரும் சேர்ந்து.

ரீயூட்டறிக்கல்வியும் சந்தைக்கடையும்

கொட்டிலிலே கொட்டிக் கிடப்பதனால்; வாசலுள்ள
பட்டியலில் எல்லாம் பதித்துளதால்—விட்டவுடன்
ஓ வென் றிரைச்சல் எழுவதால் காசுக்கு
வாவென்னும் சந்தை வகுப்பு.

—ச. முகுந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமரின் அவசர இந்திய விஜயம்; மாகாண தேர்தலுக்கும் ஆயத்தங்கள்

இந்தியாவின் வாஜ்பாய் அரசு பதவியேற்ற கையோடு அங்கு முதலில் சென்ற வெளிநாட்டுப் பிரமுகர் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே!

இந்தியாவின் புதிய பிரதமராக வாஜ்பாய் கடந்த பத்தொன்பதாம் திகதி (வியாழக்கிழமை) பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இரண்டு நாள்களில் இம்மாதம் இருபத்தோராம் திகதி (சனிக்கிழமை) கதிர்காமர் விழுந்தடித்துக் கொண்டு புதுடில்லிக்கு விரைந்தார்.

பிரதமர் வாஜ்பாயே வெளிவிவகார அமைச்சராகவும் இருக்கிறார். வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் கதிர்காமர் அவரைச் சந்தித்துப் பேச ராஜீக விதிமுறைகள் உள்ளன. எனினும் கதிர்காமர், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் விசேட தூதுவராக, விசேட பட்டியுடன் பறந்தார்.

புதிய அரசாங்கம் ஒன்று அமைந்த கையோடு கதிர்காமர் அவசர அவசரமாகப் புதுடில்லி பறந்ததற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான வாஜ்பாய் அரசில் மொத்தம் இருபது கட்சிகள் கூட்டுச்சேர்ந்துள்ளன. இவற்றில் சில கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் ஈழத்தமிழர்களின் தமிழீழக் கோரிக்கைக்கு ஒன்றில் ஆதரவாளர்கள் அல்லது அனுதாபிகள்.

பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ்—அவரது சமதாக் கட்சி— மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி—மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்பன ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை பகிரங்கமாக ஆதரித்தவை.

பாரதீய ஜனதாக் கட்சியும் கூட ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியது. ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்குத் தான் ஆதரவானதே என்ற நிலைப்பாட்டை தேர்தல் காலத்துக்கு முன்னர் வரை அது கடைப்பிடித்தது.

1986 ஆம் ஆண்டு மே மாதம் மதுரையில் நடைபெற்ற தமிழீழம் ஆதரவாளர்கள் அமைப்பு நடத்திய மாநாட்டில் கலந்துகொண்டு வாஜ்பாய் உரையாற்றியிருந்தார்

இலங்கையில் தமிழர்கள் கௌரவமாக வாழ்வதற்காக நடத்தும் போராட்டத்துக்கு நாம் ஆதரவளிக்கிறோம். நாங்கள் எல்லோரும் ஒரே மக்கள். அவர்களின் போராட்டத்துக்கு நிதி உதவி வழங்க வேண்டும் —என்று அப்போது அவர் கூறியிருந்தார்.

இந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார் என்பதற்கான எவ்வித கருத்தையும் அண்மைக்காலம் வரை அவர் வெளியிட்டதில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்தியாவின் புதிய அரசு, குஜ்ரால் அரசு போல ''உங்கள் பிரச்சினையை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள்; அதுவே எங்கள் நாட்டுக்கும் நல்லது'' என்ற அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமா என்ற அச்சம், கிலேசம், இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதனாலேயே வாஜ்பாய் அரசை இயன்ற அளவில் தனது பக்கத்துக்குத் திருப்பும் ஒரு முயற்சியாகக் கதிர்காமர் அவசர அவசரமாகப் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டார்.

வாஜ்பாய் அரசு இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் எங்கே நிற்கிறது என்பதனை நாடி பிடித்துப் பார்ப்பதும் கதிர்காமரின் புதுடில்லி விஜயத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று.

ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவராகச் சென்ற கதிர்காமரை முறைப்படி வரவேற்று இந்தியாவின் புதிய பிரதமர் நட்புறவுடன் பேசியிருக்கிறார்.

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும் ஒரே நாடு என்ற தன்மைக்கும் இந்திய அரசு தனது முழு ஆதரவையும் வழங்கும் என்றும்—

நாட்டைத் துண்டாடும் எந்த வகை முயற்சிக்கும் ஒருபோதும் ஆதரவளிக்காது என்றும் — பிரதமர் வாஜ்பாய் கதிர்காமரிடம் உறுதி அளித்திருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

அதே வேளை, தமிழ் நாட்டினால் இலங்கைக்குத் தொல்லை எதுவும் வராது என்றும் அது குறித்துக் கவலைப்படவேண்டியதில்லை— என்றும் வாஜ்பாய் கதிர்காமரிடம் தெரிவித்திருக்கிறார்.

## கூட்டணி தனித்துவத்தைப் பேண முனைவது குறித்து அதிருப்தி!

அரசியல்வாதிகள் எதிரணியில் இருக்கும்போது தீவிரமாகப் போசுவதும் ஆட்சி ஆசனத்தில் ஏறியதும் தணிந்த குரலுக்குத்தாழ்ந்து விடுவதும் ஒன்றும் புதியதல்ல. சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல தங்கள் நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்பவர்களே அரசியலில் வெற்றிக் கனியை உண்பது உண்டு.

## உள்ளும் புறமும்

குறுமுனி

இப்போது மட்டுமல்ல ஏற்கனவே பல தடவைகளும் தன்னை ஓர் அசல் அரசியல்வாதியாக நிரூபித்தவர் வாஜ்பாய். 1977ஆம் ஆண்டில் இந்திரா காந்தியைப் தோற்கடித்து ஜனதா அரசை நிறுவி அதில் வெளிவிவகார அமைச்சராகப் பதவிபெற்றபோதே அவரது அரசியல் திறமையும் ஆளுமையும் வெளிப்பட்டது.

''ஹிந்தி – இந்து–ஹிந்துஸ்தான்'' என்ற தாரக மந்திரத்துடன் அரசியலுக்கு வந்ததேதான் பாரதீய ஜனதாக் கட்சி. ஆயினும் அந்த மந்திரத்தை மறந்து மக்கள் ஆதரவைப் பெற்று ஒரு ''பெருங்கூட்டு'' அரசை இப்போது நிறுவியுள்ளது.

முந்திய நெருப்புத் தன்மையை அவித்து இப்போது ''பச்சைத் தண்ணீர்'' நிலையைக் கடைப்பிடித்துள்ளது. அந்த வகையில் வாஜ்பாய் இலங்கை விவகாரத்தில் நிதானமாக நடந்து கொண்டிருக்கிறார் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று தாம் நம்புவதாக அவர் கதிர்காமரிடம் தெரிவித்தமை —

இது விடயத்தில் சூடாறிவிட்டார் என்ற அர்த்தமா அல்லது நாங்கள் அழுத்தம் போடு முன்னர் நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள் என்ற அர்த்தமா என்பது தெளிவாகுவதற்கு இன்னும் காலம் உண்டு என்றே கொள்ளலாம்.

அமைச்சர் கதிர்காமர் பி.ஜே.பி. கட்சியின் தலைவர் எல்.கே. அத்வானியையும் சந்தித்துப் பேசியிருக்கிறார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் சுமுகமாகவே இருக்கும் என்றும், எந்த வகையான பயங்கரவாதத்துக்குமோ அல்லது நாட்டைப் பிரிக்கும் முயற்சிக்குமோ எந்த விதமான உதவியையும் இந்திய அரசு வழங்க மாட்டாது என்றும் அத்வானி உறுதியளித்திருக்கிறார்.

அத்வானியின் பதிலில் இருந்து இலங்கை அரசுக்கு ஏற்பட்ட அரசியல் பதற்றம் எத்தகையது, என்பதனை எவரும் ஊகித்துக் கொள்ளலாம்.

எப்படியோ கதிர்காமர் முதல் ஆளாகச் சென்று இந்தியாவின் புதிய ஆட்சித் தலைவர்களுக்கு ''பட்டர்'' பூசிவிட்டு வந்திருக்கிறார். அந்தவகையில் அவரது விஜயம் வெற்றி என்று சந்திரிகா நிம்மதி கொண்டிருப்பார்.

★ ★ ★

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியப் புதிய அரசின் நிலைப்பாடு என்ன என்பதனை நாடி பிடிப்பதற்காக அமைச்சர் கதிர்காமரைப் புதுடில்லிக்கு அனுப்பிய ஜனாதிபதி —

மாகாணசபைத் தேர்தலை நடத்தி தனது அரசுக்குள்ள ஆதரவை நாடி பிடித்துப் பார்ப்பதற்கும் தீவிரமாகச் செயற்படுகிறார்.

மாகாணசபைத் தேர்தல் ஜூன் மாதத்தில் நடப்பது அனேகமாக உறுதியாகி விட்டது. அரசாங்கத்தின் உத்தேச பிராந்திய சபைகள் — தீர்வுப்பொதி — பிசுபிசுத்துப் போனமைக்குச் சமன் என்பதாலேயே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட உள்ளதாக அறியப்படுகிறது. இந்த வருடத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று எதுவும் பெரிதாக, விரைவாக முன்னெடுக்கப்படமாட்டாது என்பதும் ஓரளவு தெரிந்த விடயமாகிவிட்டது.

நாட்டு மக்களில் 50 சதவீதத்தினருக்கு மேற்பட்ட மக்களின் ஆதரவு தமது கட்சிக்கு உண்டு என்று ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறியிருக்கிறார். இது ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் விடப்பட்ட சவாலாகும்.

ஆகையால் நாடாளுமன்றத்தின் ஆயுட் காலத்தைப் பாதிக்காத தேர்தல் ஒன்று தெற்கில் தேவைப்படுகிறது— மக்கள் யார் பக்கம் நிற்கிறார்கள் என்பதனை அறிந்து கொள்வதற்காக.

அந்தத் தேர்தல் காற்றுடன் வடக்கு— கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலும் நடத்தப்படும் என்றும் ஊகிக்கப்படுகிறது.

பிராந்திய சபையோ பீர்க்கங்காயோ வருவதனைப் பார்த்துக் கொண்டிருக்காமல், வடக்கு–கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே நல்லது என்பது தமிழ்க் கட்சிகளின் கருத்துமாகும். ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்க முடியுமா என்பது இவர்களின் கேள்வி.

தமிழ்க் கட்சிகள் மத்தியில் இப்போது தேர்தல் காற்றுப் பலமாக வீசுகிறது. ஒவ்வொரு கட்சியும் தேர்தலில் குதிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றன.

யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலைப் போலவே மாகாண சபைத் தேர்தலிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தனித்துவத்தைப் பேணுவதில் அக்கறையாக உள்ளது. ஆயுதம் தாங்கியுள்ள கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதில் அதற்கு விருப்பமில்லை என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் ஆயுதக் குழுக்களாக உள்ள கட்சிகள் ஒன்று சேர வேண்டிய தேவையை அவற்றில் சில வெளிப்படுத்தத் தொடங்கி உள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழீழ அறை கூவலுக்கு அமைவாகவே வட பகுதி இளைஞர்களின் ஆயுதம் ஏந்திய போராட்டம் ஏற்பட்டது. இன்று சகல தமிழ்க் கட்சிகளும் ஐக்கியப்பட்டுச் செயலாற்ற வேண்டிய ஒரு காலகட்டத்தில், ஆயுதம் தாங்கிய குழுக்களுடன் ஒருவித தொடர்பும் வைத்திருக்க மாட்டோம் என்று கூட்டணி கூறுவது விந்தையாக உள்ளது என்று தமிழ்க் கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். இத்தகைய நிலைப்பாட்டின் மூலம் ஆயுதம் தாங்கிய கட்சிகளின் போராட்டத்தை கூட்டணி அங்கீகரிக்கவில்லை என்ற நிலைப்பாடும் வெளிப்படுத்தப்படுகிறது.

வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தல், ஏற்கனவே கன்னை பிரிந்து நிற்கும் தமிழ்க் கட்சிகளின் பலத்தைப் பரீட்சிப்பதாக அமையும் என்பது மட்டும் நிச்சயம்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுப் பொதி குறித்துக் கருத்துச் சொல்வது தொடக்கம் யாழ். உள்ளூராட்சித் தேர்தல் வரை தமிழ்க் கட்சிகள் தமது ஒற்றுமையின்மையை வெளிப்படுத்தி விட்டன. இதனைத் தமிழ் மக்கள் — தமிழ் வாக்காளர்கள் — இலகுவில் மறந்து விட நியாயமில்லை.

இதற்கிடையில், யாழ்ப்பாணம் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்கள் மாகாண சபை மீது கண் வைத்துள்ளார்கள் என்று அறிய வந்துள்ளது. தங்களது இப்போதைய பதவிகளுக்கு, தங்களுக்கு மாற்றீடாக புதியவர்களைத் தெரிவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். மாகாணச்சபைத் தேர்தலில் தத்தம் பகுதிகளில் நிச்சயமாகத் தமக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை உடையோரே இவ்விதம் தமக்குப் பதிலாக ஆள்களை தெரிவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

அரசியல்வாதிகள் ஆசனங்களுக்காக ஆசைகொண்டு செயற்படும் இவ்வேளையில், வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியுமா என்ற கேள்வி அதிகாரிகளைக் குடைந்துகொண்டிருக்கிறது.

வடக்கு—கிழக்கு மாகாண சபை எல்லைக்குள் எட்டு மாவட்டங்கள் அடங்குகின்றன. அவற்றில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டத்தில் ஒரு பகுதி என்பனவற்றில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை அறவேயில்லை.

அவ்வாறிருக்கையில் அவற்றைத் தவிர்த்துத் தேர்தல் நடத்த மாகாணசபைத் தேர்தல் விதிகள் இடங்கொடுக்கவில்லை என்று அதிகாரிகள் மட்டத்தில் பேசப்படுகிறது.

ஆனால்—இந்தச் சிக்கல்களை நிறைவேற்று ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தினால் வெட்டி விடலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

1994ஆம் ஆண்டுப்பொதுத் தேர்தல் தீவுப்பகுதியில் நடைபெற்று யாழ். மாவட்ட எம்.பிக்கள் தெரிவு செய்யப்படவில்லையா என்பது இன்னொரு சாராரின் கேள்வி.

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னரோ அதனை அண்டியோ உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு அங்கு உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. வவுனியா மாவட்டத்தில் ஒரு பகுதிக்கும் அவ்வேளை தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய தேசியக்கட்சி தனது ஆட்சியின் கடைசிக் காலத்தில் வீம்புக்கு நடத்திய தேர்தல் அது!

இம்மாதம் 31 ஆம் திகதியுடன் அங்குள்ள உள்ளூராட்சிச்சபைகளின் பதவிக் காலம் முடிவடைகின்றது. அவற்றின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது, என்றாலும் கிழக்கில் திடீரென உள்ளூராட்சித்தேர்தல் அறிவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பில் அரசியல் கட்சிகள் உள்ளன.

எனினும் சென்ற உள்ளூராட்சித் தேர்தலில், அதற்குப் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் கொடுத்த வாக்குறுதிகளை சரிவர — அரைவாசி தானும்—நிறைவேற்றவில்லை என்று கிழக்கு மக்கள் அதிருப்தி கொண்டுள்ளார்கள். இம்முறை தக்க பாடம் படிப்பிப்பார்கள் என்று கிழக்கிலங்கையின் ஸ்ரீமான் பொதுஜனம் சொல்கிறார்! மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியும் முஸ்லிம் காங்கிரஸும் ஒரே அணியில் போட்டியிடும் என்ற பேச்சும் இப்போதே அங்கு அடிபடுவதாகவும் அவர் சொல்கிறார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை உலுக்கிய

உலகின் பலபாகங்களிலும் வாகனங்கள் குண்டுகளை தம்மகத்தே கொண்டு உலா வருகின்றன. பெரிய நகரங்களை நெருங்கும் பல்லாயிரக் கணக்கான ஜொலிக்கும் வாகனங்களில் எதிலே— எங்கே—என்று குண்டு வருகிறது எனக் கண்டுபிடித்து விடுவது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை.

குண்டு வெடித்ததும் நிலைமையை இராணுவம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருகிறது என்றால்—அது வெடிக்கும் வரை நிலைமைகள் கட்டுப்பாட்டில் இல்லை என்று தானே பொருள் கொள்ள வேண்டும்?

எல்லாம் சாதாரணமாகவும்—இயல்பாகவும் இயங்கும் வேளை சற்றும் எதிர்பாராமல் குண்டு வெடித்து விடுகிறது. கணப்பொழுதில் நிகழும் இவ்வனர்த்தம் எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்களின் கதைகளை— வாழ்க்கையை திசைதிருப்பி விடுகிறது.

இதை விதியென்றோ, தெய்வ நியதியென்றோ ஏற்க பலரின் மனங்கள் ஒப்பவில்லை. அரசுகளையும் —கட்சிகளையும்—குழுக்களையும் — குற்றம்சாட்டி, வாதிட்டு ஏதும் பயன் கிட்டப் போவதும் இல்லை. ஆனால் குண்டு வெடித்ததும் உண்மை. இதில் பல கண்ணீர்க் கதைகள் பிறந்ததும் உண்மை.

இவ்வாறான இக்கட்டான வேளைகளைத் தடுக்க முடியாதபோதும், அவை சந்திக்கும் சந்தர்ப்பங்களை எப்படிப் பலரும் எதிர்கொள்கிறார்கள் என்ற தன்மை பல அனுபவங்களையும் தருகிறது.

அப்பாவிகள் பலியாகலாம்; அனுபவங்கள் பாடமாகலாம்; ஆனால் அடுத்த குண்டு எப்போது எங்கே வெடிக்கும் என்பதைத்தான் கூற முடிவதில்லை.

★ ★ ★

அமெரிக்காவின் மனற்றன் (Manhattan) நகரத்தில் நிமிர்ந்து கம்பீரமாக நிற்கும் இரட்டைக் கோபுரங்கள் தான் 110 மாடிகளைக் கொண்ட உலக வர்த்தக நிலையம் (World Trade Centre). அவற்றின் உயரமோ சுமார் கால் மைல்களை எட்டும் என்றால் பாருங்களேன்!...

அதன் நிலப்பரப்பு சுமார் 16 ஏக்கர் அளவுடையது. ஏழு கட்டடத் தொகுதிகளைக் கொண்டிருக்கிறது. அங்குள்ள அலுவலகங்களில் சுமார்50ஆயிரம் பேர் வேலை பார்க்கிறார்கள். தினமும் தமதுஅலுவல்களை கவனிக்க என்று மேலும் 80 ஆயிரம் பேர்வரை அங்கே வருகை தருகிறார்கள்.

பல உலக நிதி நிறுவனங்களின் கிளைகள் அங்கேதான் இயங்குகின்றன. பலநாடுகளின் அரச அலுவலகங்களும் கூட அங்கே இயங்குகின்றன. பல உளவு நிறுவனங்களும், இரகசிய ஏஜென்சிகளும்கூட அங்கே இயங்கத்தான் செய்கின்றன.

நிலமட்டத்துக்குக் கீழே 70 அடி ஆழத்தில் இருக்கும் பாறைகளில் இருந்தே கட்டடத்தின் தூண்கள் மேல் நோக்கி புறப்படுகின்றன. B1, B2, B3...என நிலமட்டத்துக்கு கீழேயும் பலதட்டுகளில் கட்டடம் அமைக்கப்பட்டே இருக்கிறது.

சுரங்க ரயில்பாதை ஒன்று இக் கட்டடத்தின் நிலக்கீழ் தளங்களில் ஒன்றைத் தொட்டுச் செல்கிறது. சுமார் இரண்டாயிரம் வாகனங்களுக்கான தரிப்பிட வசதியும் கீழே அமைந்துள்ளது.

பல கணனிகள் கட்டடத்தின் குளிரூட்டிகளையும், தொலைத்தொடர்பு, மின்சாரம் மற்றும் வசதிகளையும் நெறிப்படுத்தி வருகின்றன.

அன்று ஒரு கணகணப்பான வெள்ளிக்கிழமை. 1993 இன் பெப்ரவரி 26. மதியம் கடந்துகொண்டிருக்கிறது.

B2 தளத்தில்......இப்போதும் தொலைபேசி மணிகள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. அங்கே அவற்றுக்கு ஓய்வே கிடைப்பதில்லை.

—பூட்டுக்கள் சாவிகள்— தொடர்பான சிரேஷ்ட நிபுணர் கேக் பற்றிக்— ஆவலுடன் கனது மதிய உணவுப் பொதியை பிரித்துக்கொண்டிருக்கிறார்.

அந்த மஞ்சள் வானில்வந்தவர்கள்—தம்மால் வீட்டில் தயாரிக்கப்பட்ட லோக்கல் வெடிகுண்டுகளை இணைக்கும்—ஒவ்வொன்றும் சுமார் 20 அடி நீளமான நான்கு வெடித் திரிகளையும்—சிகரெட்லைட்டர் கொண்டு பற்றவைத்துவிட்டு, இறங்கி

> **உண்மைச் சம்பவங்களின் தொகுப்பாக்கம் இத்தொடர்**
>
> அத்தியாயம் 1

கட்டடமுகாமைத்துவத்தின் செயலாளர்தான் மொனிக்கா ஸிமித், B2 இல் மட்டுமன்றி மேல்—கீழ்தளங்களிலும் அவள் பிரபல்யமானவள். பலரோடும் இனிக்கப் பழகி அனைவரையும் கவருபவள்.

1982 இல் அங்கேதான் அவள் ‘எட்’ ஐ கண்டாள். அவன் விரும்பிக் கேட்ட அன்னாசிப் பழம் ஒன்றை அவள் கொடுத்தபோது காதல் மலர்ந்தது.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் இருவரும் உல்லாசமாக உலாவந்து கொண்டு இருந்தனர். அவளோடு பேசி தனது வியாபார அலுவல்களை கவனிப்பது அவனுக்கு மிகவும் உற்சாகத்தைத் தந்தது.

1959இல் பிறந்தஅவளுக்கு அப்போது வயது 24. அவனது வயதோ 19 தான். அவள் திருமணத்துக்காக தனது விருப்பத்தை வெளியிட்டாள். அவன் அவகாசம் கேட்டிருந்தான்.

ஏழு வருடங்கள் கழிந்து 1989இல் இருவரும் இணக்கத்துக்கு வந்தனர். 1990 ஆகஸ்ட் 31 அன்று நியூயோர்க்கின் தேவாலயம் ஒன்றில் அவர்களின் திருமணம் நடைபெற்றது.

எட் ஸிமித் இரவில் தாமதித்தே வீடு வரும் நாள்களில் எல்லாம் காத்திருந்து—கண்டவுள் சுடச்சுட உணவு தயாரித்து பரிமாறுவதுதான் மொனிக்காவின் இயல்பு. அவன் மனம் சளைக்காமல் அவள் நடக்கும் முறைகள் மிகவும் நுட்பமானவை.

அவள் வயிற்றில் ஓர் ஆண் குழந்தை வளருவது மருத்துவ பரிசோதனைகள் மூலம் உறுதியாகிவிட்டது. இருவரின் மகிழ்ச்சிக்கும் எல்லையே இல்லை. எத்தனை ஆண்டுகள் காத்திருந்த பயிர் அதுவல்லவோ?

ஏழுமாத கர்ப்பிணியான மொனிக்கா தான் பிரசவ விடுப்பில் செல்லும்போது கடமைக்கு வரும் பெண்ணிடம் தனது கடமைகள் பற்றி விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவளது அலுவலகச் சுவருக்கு வெளியே வாகனத் தரிப்புத் தளத்தில்—அவளுக்கு சில அடிகள் தூரத்தில் 450 கிலோ வெடிமருந்துடன் அந்த மஞ்சள் நிற போட்—எக்னோலைட் வான் நிற்பதை அவள் அறியவில்லை.

பசி வயிற்றைக் கிள்ளவும் மதிய உணவுக்குத் தோழிகளுடன் தயாரானாள் அவள்.

அவளுடைய அலுவலகத்துக்கு அடுத்த அறையில்— அங்கேயும் ‘லஞ்ச்’ மூட்டம்தான்! ஓய்வுபெற இன்னும் ஆறுமாதங்களை [illegible] டிய நிலையில்— [illegible]

வெளியே காத்திருந்த சிவப்புக் காரில்புறப்பட்டு வீதிக்கு வந்துவிடுகிறார்கள்,

சீறி எரியும் திரிகளின் சீற்றத்தையும்—மருந்து மணத்தையும் கட்டுப்படுத்த அவர்கள் தகுந்த குழாய்களில் அவற்றைச் சொருகி வளைத்து இருந்தனர்.

மைக்கோ என்ற உதவி முகாமையாளர் தனது ‘லஞ்ச்’ மேசை மீது கடதாசி பரப்பி, அதன்மீது ஒரு தோடம்பழத்தை வைத்து, லாவகமாக தன் பொக்கட் கத்தியால் கீறிக்கொண்டிருந்தான்.

> உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு இது. அமெரிக்காவை உலுக்கிய இரு பெரும் குண்டு வெடிப்புச் சம்பவங்களையும் அதன் சூத்திரதாரிகள் அகப்பட்ட விதங்களையும் இத் தொடரில் தமக்கேயுரிய — விறுவிறுப்பை ஏற்படுத்தும் — கட்டுரைப் பாணியில் விவரிக்கின்றார் மு. சிவநேசன்.

ஸ்டீவன் தான் கீழ் தள பொறுப்பதிகாரி. அன்றைய பத்திரிகையின் குறுக்கெழுத்துப் போட்டிக்குள் மண்டையை குழப்பிக்கொண்டிருந்த அவனுக்கு அருகே இருந்தவர்களின் சாப்பாட்டு வாசனைகூட மண்டைக்குள் ஏறவில்லை.

குள் நுழைகிறான். B1, B2 இருதளங்களுமே வாகனங்களால் நிரம்பிய நிலைமை. அவனுக்கு முன்னே இன்னொரு கார் நுழையக் காத்து நிற்கிறது. பொறுமை இழந்து தவிக்கும் நேரம். ஒருபடியாக உள்ளே நுழைய அனுமதி கிடைக்கிறது.

B1, தளம் நிரம்பி இருப்பதால் B2 தளத்தில் வாகனத்தை இறக்குகிறான். அவ்வேளை திரிகள் அந்தவெடிப் பொருட்களை நெருங்கிச் சீறிக்கொண்டிருந்தன.

அதற்கு நேர் மேலே B1 தளத்தில் தனது கதிரையில் வந்து அமர்ந்தான் மேர்காடோ. கைகளை குறுக்கே கட்டி கதிரையில் சாய்ந்து ஒரு குட்டித் தூக்கம் போட வேண்டும் என்பது அவனது அவா.

இரண்டு கோபுரங்களாக அமைந்த உலக வர்த்தக நிலையத்தின் முதல் கோபுரத்தில் தளத்துக்கு மேலே 100 வரையான லிப்ட்கள் (elevators) இயங்கிக்கொண்டிருந்தன. தளத்துக்குத்க்கு பலநூறு அடிகள் மேலே தனியொரு லிப்டில் தனியொரு மனிதனாக சாவ் செலிங்கர் என்ற பொறியியலாளன் உயரே ஏறிக்கொண்டிருந்தான்.

அவனது லிப்டில் மாடி இலக்கம் 43, 44, 45...என மாறிக்கொண்டிருந்தது. திடீரென லிப்ட் நின்றுபோனது. இயங்க மறுத்தது. இருண்டு கொண்டது. அவனுக்கு ஏதும் புரியவில்லை. ஏதோ ஒரு அதிர்வு தெரிந்தது.

குண்டு வெடித்ததையோ— B2 தளத்தில் இருந்த மொனிக்கா, கேக்பற்றிக், மைக்கோ, ஸ்டீபன் ஜோன், மேர்க்காடோ, எட்வாட் மற்றும் பலரும் அறியவில்லை மரணமோ மயக்கமோ அவர்களை அரவணைத்துக்கொண்டன.

எரிந்துகொண்டிருந்த திரிகள் தமது தொப்பியைத் தொட்டதும் — அதற்குள் அடைக்கப்பட்டிருந்த வெடி மருந்துகளில் பிடித்ததும்— அவை வெடிப்பொருள்களை தூண்டிவிட்டதும் — கணப்

போயின; தீப்பற்றிக் கொண்டன.

தளங்களில் ஏற்பட்ட துளைகளினூடாக 5 தளங்கள் கீழே விழுந்தான் தூக்கம் போட்ட மேர்க்காடோ. அவனது உடல் இடிபாடுகளுக்குள் அகப்பட்டுப் போனது. அவற்றை அகற்றி அவனை—சடலத்தை — மீட்கப் பலவாரங்கள் ஆயின.

வெடிகுண்டை ஏந்திய வான் நின்ற வாகனத் தளம் 11 அங்குல தடிப்புள்ள உயர்ரக கொங்கிரீட்டிலானது. அதன் கூரையும் கூட B1இற்குரிய வாகனத்தளம் என்பதால் அதே வலுவுடன் இருந்தது. இவ்விரு தளங்களிலுமே கொங்கிரீட் பொடிப் பொடியாகிப் பொசுங்கிப் போனது.

**-மு. சிவநேசன்-**

கேக் பற்றிக் மிக அண்மையில் இருந்தவன். அவனது மண்டை சிதறிப் போனது. உதவி முகாமையாளர் மைக்கோவின் உடல் முழுவதும் கொங்கிறீட்டுத் துண்டுகள் சன்னங்களாகப் பதிந்திருந்தன.

B2 ஒய்வறையில் இருந்தவர்களில் எவரும் தப்பவில்லை. அவர்களின் உடலை மூடி 4 அடிவரை கற்குவியல்களே காணப்பட்டன

அதிர்ச்சியடைந்தான் தனது வாகனத்தை நிறுத்த இடம் தேடியஜோன். குண்டு வெடித்ததும் குப்பெனப் பிடித்த விஷவாயு அவனைச் செயலிழக்கவைத்தது

குண்டு வெடித்த நிகழ்வு பற்றி ஆயிரம் ஆயிரம் பேர் தமது அனுபவங்களை விவரித்தார்கள். எல்லாவற்றையும் திரட்டித் தொகுத்தால் யானை பார்த்த குருடர் கதைதான் நினைவுக்குவரும்.

எத்தனையோ பேரின் வாழ்க்கை அங்கே திசை திரும்பிப்போனது. ஆயுள் காலக் கனவுகள் கணப்பொழுதில் தவிடு பொடியாகின்றன.

அடித்தளத்தில் இருந்து கிளம்பிய தடித்த கரும் புகை —தாங்கமுடியாத மருந்து நெடி—எரியும் எரிபொருள் —கருகும் பொருள்கள்—ஒட்சிசன் பற்றாக்குறை.

மேல் தளங்களில் விடப்பட்ட பல ஆயிரக்கணக்கானவர்களால் கீழே இறங்கி வர முடியவில்லை. கீழே புகையும் நெருப்பும் வழிவிடவில்லை. லிப்டுகள் இயங்கவில்லை. படிக்கட்டுச் சுழல்களின் நடுவே 110மாடி உயரமான வெளியினூடே—உல

# இரு பெரும் குண்டு வெடிப்புகள்

வேகமாகச் சீறும் திரிகளின் வாசனையை அறிய எவருக்கும் அவகாசம் கிடைக்கவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் மைக்கோ, கேக் பற்றிக், ஸ்டீவன் மூவருமே வியட்நாம் மற்றும் கொரிய யுத்த காலங்களில் இராணுவச் சேவையில் இருந்தவர்கள் என்பதுதான். அடுத்த சுவருக்கு வெளியே புகையும் பேரழிவு இவர்களுக்குப் புரியவில்லை.

யுத்தம் ஒன்று நடைபெறாத நாட்டில்—நகரத்தில்—எவரும் குண்டு ஒன்று வெடிக்கும் என எதிர்பார்க்கத் தேவை இருக்கவில்லைத்தான். ஆனால் வெடிக்கப் போகிறதே! நிலைமையை யாரால் தடுக்க இயலும்?

அவசர அழைப்பு வந்தது ஜோனிற்கு — மரணத்திற்கு எமன் விட்ட தூது போல— ஆம்—அவன் ஒரு பல் வைத்திய உபகரண வியாபாரி. [illegible] உலக வர்த்தக நிலையத்துக்

பெருமுதில் உலக வர்த்தக நிலையம் செயல் இழந்ததும்—முற்றிலும் எதிர்பார்க்கப்படாதவை. நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

குண்டு வெடித்த அதிர்வு அக்கட்டடத் தொகுதியை உலுக்கி எடுத்தது. கட்டடத்தின் உள்ளே அதுவும் நிலக்கீழ் தளமொன்றிலே வெடித்தால் சொல்லவா வேண்டும்?

குப்பென்ற வெப்பக்காற்று சுவர்களைப் பிளந்தது. பீம் (Beam)களைத் தூர வீசியது. வான் நின்ற இடத்துக்கு நேரே மேலும்கீழும்பல மாடிகளின் பிளாட்தளங்களில் வெடிப்புகளும் — உடைப்புகளும் ஏற்பட்டன. பலரும் தூக்கி வீசப்பட்டனர்.

வான் நின்ற தளத்தில் இருந்த வாகனங்கள் உருக்குலைந்தன. மேல்தளமான B1 இல்கூட வாகனங்கள் சிதைந்தன. பூக்களின் இதழ்கள் போல அவற்றின் உலோகத் தகடுகள் வளைந்து நெளிந்தன; ரயர்கள் தீய்ந்து

கின் உயரமான புகைப் போக்கி உருவாகிக்கொண்டிருந்தது. அதனூடு விரைந்து எழும் கரும்புகை எல்லாமாடிகளையும்கெடுக்கவே முனைந்தது.

அருகிலுள்ளகட்டடங்களிலிருந்து தொலைபேசிச் செய்திகள் பறந்தன. தொலைபேசி லைன்களில் உக்கிரமான நெருக்கடி ஏற்பட்டது. செய்திகள் பரவப் பரவ தம் ஆள்களை விசாரிப்பவர்களின் அழைப்புகள் வரத்தொடங்கவும் தொலைபேசிஇணைப்பு கணனிகள்கூட திணறும் நிலைமை.

தீயணைப்புப்படையினரின் குழாய்கள் நீரைப் பாய்ச்சத் தொடங்கியதும் உஷ்ண நீராவி மேலே கிளம்பத் தொடங்கியது. கட்டடத்தையே அது வேகவைத்து விடுமோ என்ற அச்சம் பரவியது.

மேலே மாடிகளில் இருந்தவர்களில் துணிந்த பலரும் மீட்பு நடவடிக்கைகளில்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்களை நாட்டுவோம்

பச்சை நிற மரங்களை—மண்ணை
பண்படுத்தி நாட்டுவோம்!
இச்சையாக யாவரும்
இறைத்து நீரை பாய்ச்சுவோம்!

வைச்ச நல்ல மரங்களை
வளர்த்து வளத்தை பெருக்குவோம்!
நாட்டின் நலத்திற்காகவே
நாட்டி மரங்களைப் பேணுவோம்!

கூட்டில் வாழும் குருவிகள்
கூடி மரத்தில் வாழ்ந்திடவும்
உயிர்கள் வாழ உணவிற்கும்
உழைக்க மரங்களை நாட்டிடுவோம்!

அ. பவித்திரன் —
(நாவற்குழி மகா வித்தியாலயம்)

## பாட்டியும் வடையும்

பார்வதி அவள் பாட்டி
பணத்தில் ஆசை கொண்டாள்
பக்குவமாய் வடையை
பதமாய் சுட்டாள், விற்றாள்!

கர்வம் கொண்ட காகம்
களவாய் வடையைத் திருடி
கவ்விக் கொண்டு பறந்தது
காட்டு மரத்தில் இருந்தது!

கள்ள நரியார் ஒருவர்
காட்டு வழியால் வந்தார்
கட்டை மரத்தைக் கண்டார்
களைப்பால் அங்கு நின்றார்!

மரத்தில் காகம் இருப்பதை
மணத்த வடையால் கண்டார்
மதிய வேளை என்றார்
மகிழ்ச்சியது கொண்டார்!

வடையைப் பறிக்க எண்ணி
வட்டம் போட்டு நின்றார்
வடிவழகு சொன்னார்
வாயால் பாடு என்றார்!

காகம் அதனை நம்பியது
கத்திக் கத்திக் கரைந்தது
கவ்விய வடையும் வீழ்ந்தது
கள்ள நரியோ தின்றது!

## ஆமையும் நரியும்

நரியார் ஒருவர்
நடு நிசி வேளை
நல்ல பசியுடன்
நலிவுடன் வந்தார்

ஆமையைக் கண்டார்
ஆனந்தம் கொண்டார்
அருகிலே சென்றார்
ஆவலாய் நின்றார்

கடும் பசி தீர்க்கவே
கடித்தார் மிதித்தார்
காலால் உதைத்தார்
கவலையும் கொண்டார்

கடினமே என்றார்
கத்தியும் பார்த்தார்
'கடவுளே எனக்கு
கருணை செய்' என்றார்

ஆமையோ சொன்னது
''அன்பனே! நண்பனே!!
ஆற்றிலே ஊறவை;
ஆறிப்பின் உண்டுபார்!''

ஆண்டவன் கிருபை என
ஆனந்தத்துடன் நரி
ஆமையைத் தூக்கியே
ஆற்றிலே போட்டது

ஆறியே பார்த்தது
ஆமையும் போனது
ஆத்திரத்துடன் நரி
''ஆண்டவா!'' என்றது.

— நேமிஷா இராஜதுரை —
(ஆண்டு — 6, வேம்படி மகளிர் கல்லூரி)



## உயர்ந்த ஒட்டகச் சிவிங்கி

உலகிலே வாழும் மிருகங்களில் உயர்ந்தது ஒட்டகச்சிவிங்கியே. தோற்றத்தில் ஒட்டகத்தை ஒத்திருந்ததாலோ என்னவோ இப்பெயர் அதற்கு வந்துவிட்டது.

மிக நீண்ட கழுத்தும் மிக நீண்ட கால்களையும் உடைய இவ்விலங்கு அநேகமாக ஆபிரிக்காக் கண்டத்தில் காணப்படுகின்றது; ஐந்தரை மீற்றர் வரை (சுமார் 18 அடி வரை) உயரம் வரை வளரக் கூடியது.



தனது உயரத்தைப் பயன்படுத்தி மிக உயர்ந்த மரங்களில் இருக்கக் கூடியஇலை, தழைகளைக் கூட உணவாக உட்கொள்ளக் கூடியது ஒட்டைச்சிவிங்கி சில சமயங்களில் புல்வெளிகளில் உள்ள புற்களையும் அது மேய்வதுண்டு ஆனால்சாதாரணமாக நின்ற நிலையில் தலையைக் குனிந்து அதனால் புல்லை மேயமுடியாது. ஆதனால் அத்தகைய சந்தர்ப்பங்களில் காலை அகட்டி, விரித்து பரவ வைத்துக்கொண்டு உடம்பைத் தொய்யப் போட்டு — மிகக் கஷ்டப்படுவது போல — உடலை வருத்துவது போன்ற தோற்றத்துடன் — அது தரையில் இருக்கும் புல், பூண்டுகளை மேயும்.

### பிராணிகள் உலகம்

சிறுத்தைப்புலி போன்று அதன் உடலில் காணப்படும் வர்ணங்கள் பழுத்துக் காய்ந்த மரங்களுக்கு இடையில் ஒளித்து, எதிரிகளிடமிருந்து தப்ப அதற்குப் பெருதவியாக உள்ளது.

பருத்த சரீரத்தை அது உடையது எனினும் வேகமாக ஓடக்கூடியது.

உயரமாக வளர்ந்திருப்போரை ''ஒட்டைக் குச்சி போல, ஒட்டகச்சிவிங்கி போல வளர்ந்திருக்கின்றானே!'' என்று பேசுவதை நீங்கள் கேட்டிருக்கின்றீர்களா?

மிருகக் காட்சிச்சாலையில் ஒட்டகச்சிவிங்கியைப் பார்த்தால் நீங்களும் மலைத்துப் போவீர்கள்! ★

## முல்லாவின் முட்டாள் தனம்


ஒரு சமயம் முல்லாவின் ஊருக்கு அரசர் வருவதாக இருந்தது. ஊர் அதிகாரிகள், ஊரிலுள்ள முக்கியமான சமய அறிவாளிகள் சிலர் மட்டும் மன்னரைச் சந்திக்க ஏற்பாடு செய்தனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரில் முல்லாவும் ஒருவர்.

ஊர் அதிகாரி, அரசரைச் சந்திக்க இருப்பவர்களைக் கூப்பிட்டு அவர்களிடம், ''அரசர் முன் கோபி... எனவே அரசர் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் தான் நீங்கள் விடையளிக்க வேண்டும். அரசரிடம் கேள்வி கேட்பதோ வேறு ஏதாவது பேசுவதோ கூடாது'' என்று கூறி எச்சரித்தார்.

மேலும், பொதுவாக அரசர் கேட்கும் மூன்று கேள்விகளையும் அதற்குச் சொல்ல வேண்டிய பதில்களையும் கூறி முன்னேற்பாடு செய்திருந்தார்.

அரசர் கேட்கும் முதற்கேள்வி, ''உன்னுடைய வயது என்ன?'' என்பதாகும். அதற்குரிய பதில் ''ஐம்பது'' என்று கூற வேண்டும். அடுத்த கேள்வி, ''நீர் சமய நூல்களை எத்தனை ஆண்டு படித்துள்ளீர்?'' என்பதாகும். அதற்கு ''பத்து ஆண்டுகள்'', என்று பதில் கூற வேண்டும். மூன்றாவதாக மன்னர் கேட்கும் கேள்வி, ''ஊர் அதிகாரி, வரி[illegible] அதிகாரி இருவரில்

(XI ஆம் பக்கம் பார்க்க)




சிறுவர், சிறுமியரே!... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபத்தியைந்து வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## மூளைக்கு வேலை

1. எட்டு லீற்றர் பாத்திரம் நிறைய தேங்காய் எண்ணெய் உள்ளது. உங்களிடம் மேலும் ஐந்து லீற்றர், மூன்று லீற்றர் அளவு வெற்றுப் பாத்திரங்கள் உள்ளன. இவற்றை வைத்துக் கொண்டு தேங்காய் எண்ணெய்யை சரியாக இரு பிரிவுகளாக (4 லீற்றர் கொண்டவையாக) இரு பாத்திரங்களில் பங்கிட வேண்டும். உங்களால் முடியுமா? மூளையைக் கசக்கிப் பாருங்கள்.

2. ஒரு வகுப்பறையில் சில மாணவர்கள் இருந்தனர். கோபு அவர்களிடம் போய் நீங்கள் எத்தனை பேர் இருக்கின்றீர்கள் எனக் கேட்டான். அதற்கு அந்த மாணவர்கள் ,'எங்களில் இரு மடங்கையும், எங்களில் அரைவாசித் தொகையையும் அரைவாசியின் அரைவாசியையும், உன்னையும் சேர்க்க மொத்த எண்ணிக்கை 45 வரும்'' எனப்பதிலளித்தனர். அந்த வகுப்பறையில் உள்ள மாணவர்கள் எத்தனை பேர்?

(XI ஆம் பக்கம் பார்க்க)

— சி. கவிதன் —
(ஆண்டு 10, ஹாட்லிச் கல்லூரி)




## உங்களுக்குத் தெரியுமா?

1) உலகில் அதிகப்படியான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் எது?
2) தமிழில் உள்ள நூல்களில் உலகப் பொது நூலாக கருதப்படுவது எது?
3) மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படும் விஞ்ஞானி யார்?
4) 'மனோன்மணீயம்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
5) முதன்முதலில் விண்வெளிக்கு சென்ற இந்தியர் யார்?
6) சூரியன் முதலில் உதிக்கும் நாடு எது?
7) இருண்ட கண்டம் என அழைக்கப்படும் நாடு எது?
8) பாம்புகளில் விசம் அற்ற பாம்பு எது?
9) விழித்துக்கொண்டு தூங்கும் பிராணி எது?

க. தர்மினி
(ஸ்ரான்லி கல்லூரி.)

### விடை

1) பைபிள். 2) திருக்குறள்.
3) கிப்போகட்டீஸ்.
4. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.
5) ராகேஷ் சர்மா. 6) யப்பான்.
7) ஆபிரிக்கா 8) மலைப்பாம்பு.
9) முதலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பீரம்

## கோகுலராகவன்

அன்புத்துரை மாமா என்றால் ஊருக்குள் வெகு பிரசித்தம். ஊருக்குள் இருக்கும் பரம்பரை பணக்காரர்களில் இவரும் ஒருவர். அதனை தனது வாயால் ஒரு நாளைக்கு பத்துத்தரம் சொல்லாவிட்டால் மாமாவிற்கு சாப்பாடு ஜீரணிக்காது. அதுமட்டுமல்ல. அவருடைய தோற்றத்திலும் அவருக்கு சரியான பெருமை.

உண்மையில் அன்புத்துரை மாமாவின் உடலமைப்பு ஓர் ஆஜானுபாகு தோற்றம் தான். ஐந்தடிக்கு குறையாத உயரம்; அகன்ற மார்பு; திடகாத்திரமான தோள்கள்; ஐம்பது வயதினை அடைந்துவிட்ட போதிலும் நரையாத கருகருவென்றுஆட்டுக்கடா மீசை; வெள்ளை வெளேர் என்ற நிறம் நீங்கள் ஒரு கற்பனைசாலியென்றால் அவருடைய தோற்றத்தை கற்பனை செய்துவிடலாம். எப்போதும் வெள்ளை வேட்டி, மஞ்சள் அரைக்கை சேட்...தேசிய உடை.

தன்னுடைய தோற்றத்தை பெருமையடிப்பதில் அன்புத்துரை மாமாவிற்கு ஒரு பொழுது போய்விடும். தன்னுடைய இளமைத் துள்ளல்களை அதுவும் அவருடைய மனைவிக்குமுன்பாக சொல்வதென்றால் அவருக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. அந்த நாள்களில் கோயில் திருவிழா ஒன்றும் விட்டுவைக்காதவர் அன்புத்துரை மாமா. போகும் இடங்களில் எவருடனும் கைகலக்காமல் வீடு திரும்பாதவர் அவர்.

''சுட்டிபுரத்தில் சீர்காழி பாடிக் கொண்டிருக்கிறான். எங்களுக்கு முன்னால்இரண்டு பேர் பெரிய அட்டகாசம். எட்டி கொலரில் பிடித்து உலக்கையால் அடித்த மாதிரி இவ்விரண்டு...ஒரே ஓட்டாய் ஓடிவிட்டான்கள். திரும்பிக் கூட பார்க்கவில்லை''

இப்படி சன்னதியில், வற்றாப்பளையில், புளியம் பொக்கணையில் கோயில்களில் செய்த சண்டித்தனங்களை சொல்லிக்கொண்டே இருப்பார். இவை மட்டுமல்ல ஊரிலும் அன்புத்துரை மாமா எந்த விழாவிலும் கூட்டத்தில் முன் அவர் வராமல் சாமி சப்பறத்தில ஏறாது. அன்னதானம் தொடங்காது. சரி அப்படியில்லை என்று தொடங்கினால் பிறகு அன்புத்துரை மாமாவின் தொல்லை தாங்க முடியாது. இதனால் ஊரார் ஒரு மதிப்பைக் கொடுத்து விட்டார்கள்.

ஊரில் கல்யாண வீடு என்றால் முதற்பந்தியில்தான் அன்புத்துரை மாமா சாப்பிடவேண்டும். சாவீடு என்றால் தேவாரம் பாட அவரைத்தான் முதலில் கூப்பிட வேண்டும். அப்பிடி இல்லையென்றால் அவரிடம் ஒரு சிறு தேவைக்குப் போக முடியாது. அடிக்காத குறையாய் விரட்டி விடுவார். இந்த மரியாதையில் திளைத்து தேவையான உதவிகளை அன்புத்துரை மாமா செய்துவிடுவார். ஊரவர்களும் அவரிடம் கடன் தேவைகள் பெறுவதால் எதுவும் எதிர்ப்பதில்லை. அத்துடன் அவருடைய தோற்றத்திலும் ஊரவர்கள் கொஞ்சம் அடங்கி நடந்தனர்.

தனது தோற்றத்தால் தனக்குக் கிடைத்த மரியாதையில் அன்புத்துரை மாமாவிற்கு சரியான நினைக்க முடியாத பெருமை. அவருக்கு மூன்று பிள்ளைகள். அவர்களில் அவருடையமூத்த மகன்தான் அவரைப்போல். அதனைச் சொல்லி பெருமைப் படுவார்.

''மூத்தவன் ஈசன்தான் என்னைப்போல ஓரளவுக்கு எண்டாலும் சமனாய் நிற்பான்''

''மற்றவன் கணேசன் உன்னைப்போல வரிச்சுத்தடி. உயர்ந்துகொண்டுபோறானே தவிர பெருக்கானாம்''

இது அவருக்கு சரியான கவலை.

மற்றப்பிள்ளை பொம்பிளைப் பிள்ளை. அவளும் சரியான மெல்லிய தோற்றம். இதுவும் அவருக்குக் கவலை.

''இவள் பிள்ளை வினுவை எப்படிக் கட்டிக் கொடுக்கிறது. வாய் காட்டுறாளே தவிர பெருக்காளாம்''

ஆனாலும் தன்னுடைய உடம்பில் ஒரு மெலிவும் வரவிடமாட்டார். இருக்குமட்டும் கம்பீரமாக இருந்து உரிய மரியாதையுடன் இறக்க வேண்டும். தன்னைத் தூக்குபவன்கள் அழுதழுது தூக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்வார். இந்தளவும் போதும் அன்புத்துரை மாமாவின் கம்பீரமான தோற்றப் பெருமைகள்.

இப்படியாக இருக்கும் நாளில் அன்புத்துரை மாமாவின் உறவினர் ஒருவர் அயலூரில் இறந்து போய்விட்டார் என்னும் தகவல் வந்திருந்தது.

சாவீடு என்றால் முன்னுக்கு நிற்கும் மாமா, அதுவும் உறவினர் வீடு என்றால் போகாமல் விடுவாரா?

நன்றாகக் குளித்து வெளுத்த வேட்டி, சேட்டுடன் தனது ''றலி'' சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானார். அவருடைய சயிக்கிள் என்றால் அவருக்கு உயிர் இரவல் கொடுத்து அறியமாட்டார். புதிசு மாதிரி நிற்கின்றது. அதுவும் அவருக்கு பெருமை. அவரைப் பார்ப்பவர்கள் அவரது சைக்கிளை பார்க்காமல் விடமாட்டார்கள்.

சைக்கிளில் ஏறி விரைந்தார். இளந்தாரி மாதிரி இருக்கவேண்டும் என்பதால் கொஞ்சம் வேகமாக ஓட்டினார். வன்னியால் வந்ததிற்குப் பின் அடுத்த ஊருக்கு போகாததால் அந்தப் பாதை அவருக்கு புதிது.

வெளிக்கிடும் போது மனைவி ''புதுப்பாதை பார்த்துப் போங்கோ'' என்று கவனம் சொல்லி இருந்தாள்.

கிறவல் றோட் என்றாலும் நன்றாக சைக்கிள் ஓடியது. வழியில் கண்டவர்கள் எல்லோரும் ''ஐயா துலைக்கோ'' என்றதிற்கு பதில் சொல்லிய வண்ணம் விரைந்து கொண்டிருந்தார்

''இந்த வயதிலும் எனக்கு எவ்வளவு மரியாதை'' தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டார்.

சந்தி ஒன்றில் திரும்ப விரைந்தவர் திடுக்கிட்டுவிட்டார். ஏனென்றால் காவற்கூடம் ஒன்றுக்கு நடுவில் சைக்கிளில் ஓடிக் கொண்டு வந்ததை உணர்ந்து கொண்டு இருக்கும்போது...

''ஏ...ஐயா நில்லு...''

சத்தம் உரத்து காரமாய் வந்தது. அந்தப் பகுதியில் சில நாள்களாய் ஏதோ சம்பவம் நடந்ததால் நிலைமை இறுக்கம். இது அன்புத்துரை மாமாவிற்குத் தெரியாது.

அன்புத்துரை மாமா சைக்கினால் பக்குவமாய் இறங்கி நின்றார்.

''இறங்கி போகவேணும். தெரியாதா...?''

''இல்லை சேர். இந்த பாதைக்கு நான் புதுசு''

''பொய்''

''இல்லை சேர்''

''பார்த்தா பெரிய மனுசன் ஒழுங்கு தெரியவில்லை''

அன்புத்துரை மாமாவிற்கு கைகால் நடுங்கியது. அதனை நன்றாகக் காண முடிந்தது.

கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு—

''இறங்கி போக வேணும் ...இல்லாவிட்டால் உங்களுக்கும் கஷ்டம். எங்களுக்கும் கஷ்டம்''

''...ஓம் சேர்...'',

''சரி பரவாயில்லை போங்க...''

அன்புத்துரை மாமாவிற்கு அப்பத்தான் உயிர் வந்தது. நேரே சாவீட்டுக்கு வந்து நுழைந்தார். இன்னமும் அவருக்கு கலவரம் குறையவில்லை. இப்படி ஒருநாளும்

(XI ஆம் பக்கம் பார்க்க)

---

சஞ்சீவி சிறுகதைகள்

## உடுவில் அரவிந்தன்

முன்விறாந்தையிலேசரிந்து படுத்திருந்த சங்கரப்பிள்ளை ''லொக்கு லொக்'' கென்று இருமினார். இந்த இருமல் கடந்த ஐந்து வருடங்களாக அவர் திரும்பத் திரும்பப் பாடமாக்கிய ஒன்று. பனிக்காலத்தில் இளம் வயதினரையே ஆட்டிப்படைக்கும் இருமல், தள்ளாத வயதுக்காரரைச் சும்மாவிட்டு வைக்குமா?

சங்கரப்பிள்ளைக்கு இப்போது எழுபத்தைந்து வயதாகிறது. குரும்பசிட்டியிலே தரகர் சங்கரப்பிள்ளை என்றால் தெரியாதவர்கள் இல்லை. அந்தளவுக்குப் பிரபல்யம். வெள்ளை உடையணிந்து சந்தனமும் பூசிக்கொண்டு வெளியே புறப்பட்டாரென்றால் ஒரு திருமணத்தை ஒப்பேற்றி விட்டுத்தான் திரும்பி வருவார். நிரம்பின வாய்ச்சாதுரியம்படைத்தவர். தரகர் வேலைக்கு அது கட்டாயம் தேவை. இத்தனை இலட்சத்துக்கு இத்தனை ஆயிரம் என்று தரகுப் பணத்தைச் சுளையாகக் கறந்து விடுவார். இந்த விடயத்தில் அவர் நியாய அநியாயங்களைப்பற்றி யோசிப்பதேயில்லை.

மூன்று பெண்களுக்கும் மூன்று பெரியவீடுகளைக் கட்டி வைத்திருந்தவர். பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் குரும்பசிட்டிப்பகுதி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டபோது எல்லோரும் இடம்பெயர்ந்து ஓட, இவரும் மனைவி, பிள்ளைகளை உடுத்த உடையுடன் கூட்டிக்கொண்டு கொக்குவிலுக்கு வந்தார். அளவான வாடகையுடன் ஒருவீடு கிடைத்தது. மூன்று மாளிகைகளில் மாறி மாறி வாழ்ந்த சங்கரப்பிள்ளை குடும்பத்துக்கு அது ஒத்துவரவில்லை என்றாலும், வெறுங்கையுடன் ஓடி வந்தமையினால் சமாளித்துக் கொள்ள ஓரளவு பழகிக் கொண்டார்கள். முதலில்லாத தொழிலான தரகு வேலை சங்கரப்பிள்ளைக்குக் கைகொடுத்தது. பெரிய வருமானம் என்று இல்லாவிட்டாலும் அன்றாடம் போதுமாயிருந்தது. இடையில் அவரது மனைவி காலமான போதிலும் மூன்று பெண்களின் துணையிருப்பதால் பெரிய இழப்பாக அவருக்குத் தோன்றவில்லை.

[illegible]

குண்டடித்தவர்கள். சுகுணாவாவது தையல் வகுப்பு என்று போய்வந்தவள். மற்ற இருவருக்கும் அது கூடத் தெரியாது. தாய் இறந்த பின்னர்தான் சமைக்கவே கற்றுக் கொண்டார்கள்.

[illegible]

''நோகாமல் கொள்ளாமல் எப்பிடியெல்லாம் இருந்தியள். அறுவார் வீடு வாசலெல்லாம் தரைமட்டமாக்கி... உங்களுக்கு எப்ப விடிவு வரப்போகுதோ?''

அதற்கு மேலே எதுவும் பேச இயலாமல் சங்கரப்பிள்ளைக்குத் தொண்டை அடைத்தது.

''அதுக்கென்னப்பா செய்யிறது? விதி எண்டு விட வேண்டியதுதான்.'' பெருமூச்சுவிட்டாள் சுகுணா.

''பார்த்தியே! நான் மறந்து போய் என்னவோ எல்லாம் கதைக்கிறன். உவன் ஆறுமுகம் உனக்கொரு பெடியனைப் பேசிக்கொண்டு வந்தவன். வாத்தியா இருக்கிறான். பொம்பிளை மட்டும் தந்தாப் போதும் எண்டவனாம். உன்ரை குணத்துக்கு நீ நல்லா இருப்பாயடி பிள்ளை.''

''எனக்கென்னத்துக்கு அப்பா கலியாணத்தை சரோவுக்கு அதைச் செய்யுங்கோவன். அவள் பாவம். ஒரு தொழிலும் தெரியாது. நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ளுவன்.''

பொங்கிவரும் கண்ணீரை மறைக்க மறுபுறம் திரும்பிக் கொண்டாள் சுகுணா.

''சும்மா இருபிள்ளை. உனக்கு அவனைச் செய்து விட்டா நீங்கள் ரெண்டு பேருமே மிச்ச அலுவல்களை ஒப்பேத்திப் போடுவியள். நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவன்''.

''அவர் அவ்வளவு நல்லவரே அப்பா? அப்படியெண்டாச் செய்யுங்கோ. எனக்குப் பூரணச் சம்மதம்.'' என்றவள், கேற்றடியில் ஏதோ ஆரவாரம் கேட்கப் போய்எட்டிப்பார்த்தாள். ஒரு துள்ளலுடன் திரும்பி வந்தாள்.

''அப்பா ஆறுமுகம் மாமா வாறார்'' முகமெங்கும் மகிழ்ச்சித் தீற்றல்களுடன் கூறிவிட்டு உள்ளே ஓடினாள். அவள் ஓடுவதை மன நிறைவுடன் பார்த்துவிட்டு வாசலுக்குக் திரும்பினார் சங்கரப்பிள்ளை.''

இலேசான தள்ளாட்டத்துடன் உள்ளே வந்தார் ஆறுமுகம். இவர் சங்கரப்பிள்ளையின் சீடன். தரகு வேலையில் குருவை மிஞ்சிய குள்ளநரி.

''ஆறுமுகம் வா'' வரவேற்றார் சங்கரப்பிள்ளை. ஆறுமுகம் கிட்டத்தட்ட நிறை வெறியில் இருந்தார். கதிரையில் அமர்வதற்குப் பெரிதும் சிரமப்பட்டு ஒருவாறு உட்கார்ந்து கொண்டார்.

''அண்ணை நல்லாத் தளர்ந்து போனியள். என்ன மாதிரித் திரிஞ்ச மனிசன்! காஞ்ச பயித்தங்காய்மாதிரி... சே!''

''அதுக்கென்னடாப்பா செய்யிறது? நான் செய்த அநியாயம் கொஞ்ச நஞ்சமே கிடந்து அனுபவிக்கிறன்.'' அலுத்துக்கொண்டார் சங்கரப்பிள்ளை.

''தரகுவேலை அநியாயமே அண்ணை? நாங்கள் எத்தினை பெண்புரசுகளைக் கரைசேக்கிறம். நீங்கள் என்ன மாதிரியோ தெரியாது. நான் தொண்டு செய்யிறன் அண்ணை... தொண்டு''

''தொண்டோ...?'' சங்கரப்பிள்ளையர் நக்கலாக இழுத்தார்.

''பின்னை? பாருங்கோவன். அவன் செல்லையாவின்ர பெட்டை நாப்பது வயதாகியும் கரைசேராமல் இருந்தாள். நான் எங்கையெல்லாம் திரிஞ்சு ஒரு திறம் மாப்பிள்ளையைப் பாத்து முடிச்சுவைச்சன்.''

''ஆறுமுகம், நீ ரெண்டு பக்கமும் சுளையா ஐயாயிரம் வாங்கினாய் எண்டெல்லே கேள்வி.''

(X ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறப்பு முயற்சி

ஒரு தகவல் தொடர்

— இறுதி அங்கம் —

முதலாவது 'சுப்பசொனிக்' ஜெட் விமானம் ''X—1'' அமெரிக்காவின் 'பெல்' விமானக் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டு 1943 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 ஆம் திகதி பறக்கவிடப்பட்டது. கப்டன் சாள்ஸ் ஈயீகத் என்ற விமானப்படை அதிகாரியால் கலிபோர்னியாவில் உள்ள ''முறாக்'' (Murack) விமானப் படைத்தளத்திலிருந்து அது செலுத்தப்பட்டது.



போயிங் 247


சுப்பர்சொனிக் விமானங்களின் வேகம் 'மைக்' எனப்படும் அலகு கொண்டு அளவிடப்படுகின்றது. இது ஆஸ்திரிய நாட்டின் இயற்பியல் பேராசிரியரான ''எர்னஸ்ட் மைக்'' என்பவரின் ஞாபகார்த்தமாகக் குறிப்பிடப்படுகிறது. இவரே 'சுப்பசொனிக்' விமான வேகம் பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டவர். விமான வேகத்திற்கும் ஒலியின் வேகத்திற்குமிடையிலான வீதம் 'மைக்' எண் ஆகும். விமானத்தின் வேகம் ஒலியின் வேகம் எனில் 'மைக்—1' எனவும் இருமடங்கு எனில் 'மைக்—2' எனவும் குறிப்பிடப்படும். இலங்கை விமானப் படையிடமுள்ள 'F7' சுப்பசொனிக், 'கிபிர்' என்பன மைக்—2 வேகமுடையன.

பிரிட்டனும் பிரான்ஸும் இணைந்து பயணிகள் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் 'சொன்கோட்' எனப்படும் சுப்பசொனிக் விமானங்களைத் தயாரித்தன.

உலகிலேயே அதிவேகமுடைய, மைக்—3வேகத்தை எட்டக்கூடிய 'கரும்பறவை' (Black Bird) சுப்பர் சொனிக்கை அமெரிக்கா தாயாரித்தது.

பறப்புக்களின் வரிசையில் இறுதியாக அமைவது றொக்கற்றுக்களாகும்.

காற்று ஊதப்பட்ட பலூனொன்றின் வாயைத் திறந்துவிட்டால் காற்று ஒரு விசையுடன் பலூனை விட்டு வெளியேற பலூன் எதிர் திசையில் பறக்கும். இதுவே றொக்கற் தத்துவம்.



போயிங் B17E

'ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிரானதும் சமனானதுமான மறு தாக்கம்' உண்டு என்பது நியூட்டனின் இயக்க விதிகளில் ஒன்று. இதுவே றொக்கற்றுகளில் பயன்படும் செயற்பாடாகும்.

றொக்கற்றில் இரு துவாரங்கள் காணப்படும். ஒரு துவாரத்தின் வழியே உட்



போயிங் 747


ஜெட் விமானங்களில் மற்றொன்று ''போயிங் ஜெட்'' ஆகும். அமெரிக்காவிலுள்ள மரவியாபாரி ஒருவரின் மகனான ''வில்லியம் எட்வேர்ட் போயிங்'' என்பவரின் பெயரினாலேயே போயிங் என்ற பெயர் உருவாகியது. இவர் ''பசுபிக் ஏரோபுரொடெக்ஸ் கொம்பனி'' நிறுவனத்தை ஸ்தாபித்தார். இந்நிறுவனத்தினால் ஆயிரக்கணக்கான போயிங் ஜெட்டுக்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றுள் போயிங் 247 (1993), போயிங் B17E (1941), போயிங் B47 (1947), போயிங் 747 (1966) என்பன ஒரு சில.

செல்லும் எரிபொருள் ஒட்சிசன் வாயு மூலம் எரிக்கப்படும். எரிக்கப்படும் போது அறையினுள் அமுக்கம் கூடும். கூடிய அமுக்கம் மறு துவாரத்தினூடாக வெளியேறும். இதனால் உண்டாகும் விசையினால் றொக்கற் மேல்

தொகுப்பு: ம. அருள்குமரன்
யாழ். இந்துக்கல்லூரி

நோக்கிச் செல்லும். றொக்கற் பயணம் செய்கின்ற தூரம் பின் வரும் காரணிகளாற் தீர்மானிக்கப்படும்.

1. பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள், எரிபொருளின் அளவு.



கொன்கோட்

விமானம் ஒலியை விட வேகமாகப் பயணம் செய்யும் போது ஏற்படுகின்ற அதிர்வலைகள் உயர்ந்த அழுத்தத்தில் வந்து அமுக்கம் குறைந்த காற்றில் திடீரென அதிரும்போது ஏற்படும் இடிமுழக்கம் போன்ற பெரிய ஓசை கேட்கிறது. இது 'சொனிக்பூம்' (Sonic Boom) எனப்படும். 'சுப்பசொனிக்' விமானங்கள் பறந்த காலங்களில் இதை உணர்ந்திருக்க முடியும். 'சுப்பசொனிக்' விமானங்களைப் பொறுத்தவரை அவற்றின் அதிவேகம், மிக உயரம் போன்றன அநுகூலங்களாக இருப்பினும் இவற்றின் பறப்பினால் விண்வெளியில் ஓசோன் படலத்தில் ஓட்டை உண்டாகிறது. இது ஒரு கவலைக்கு உரிய விடயம்.

2. றொக்கற் வடிவமைக்கப்படுகின்ற —

(அ) உலோகம் (ஆ) அளவு (இ) எடை.

றொக்கற்றின் ஆரம்ப கால எரிபொருளாக வெடிமருந்து பயன்படுத்தப்பட்டது. அதன் பின் மதுசாரமும் பின்னர் மண்ணெண்ணையும் பிறகு பெற்றோலும் அதன் பின் ஐதரசனும் பயன்படுத்தப்பட்டன. தற்கால றொக்கற்றுகளில் திரவ ஐதரசன் பயன்படுத்தப்படுகின்றது. எரிபொருளை எரிக்க திரவ ஒட்சிசன் பயன்படுகின்றது.

உலகின் முதலாவது நவீன றொக்கற்றாக கருதக்கூடியது ''V—2'' வகை றொக்கற் ஆகும். இது இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஹிட்லரின் மேற்பார்வையின் கீழ் டாக்டர் வோர்னர்

(IXஆம் பக்கம் பார்க்க)

## எரித்துப் பொசுக்கு - பழம் ஏட்டுச் சுவடியை!

ஏரம்பு செத்த எட்டாம் சடங்கு
எழுந்தனர் மனிதர் இருண்ட நெடும் ஏமத்தில்
வலிந்தொரு கயிற்றில் வலியதோர் கடாவை
கொணர்ந்தனர் கொல்லைப் புறத்தொரு பக்கல்

முன்னிரு கால்களை முடக்கினன் ஒருவன்
பின்னிரு கால்களைப் பிணித்தனன் மற்றவன்
கூற்றுவன் போலொரு கொடியவன் வந்து
குறியாய்ப் பாய்ச்சினன் கொடுவாய்க் கத்தி.

சிதைந்தது நாளம் தெறித்தது குருதி
வதைத்துத் துடித்துப் பலமுறை உதைத்து
ஆவாவென்று அலறிச் சோர்ந்து
அடங்கிய மூச்சில் அமைந்தது சீவன்.

சோறுடன் கிழங்கு சுவையுறு கனிவகை
நாறும் புலாலுடன் நல்லின நீரும்
ஆவின் நெய்யில் ஆக்கிய பண்டம்
ஆகமம் வகுத்த அனைத்தும் படைத்தார்.

செத்தவன் ஆவி சேமம் உற்றிட
செபித்தார் மந்திரம் செய்தார் சடங்கு
துதித்துத் துதித்துத் தோத்திரம் உரைத்து
தொடுவினையோடத் தொழுகை புரிந்தார்.

மனுக்குலம் உய்வுற மாவதை செய்திடும்
மாண்பது கண்டும் மௌனமுற்றனை
எழுந்திடு மனிதா! இன்னுமேன் தயக்கம்?
எரித்துப் பொசுக்கு பழம் ஏட்டுச் சுவடியை!

— வை. சுந்தரேசன் —

## அன்னையவள் தெய்வமடா!

முன்னர்த் தவமியற்றி முந்நூறு நாட்சுமந்து
பின்னர் எமைப்பெற்றுப் பேணிமிகு—அன்போடு
இன்னமுதம் ஊட்டி இடர்களையும் மெல்லியலாம்
அன்னையவள் தெய்வமடா ஆய்!

பாலூட்டித் தாலாட்டிப் பாங்குறவே வைத்தெமக்கு
நூலூட்டி என்றும் நுகைவிலா—ஏலூட்டி
அன்புமுகம் காட்டியெமைக் கட்டி அரவணைக்கும்
அன்னையவள் தெய்வமடா ஆய்!

துன்பம் துடைத்திடுவாள் தூயநெறி காட்டிடுவாள்
இன்பசுகம் தந்திடுவாள் எல்லவர்க்கும்—நன்மைதரும்
அன்புமொழி பேசிநிதம் ஆர்வம் பெருக்கிடுவாள்
அன்னையவள் தெய்வமடா ஆய்!

நன்மை புரிந்திடுவாள் நாளும் பொழுதுமனைத்
தன்மை தழைக்க உழைத்திடுவாள்—இன்புற்றே
இன்னரிய பட்சணங்கள் தந்திடுவாள் இன்னிசைநேர்
அன்னையவள் தெய்வமடா ஆய்!

தனக்கென வாழாத் தனதுசுகம் பேணா
மனத்துக்கண் மாசிலள் ஆகிச் —சினமவித்துப்
பொன்னெனவே போற்றி வளர்க்குமெம் தூயவளாம்
அன்னையவள் தெய்வமடா ஆய்!

(ஏல் - உணர்ச்சி, மகிழ்வு)

— பொலிகை ச. திருப்பதி —

[redacted]

## முகங்கள்

வாலிப இதயங்களின்
அடையாளட்டைப் பைகளில்
இருப்பது
அவர்களின் முகங்கள்
மட்டும் அல்ல!
காதலியின் முகங்களும் தான்
இருக்கின்றது.

— உயிரோவியன் —

## கடவுளின் கழிப்பு!

அதிஷ்டலாபச் சீட்டிழுத்து
அஞ்சு லச்சம் சேர்த்தாச்சு
இளசுகளின் சிரமதானம்
இயன்றவரை செய்தாச்சு
பரியாரி உதவியால்
படையல் பெரிசா படைச்சாச்சு
கனடா, லண்டன் காசும் வந்தது
கும்பாபிசேகம் முடிச்சாச்சு
இடிஞ்ச கோயில் புனரமைச்சு
இஞ்ச உள்ளோர் திறந்தாச்சு......
இன்னும் இந்தக் கணபதியார்
கண் திறக்கா காரணமேன்?

அந்தக் கோயில் மரத்தடியில்
அழுதழுது தாயொருத்தி
அன்ன மின்றி அனுங்கிக் கொண்டு
அழுக்குச் சேலை யுடன் இருக்க,
ஊன முற்ற உயிர்களுக்கு
உடன் பிறந்த ஜீவனுக்கு
உண்ணக் கொடா மனிதனுக்கு
உதவி செய்யா மனமதற்கு......
எண்ணமில்லை இறைவனுக்கு
ஏற்ற வழி செய்வதற்கு.

— மானியூர் ரட்ணேஸ் —

## காடு

ஆதிசக்தி என்பார்
அன்னையென்பார் உன்னை
போதை மிக்கதாலே
புகழ்ந்திடுவார் நன்றாய்
பாதை நெடுங்காடு—
பயங்கரங்கள் சூழ்ந்த
பேய்கள்—பிசாசுகள்
குட்டிச் சாத்தான்கள்—சூழ்ந்த
பாதை நெடுங்காடு
கல்லுடனே முள்ளு
கரடி புலி உண்டு
காடு பெருங்காடு
கையில் காலில் என்றும்
கடமை எனும் விலங்கு
பெண்ணடிமை பேசும்
வேலையற்ற வாதம்
பெற்றவளை வதைக்கும்
பேய்கள் பிசாசுகள் குட்டிச்
சாத்தான்கள் சூழ்ந்த
பெருங்காடு உந்தன் வீடு!

— எஸ். சக்தி —

## நாளையாவது உலைவைக்க வேண்டாமோ?

பொழுது புலரும் போது புட்டியை
யெடு
மாலையானதும் மதுச்சாலைக்குப்
போ

புலாலுண்டு புனிதம் பேசும்
மதுவுண்டு மயங்கு மானிடம்
சிறகில்லா சிறப்பு விலங்கே!
சிந்தனையற்ற நின் செயலால்
சீரழிந்து போனதே நின் குடும்பம்
கடைப்பிறவி நாயும் தொடாதது
தலைப்பிறவி நீயும் ஏன் தொட்ட
உழைக்கும் ஊதியத்தை
உன்னவளிடம் கொடு
நாளையாவது
உலை வைக்க வேண்டாமோ?

— ச. க. சுதர்சனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னுடைய சொந்தங்கள்

நீ கற்றகல்வி உன்னுடைய சொந்தம்
நிழலாகத் தொடருகின்ற நற்பண்பு சொந்தம்
காலத்தால் நீ செய்த உதவிகள் சொந்தம்
கருணையுடன் அதைநினைக்கும் மனங்களும் சொந்தம்
தானங்கள் தருமங்கள் உன்னுடைய சொந்தம்
தரணியை வெல்வோமெனும் நம்பிக்கை சொந்தம்
உறுதுணையாய் நிற்பவர்கள் உன்னுடைய சொந்தம்
உண்மையான நண்பன் மிகஉயர்ந்த சொந்தம்

— வண்ணை செ. பிரசாத் —

## வீசும் காற்று என்றோ ஒரு நாள்....!

ஆண்டாண்டு காலமாய் அந்நிய வர்க்கம் — பின்
ஆளும் வர்க்கமும் போதாதென்று
''அயலார் மூர்க்கமும்'' இடையில் சேர்ந்து,
குட்டக் குட்டத் தலை குனிந்து நிதம்
தட்டுப்பட்டுப் பின் முட்டப்பட்டு,
கட்டுக்குலைந்துயிர் கூட்டை விட்டு
கலைபடும்வரை தமிழன் ''குடிபடவா'' — பலர்
உலைமெழுகாய் தமை உருக்கினரிங்கே?
புரையோடிப் போன ''புக்காரா வீச்சு''; புதுப்புது
''கனரக ஆயுதக் கூச்சல்'' — இன்று
திடுமெனக் குதித்த ''தீர்வுப் பொதிகள்''!
நிகழ்காலத்தில் நடப்பவை இப்படியென்றால்
எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம் இருபடிமேலாய்!
எனினும், ''நடக்கவேண்டியவை சமயத்தில் நன்றாய்
நடந்தே தீரும்'' என்றது வண்ணக் கண்ணனின் கீதை
ஆம்! வீசும்காற்று என்றோ ஒருநாள்
சுதந்திரத் தமிழின் சுந்தர மாதா
மீட்டும் வீணை இசையினிற்கேற்ப
பாட்டுப் பாடும்; பாரெல்லாம் கேட்க!

— அனலையூர்ச் சேந்தன் —

## விற்ற பொருளுக்கு விலை கூறும் விந்தை!

விற்ற பொருள் மீண்டும் ஏற்பதேயில்லை — இது
விற்பனையாளனின் முன்னெச்சரிக்கை.
விற்ற பொருளுக்கு விலை கூறும் வித்தை
பெற்றவர் செய்கின்றார் பொய்யல்ல உண்மை.

ஒப்பந்தம் செய்துதான் சம்பந்தம் ஆச்சு
நிர்ப்பந்தம் தந்தின்றோர் மீள்விலை பேச்சு
சந்தர்ப்பம் பார்த்திங்கு வார்த்தைகள் வீச்சு
சம்பந்தத்தின் சீறலாம் துரத்தலும் ஆச்சு.

வாழ விடுவேனா? வாழ்ந்து பார்ப்பீரா?
கோழை நானென்று குறைத்து மதித்திரா?
ஆளணி எனக்குண்டு யாரெவர் வரட்டும்
மீளவே மாட்டீர் வீழ்வீர் கொலைக்களம்

என்ன அநீதி? எங்கே சமநீதி?
அன்னையே சொல்வாளா மகனை ''அழி'' என்று?
கண்ணீர்த்துளியினில் பெண்ணே குளிக்கிறாள்
ஆண்மகன் அன்னையோ நெருப்பாய்த் தகிக்கிறாள்

தாலி என்பணம் கூறை என்பணம்
கூலி முன்பணம் விலையோ சொப்பனம்
ஆக்குவேன் நான் அழிப்பதும் நானே தான்
என்பணம் இல்லையேல் ஆக்குவேன் பிணம்.

அன்னையா இவள்? அறிவிலி! பிசாசு
பெண்ணையே வதைத்திடும் பேயிது! பெருநஞ்சு!
தென்றலாய் இருக்குமோ திருமண வாழ்க்கை
தோன்றாதோ பெண்ணாய்ப் பிறவா யாக்கை?

— வேலணை ஷணா —

## சரித்திரம் திருப்புகின்றனர்!

பிறந்தநாள் கொண்டாடிப் பிரித்தானிய அப்பம் கொடுப்பர்
மறந்தும்தன் பிள்ளைக்கு மார்பகப்பால் கொடுத்திடார்
திறந்துவாய் பேசும்போது இயல்பாய் 'டடிமம்மி' சொல்லும்
சிறந்த தமிழ்த் தாயடையும் சீரழிவை என்னென்பது?

வேட்டி சால்வை அணிபவர்க்கு ஏதுமில்லைக் கௌரவம்
மாட்டிக்கொண்டால் காற்சட்டை மாண்பும் மதிப்பும் மிகும்
போட்டிபோட்டுச் சீதனமும் பெண்ணும் கொடுத்திடுவர்
ஆட்டிவைக்கும் மோகத்தால் அனர்த்தங்கள் இன்னும் பல!

சேலையை அணியச்சொன்னால் சினந்திடும் இளையநங்கை
மேலைய உடைகள் தம்மை மேன்மையாய் மதிக்கும் பாங்கு
கோலமும் மாறித்தொன்மைக் குணங்களும் மாறி விட்ட
காலமாய்ப் போனவிந்தை களிப்புற வைக்கவில்லை.

குளிர்நாட்டின் கூதல்போக்க கோலவுடை சப்பாத்தணிய
வெளிநாட்டின் மோகத்திலதை விளக்கமின்றிப் பற்றியதனால்
ஒளிர் நாட்டில் அணிந்து அதன் ஒவ்வாமையில் நோய்பட
களிநாட்டம் கொண்டகையோடு அலையலுற்றார் மருந்து தேடி!

நந்தமிழ் நாட்டினில் நல்லபல அரும்பெயர்கள்
செந்தமிழ்க் கருத்துமிளிரச் சிறப்புடைத்தா யிருக்கையில்
பந்தமில்லா வகையமைந்த அந்நியமொழிப் பெயர்கள்
சந்தமில்லா மற்சூட்டிச் சரித்திரம் திருப்புகின்றனர்.

(பிரித்தானிய அப்பம்-'கேக்')

— கு. சி. சுந்தரம்பிள்ளை —

## கவிதை முற்றம்

# அணுக்குண்டு வெடித்தால்

உலக முழுவதும் இன்றுவரை இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அணுஆயுத சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதனால் சுற்றுப் புறச் சூழலுக்கு ஏற்பட்ட படுபயங்கர விளைவுகள் இனி ஒருபோதும் சரி செய்ய முடியாதவை.

இடம்:—அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை. ஜனாதிபதி மற்றும் உயர் அதிகாரிகளின் இரகசியக் கூட்டம் அது. கூட்டத்தின் மத்தியில் வரைபடங்களுடன் நிற்கும் நிபுணர் பேசத் துவங்குகிறார்.

''மதிப்பிற்குரிய பிரமுகர்களே!

''இப்போது நியூயோர்க் நகரில் ஒரு 'தெர்மோநியூக்ளியர்' குண்டு வெடித்தால்என்ன ஆகும் என்பதை விவரிக்க எனக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

''எனது ஆய்வு முடிவுகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

''குண்டு வெடித்த அடுத்தகணம் பயங்கரப் புயல் வீசும். அந்தப் புயலுடன் ஒப்பிடுகையில் இது வரை வீசிய புயல்கள் எல்லாம் தென்றல் போன்றவை. சுமார் ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் வீசும் இந்தப் புயலில், நகரின் மிகப் பெரிய கட்டடங்கள், 'பிளைவுட்' பலகைகள் போல வானில் பறக்கும். புயல் வீசும் கணத்திலயே நகரெங்கும் ஒரே சமயத்தில் தீப்பற்றியெரியும். கிட்டத் தட்ட உவமை சொல்வதென்றால் ஒரு தீப்பெட்டியின் குச்சிகள் அத்தனையும் பெட்டியோடு எரிவது போல நகரம் முழுவதும் எரியும்.

''நகரத்தின் இந்த வரைபடத்தைப் பாருங்கள். இதில் நான் மூன்று வட்டங்கள் வரைந்துள்ளேன். முதலிலுள்ள சிவப்பு வட்டத்தில் உள்ள கட்டடங்களிலுள்ள பொருள்கள் அனைத்தும் குண்டு வெடித்ததும் வெளிவரும் வெப்பத்தில் ஆவியாகிவிடும். மனிதர்களைப் பற்றி சொல்ல வேண்டியதேயில்லை. அடுத்ததாக, உள்ள நீல வட்டத்திலுள்ள அனைத்து மனிதக் கூட்டமும், கட்டடங்களும், பொருள்களும் உருகி அழியும். மூன்றாவதாக, மஞ்சள் வட்டத்தில் உள்ள மனிதர்கள் பயங்கரத் தீப்புண்களோடு செத்துப்போவார்கள். கட்டடங்கள் தூள்தூளாகச் சிதறும். குண்டு வெடிப்புக்குப் பிறகு நகரத்தின் இடிபாடுகளை அகற்ற மட்டும் சுமார் 150 வருடங்கள் பிடிக்கும். குண்டு வெடிக்கும் போது ஒருவர் கூடத் தப்பமுடியாது. குண்டு வெடிப்பை அடுத்து நகரெங்கும் வியாபிக்கும் மின்காந்த அலைகளின் காரணமாக மின்சாரம் முற்றிலுமாய் நின்று போய்விடும். கார்களின் பாட்டரிகள் இயங்காததால் எவரும் கார்களில் ஏறி வேறு இடங்களுக்குத் தப்பிச்செல்ல முடியாது.''

திடீரென ஓர் அதிகாரி குறுக்கிட்டார்.

''ஐயா, போதும்...போதும். மொத்தமாக என்ன ஆகும் என்பதை மட்டும் சொல்லுங்கள்!''

''சொல்லுகிறேன் சுருக்கமாகச் சொல்லுகிறேன். நியூயோர்க் நகரம் உலகிலிருந்து முற்றிலும் துடைத்து அழிக்கப்பட்டு விடும்.''

காலதூதனின் ஊழித் தீர்ப்பைக் கேட்டது போல அத்தனை அதிகாரிகளின் முதுகுத் தண்டுகளும் சில்லிட்டன.

மேற்கண்ட காட்சி நிஜத்தில் நடந்ததல்ல. லாரி காலின்ஸ், டாமினிக் லாப்பியர் இருவரும் இணைந்து எழுதிய 'ஃபிப்த் ஹோர்ஸ்மேன்' என்ற நாவலின் ஒரு பகுதி. ஆனால் இதில் தெர்மோ நியூக்ளியர் குண்டு வெடிப்பின் விளைவு பற்றிக் கொடுக்கப் பட்டுள்ள விவரங்கள் உண்மை. உண்மை. உண்மை. உண்மையைத் தவிர வேறில்லை. தெர்மோ நியூக்ளியர் குண்டுகள் அணு குண்டுகளை விட நூறு மடங்கு சக்தி வாய்ந்தவை. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் தேதியன்று காலை 8.15 மணி அமெரிக்க ராணுவத்தால் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய இரண்டு ஜப்பானிய நகரங்களின் மீது வீசப்பட்டவை அணுகுண்டுகள் தான். 15 தொன் எடையேயுள்ள சிறிய குண்டுகளான இவை ஏற்படுத்திய அலங்கோலங்களே படுபயங்கரமானவை. இவற்றை மனிதகுலம் என்றுமே மறந்துவிடாது.

தெர்மோ நியுக்ளியர் குண்டுகளின் விளைவுகளோ கற்பனைக்கும் எட்டாதவை.

ஹிரோசிமா — நாகசாகி நகரங்களில் லட்சக்கணக்கானவர்களின் உயிர்களைப் பலி கொண்ட இரு அணுகுண்டுகள் ஏற்படுத்திய வெப்பம் பத்துலட்சம் டிகிரியையும் தாண்

(XI ஆம் பக்கம் பார்க்க)

# அறிவு பூர்வமான அன்பே ஆக்கம் தர வல்லது!

''உங்கள் மீது எனக்கு அளவு கடந்த அன்பு'' என்று யாராவது கூறினால், அதை அலட்சியமாக நினைத்துவிடக் கூடாது. அது கொஞ்சம் 'சீரியஸ்' ஆன விஷயம்.

அளவுக்கு மிஞ்சினால் எதுவுமே இடைஞ்சல்தான். அன்பும் அப்படித்தான்.

'அதிகமாக அன்பு வைத்தால் அது எப்படி கெடுதல் செய்யும்?' என்று உங்களுக்கு சந்தேகம் வரலாம்.

தசரதன் கதை என்ன ஆயிற்று?

கைகேயின் மீது தசரதன் கொண்டிருந்த அளவு கடந்த அன்பு... ராமனைக் காட்டுக்குப் போகும்படி செய்தது.

தசரதன் எப்படிப்பட்ட அரசன்! கம்ப ராமாயணத்தில் விசுவாமித்திரர் கூறுகிறார்.

''என்னைப் போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவது கஷ்டம் வந்தால், முதலில் முருகனிடம் போவோம். பிறகு பரமசிவனைப் பார்ப்போம். அதன்பிறகு திருமாலிடம் செல்வோம். அதன்பின்னர் பிரமன், இந்திரன் ஆகியவர்களைச் சென்று பார்ப்போம். இவர்கள் அனைவராலும் எங்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டால் அயோத்திக்கு வருவோம். உன்னைவிட்டால் எங்களுக்கு வேறு கதி உண்டோ?'' என்று தசரதனைப் பார்த்து விசுவாமித்திரரே கூறுகிறார்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த அரசன் தசரதன், கைகேயின் காலில் வந்து விழுகிறான்! ''உன் பாதங்களைத் தொட்டுக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்... ராமனைக் காட்டுக்கு அனுப்பாதே!'' என்கிறான்.

தசரதனுடைய இந்த அவல நிலைமைக்கு என்ன காரணம்?

அவன் கைகேயி மீது வைத்த அளவு கடந்த அன்புதான் காரணம்.

இப்போது சொல்லுங்கள்; அன்பாக இருந்தாலும் அது அளவுக்கு மீறிப் போனால் கெடுதல் செய்யுமா... செய்யாதா? அது மட்டுமல்ல...

அளவு கடந்த அன்பு, நீதிக்கும் நியாயத்திற்கும் புறம்பான காரியங்களையும் செய்யும் நிலைக்கு ஒருவனைக் கொண்டு போய் தள்ளிவிடும்.

தசரதன் மிகவும் சிறந்த நீதிமான். தர்மத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்யாதவன். அத்தகையவன் தன் மனைவியைப் பார்த்து என்ன சொல்கிறான் தெரியுமா?

''உனக்காக நான் என்ன செய்ய வேண்டும். சொல்...செய்கிறேன். ஒரு குற்றமும் செய்யாத ஒருவனைக் கொல்ல வேண்டுமா? கொல்கிறேன்!

''மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை விடுதலை செய்யச் சொல்கிறாயா... செய்கிறேன்!

''எந்தப் பிச்சைக்காரனையாவது கோடீஸ்வரனாக்கச் சொல்கிறாயா ... ஆக்குகிறேன்! அல்லது கோடீஸ்வரனைப் பிச்சைக்காரன் ஆக்க வேண்டுமா...ஆக்குகிறேன்'' என்று சொல்கிறான்.

நீதிக்கு விரோதமான இந்தப் பாவங்களைச் செய்வதற்கு அப்படிப்பட்ட அரசன் எப்படித் துணிந்தான்? மனைவி பேரில் வைத்த அளவு கடந்த 'அன்பு' தான் காரணம்.

''திரிசூலம், வஜ்ராயுதம், வாள்போன்றவற்றால் தாக்கப்பட்டால் கூட அதையெல்லாம் கொஞ்சம்கூட லட்சியம் செய்யாத ஒருவன் காமதேவனுடைய மலர் அம்புகள் தாக்கினால்...அதை அவனால் தாக்குப் பிடிக்க முடிவதில்லை...விழுந்து விடுகிறான்.

(IX ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

அடுத்த நேரத்து உணவு கேள்விக் குறியாக, நாளைய உழைப்பு நிச்சயமற்றதாக குடிசையிலே கூழ் குடித்து மனைவியோடு கொஞ்சிக் குலவி வாழ்பவன் வாழ்க்கை சலனமற்ற நீரோடை போலச் செல்வதும் உண்டு.

அவன் பாடுபட்டு கொண்டு வந்ததில் பாதியை நாளைக்கென ஒதுக்கிவைத்து, அன்புப் பால் வார்த்து அவள் ஆக்கிவைத்த கஞ்சியை சேர்ந்து குடிப்பதில் உள்ள நிம்மதி உலகில் வேறெங்கும் கிட்டாது. இங்கேதான் மண்குடிசை கோபுரத்தை விஞ்சிவிடுகிறது.

மனைவிக்குப் பண்பு — மாண்பு வாய்த்து விட்டால் இந்த வாழ்விலும் இல்லாத சுகமென்று எதுவுமே இருக்காது. மனதுக்கு ஆறுதல் இருக்கும். இல்லாமை என்று எதுவுமே உணரப்பட மாட்டாது.

எல்லாச் சுகமும் வசதியும் பெருகி வாய்த்த வாழ்விலும் இல்லவள் பண்பு சற்றுக் குவறவுபடுமானால் வீட்டுப் பக்கம் போகவே மனமிருக்காது.

கடுகடுத்த முகத்தினளாய் வெடுசுடுவெனப் பேசி அவள் பழகி வந்தால் இதயத்தே முட்கள் தைக்கும் போது பிற சுகங்கள் என்ன இருந்தும் என்ன லாபம்?

அவள் செயல்களில் சற்றுச் சந்தேகம் பிறக்குமானால்— பண்பில் எவ்வகையாதல் குறைவு ஏற்படுமானால் அவள்—இனிக்கஇனிக்கப் பழகித்தான் என்ன சுகம்?

அவள் மாணாக்கடை — உதவாத போது வீட்டில் என்ன இருந்தும் என்ன லாபம்?

இல்லவள் — மனைவியானவள் மாண்பானால் வீட்டில் இல்லாதது என்ன? அவள் மாண்பு குறைந்தால் அங்கே உள்ளது என்ன? என்று கேட்கிறார் வள்ளுவர்.

இல்லதென் இல்லவள் மாண்பானால்
உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.

—0053

(வாழ்க்கைத் துணை நலம்)

— அம்பிகைபாகன் —

# இந்த வார இராசி பலன்

## [28 - 03 - 1998 முதல் 03 - 04 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சூ செ சந். பு சனி | | | |
| வி கே | இராசிச் சக்கரம் | | |
| வெ | | | ரா |
| | | | |

மாற்றம்:

31–3–1998இல் கும்ப இராசியில் வெள்ளி மாறும். 3–4–1998 இல் மேட இராசியில் செவ்வாய் மாறும். உத்தரட்டாதி நட்ஷத்திரம் மீனம் இராசியில் உதயமாகும்.

(தொழில்ஸ்தானம் என்ற இடத்தில் மாணவர்கள் மட்டும் கல்வி என மாற்றி வாசிக்கவும்)

இந்திய அரசியல் பீடத்தில் புதியவர்கள் இடம் பிடிப்பார்கள். இலங்கை அரசியலில் கருத்து மோதல்கள் உச்சக்கட்டம் அடையும். இழப்புகள் பேச்சுவார்த்தைகளுக்கு யோசனைகளை ஏற்படுத்தும்.

உலகில் கிழக்கு நாடுகளில் இயற்கை, செயற்கை அழிவுகள் மேலிடும். மேற்கு நாடுகளில் அரசியல்வாதிகளுக்குள் கருத்து வேற்றுமை வரும். மத்திய கிழக்கில் திரும்பவும் யுத்த அபாயங்கள் தோன்றும்.

மேடம்: அதிகம் யோசிக்கிறீர்கள். ஏழரைச்சனி வீட்டைப்பற்றி அதிகம் சிந்திக்கச் செய்யும். வரவு செலவு மாறிமாறி வந்தபடி இருக்கும். சண்டை என்றால் சண்டை; சமாதானம் என்றால் சமாதானம் என அடிக்கடி சொல்லும் நீங்கள் எதையும் எதிர்கொண்டு எதிர்த்துப் போராடி வெற்றி அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் எதிர்பார்த்தவை நடவாது விட்டாலும் ஓரளவு சமாளிக்க முடியும். விதியை மதியால் சமாளிக்க தெய்வ வழிபாடு செய்து வந்தால் முடியாதது எதுவுமில்லை. நாரிப்பிடிப்பு, கைகால் நோ, அதிக உழைப்பால் ஓடியாடித் திரிவதனால் களைப்பு, உஷ்ணபீடைகள், குடல் சல வருத்தங்கள் வந்தால் வைத்தியம் செய்தால் சுகம் கிடைக்கும். எதிர்பாலாரின் சொத்துவழிப் பிரச்சினை ஒன்று சிந்தை கொள்ளச் செய்யும் என்பதை மறவாதீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன்.

இடபம்: எதையும் தாங்கும் மட்டும் தானே தாங்க முடியும் எனச் சொல்லுகிறீர்களா? உலகத்தில் சாதனை படைத்தவர்கள் எல்லோரும் வேதனைப்பட்டுத்தான் வந்தவர்கள். எனவே துணிந்து செயற்படுங்கள். வெற்றி நிச்சயம் தேடி ஓடிவரும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகளும், மேலதிகாரிகளின் அனுசரணைகளும் கிடைக்கும். எதிர்ப்பாலாருடன் ஏட்டிக்குப் போட்டியாக இருக்கிறீர்கள். கலை நிகழ்ச்சிகள், ரி. வி. பார்ப்பதில் காலத்தை செலவு செய்வீர்கள். சங்கீதப்பிரியர் அல்லவா நீங்கள்? சாப்பாட்டில் சட்டுப்பாட்டுடன் இருங்கள். இருதய நோய்கள், சிறுநீரக நோய்கள் சிலரை வருத்த இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

மிதுனம்; படுத்திருந்த காளைக்கு பக்கத்து வீட்டுப் பையன் கல் எறிந்தால் என்ன செய்யும்? அது மாதிரி உங்கள் நிலை. அவசரப்பட்டு சீறிச்சினக்காமல் அவதானமாக இருந்து கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் அளவறிந்து பேசுங்கள். எதிர்ப்பாலாரை எதிர்க்காமல் நடவுங்கள். அது இது என்று அடிக்கடி ஒரு விஷயம் பற்றி அலுத்துக் கொள்ளாதீர்கள். எது நடந்தாலும் இறைவன் செயல் — கிரகங்களின் வழி—என மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். திடீர் திடீரெனவரும் கோபத்தையும், வேகத்தையும் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். எதிலும் ஒரு புதுமையைக் காணத் துடிப்பீர்கள். கைகால் பிடிப்பு தலையிடி — இருக்கும். சாப்பாட்டைக் கொஞ்சம் கவனியுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

கடகம்; சிரித்து வாழ்பவர்கள் நீங்கள். ஒருபக்கம் அதிகாரம்; ஒருபக்கம் அமைதி தவழும் முகம் கொண்டவர்கள் நீங்கள். தொழில் ஸ்தானத்தில் அதிக செலவுகள் ஏற்படும். வீட்டைச் சுற்றி சுற்றி அழகுபடுத்தியபடி இருக்கும் நீங்கள் சொந்த வீட்டிலேயே இருந்தால்தான் நிம்மதி — இடம்பெயர்ந்து நாம் பட்டபாடு போதாதா என அடிக்கடி சொல்லுவீர்கள். சாப்பாட்டைக் கவனியுங்கள். எதையும் கிரகித்து அறியும் நீங்கள் முன்கூட்டியே ஊகித்து அறிந்து கொள்ளுவீர்கள். களைப்பு, சலிப்பு. கைகால் சோர்வு, நெஞ்சு படபடப்பு சர்வ சாதாரணம். தெய்வ வழிபாடு மனச்சாந்தி தரும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

சிங்கம். எந்த விஷயத்தையும் திட்டமிட்டுச் செயற்படும் நீங்கள் திறமைசாலிகள். நீதி — தர்மம் தவறாதவர் எனப் பெயர் எடுப்பவர்கள். ஆயினும் எதனைப் பெரிதாக எண்ணி எண்ணி ஏங்கினீர்களோ, அதுவே உங்களை வந்து வருத்தும். தொழில் ஸ்தானத்தில் கவலைதரும் நிகழ்வுகளும் போட்டிகளும் ஏற்படும். சமாளித்துக் கொள்ளுங்கள். இதுவரை உள்ளத்தை வருத்தி வரும் ஒரு நிகழ்விலிருந்து விடுதலை கிடைக்கும். உஷ்ண பீடைகள்; அடிக்கடி நெஞ்சு படபடக்கும்; உடல் வலிகள் சொடுக்கும். சனீஸ்வரனுக்கு பிரீதியும் குல தெய்வ வழிபாடும் முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்;புதன்.

கன்னி:– எப்பொழுதும் சுறுசுறுப்புடன் ஓடி, ஓடித் திரியும் நீங்கள் உழைப்பில்—உங்கள் அலுவல்களில்—கண்ணாக இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் இருக்க இடம் உண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும் பெரியளவில் இருக்காது. குடும்பத்தினரின் சுகவீனங்களுக்காக அதிக செலவுகள் செய்வீர்கள். சளி, விஷபீடைகள், வாய்வு, விறைப்பு, கர்ப்ப அல்லது மூல உபாதைகள் சிலருக்கு வருத்தலாம். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைப்பட இடம் உண்டு. அடிக்கடி முறுகல் நிலைகள் ஏற்படும். சமாளித்துக் கொள்ளுங்கள் அதிக தூரங்களுக்கு பிரயாணங்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன்.

துலாம்:– எந்த விஷயத்தையும் எதிர்திசையில் நின்று அணுகுவீர்களாமே நீங்கள்? தொழில் ஸ்தானத்தில் ஊக்கத்திற்குத் தகுந்த உயர்வுகள் கொடுக்கும். கைக்

## மகாதேவா ஜோதிடம்


நல்லூர்

கெட்டினாலும் வாய்க்கு எட்டாத நிலைகள் ஏற்படச் செய்யும். மாறிமாறி ஏதாவது அலுவல்களில் ஈடுபட்டபடி இருப்பீர்கள். உழைப்பில் ஊக்கமிருந்து கொண்டிருக்கும். விறைப்பு, சளி, ... வருத்தியபடி இருக்கும். தகுந்த வைத்தியம் செய்து

(Xஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம்

# புதிர்ப் போட்டி இல. 43



சொற்சிலம்பம் இல. 43
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................
..................................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 03 — 04— 1998

### இடமிருந்து வலம்

1. நவரத்தினங்களில் ஒன்று. 5. மேலாக. 7. சங்கீதத்தில் பதத்தில் ஓர் உறுப்பு. 8. பொருத்தமற்றது அல்லது கெடுதி. 9. மிடி. 11. இவன் ஒரு மகாகவி. 13. பாண்டவருள் ஒருவன். 15. கிழமை. கிரகமும் கூட. 16. பசுவில் சிறியது. 17. வதனம். 18. ......ச் செய்தால் தண்டிக்கப்படுவர். 20. குடியைக் கெடுப்பது. 22. உப உணவுப் பொருள்களில் ஒன்று. பூ வரிசையிலும் சேரும். 23. பரி.

### மேலிருந்து கீழ்

1. சினம். 2. கீழ் அல்ல. 3. புண்ணிய இடம். 4. குரங்கு. 5. உயர்ந்த தன்மை. 6. கேள்வி. 8. கடைசி. 9. ஓர் எல்லை அளவு. 10. ஞானி. 11. ......காரியம் செய்யாதே! 12. உடல். 13. பெரிய தேர் போன்ற வண்டி. 14. தைரியம் கொள்ளுதல். 15. இணங்கு. 19. நோ. 21. மதிப்புக்குரியவர்.

### சொற்சிலம்பம் 41 — முடிவுகள்

#### இடமிருந்து வலம்

1. திரட்சி. 4. கூம்பு. 6. ருசி. 7. சுமார். 9. குகன். 10. தலைமயன். 12. தன். 13. சாவி. 14. பாதி. 15. என்பு. 17. களை. 18. குறி. 19. அப்பயம். 20. தபால். 22. திடும். 23. கல்வி.

#### மேலிருந்து கீழ்

1. திருகுதல். 2. ரசிகன். 3. சிசு. 4. கூர்மை. 5. புதன். 8. மாதவி. 11. யமன். 13. சாதி. 14. பாளையம். 15. எறிதல். 16. புயல். 17. கபடு. 19. அதி. 21. பாவி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:–

★ முதற்பரிசு: சிவரூபி மகாலிங்கம்,
235, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: கு. ஸ்ரீபாலன்,
30, பேரின்பநாயகம் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: சி. விசுவநாதர்,
முதலியா வளவு,
மாதனை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 42 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை இலக்கியத்தில் கவிஞரின் உளக்குறிப்பு

அகராதியில் சொற்களுக்கு நேர்ப்பொருள் இருக்கும். ஆனால் கவிதையில் அப்படி அல்ல. சிலஇடங்களில் நேர்ப் பொருள் இருக்கும். சில இடங்களில் கவிதை மூலம் கவிஞர் என்ன சொன்னார் என்பதைக் குறிப்பால் உணர வேண்டி இருக்கும்.

புறநானூற்றில்

பாண்டியன் நெடுஞ்செழியன் மிக இளம் வயதிலேயே ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். தலையாலங்கானம் என்னும் இடத்தில் தன்னை எதிர்த்த இரு பெருவேந்தரையும் வேளிர் ஐவரையும் போரில் வென்றான். இதனால் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் ஆனான். இவன் மிக இளம் வயதிலேயே செய்தபோரைப் பாடுகிறார் இடைக்குன்றூர்க்கிழார் என்னும் புலவர்.

''அவன் சிறுவர் அணியும் தொடி என்னும் அணியை நீக்கினான். வில்லைக் கையில் எடுத்துப் போரை வரவேற்றுத் தேரில் நின்றான். குழந்தைப் பருவத்தில் அணிந்த தாலி என்னும் அணியை அவன் இன்னும் களையவில்லை. பால் குடிப்பதை விட்டு இன்று தான் சோறு உண்ணத் தொடங்கினான்'' — என்கிறார்.

''குறுந்தொடி கழித்தகை
சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடுஞ்சி
பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்க அவன்
கண்ணிதார் பூண்டு
தாலி களைந்தன்றும்
இலனே பால் விட்டு
அயினியும் இன்று
அயின்றனனே!

இந்தப் புறநானூற்றுப் பாடலுக்கு நேர்ப்பொருள் கொள்ளலாமா?

பால்குடி விட்டு இன்று தான் சோறு உண்டவன் போரில் இருபெரு வேந்தரையும் வேளிர் ஐவரையும் வென்றான் என்றால் யாராவது நம்புவார்களா?

கவிதை ஐந்தும் மூன்றும் எட்டு என்று சொல்லும் கணக்குப் பாடம் அல்ல: ஒரு செய்தியைக் கற்பனைத் தேன் கலந்து சுவைபடத் தருவது. கவிதை மூலம் கவிஞர் சொல்ல வந்ததைக் குறிப்பால் உணர வேண்டும். மிகச்சிறு பராயத்திலேயே பாண்டியன் இருபெரு வேந்தரையும் வேளிர் ஐவரையும் வென்றான் என்பதைப் புலவர் குறிப்பால் உணரவைத்தார்.

சீவகசிந்தாமணியில்

சீவகசிந்தாமணியில் நாட்டு வளம் பற்றிய ஒரு பாடல், முற்றத்தில் காயவிட்ட நெல்லுக்குக் காவல் இருக்கும் பெண்கள் நெல்லைத் தின்ன வரும் கோழிகளைத் தமது காதில் அணிந்திருந்தகுழைஎன்னும் ஆபரணத்தைக் கழற்றி எறிந்து கலைத்தார்கள் என்று கூறுகிறது. தங்கத்தால் செய்த காதணியைக் கழற்றி எறிந்து கோழி கலைத்தார்கள் என்றால் இதற்கு நேர்ப்பொருள் கொள்ளலாமா? இப்பாடல் மூலம் சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவரின் உள்ளத்தைக்காண காணவேண்டும். அவர் சொல்லவந்தது— செல்வ வளம் மிகுந்த நாடு என்னும் கருத்தே

பொற்சிறு தேர்மிசை
பைம்பொற் போதக
நற்சிறார் ஊர்தலில்
நங்கைமார் வீரீஇ
உற்றவர் கோழிமே
லெறிந்த ஒண் குழை
மற்றத்தேர் உருள்
கொடா வளமை சான்றவே.

திருக்குறளில்

இதே போலத் திருவள்ளுவரும் சில இடங்களில் கற்போர்கள் குறள் மூலம் தன்னுள்ளத்தைக் குறிப்பால் காணுமாறு செய்திருக்கிறார். உதாரணத்துக்கு இரண்டு இடங்களைப் பார்ப்போம்.

''பெயக்கண்டும் நஞ்சு உண்டு
அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்''

இதன் நேர்ப்பொருள் தம்மோடு பழகியவர்கள் தமக்கு நஞ்சிடுவதைக் கண்ணாற் கண்டும் கண்ணோட்டம் காரணமாக மறுக்காது நஞ்சை உண்டு நஞ்சிட்டவரோடு பின்னும் விரும்பிப் பழகுவர் என்பதாகும்.

நஞ்சை உண்டவர் இறந்து விடுவாரே! பிறகு எப்படி நஞ்சிட்டவரோடு பின்னும் மேவி இருப்பர்?

எனவே இக்குறளின் நேர்க் கருத்தைக் காணாது குறள் மூலம் வள்ளுவரின் உள்ளத்தைக் காணவேண்டும்.

வள்ளுவர் இக்குறள் மூலம் சொல்ல வந்தது ''கொன்றன்ன இன்னா செய்யினும்'' பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பதையே ''கொன்றாலொத்த இன்னாதவற்றைச் செய்தாலும் பொறுத்துக்கொள்ளலே கண்ணோட்டம்'', என்பதாகும்.

வைக்கும் கட்டிலில் படுப்பது கொலைத் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அவ்வேளை அரசன் அங்கே வந்தான். புலவர் உறங்குவதைக் கண்டான். தமிழ் மொழியையும் தமிழ்ச் சான்றோரையும் அரசன் மதிப்பவனாதலின் புலவர் மீது கோபம் கொள்ளவில்லை. கண்ணோட்டம்மிக்க அரசன் கவரியை எடுத்தான். உறக்கத்தாலும் புழுக்கத்தாலும் வியர்த்திருந்த புலவருக்கு குளிர்ந்த காற்று படுமாறு கவரி வீசினான்.

கொலைத் தண்டனைக்குரிய குற்றத்தை புரிந்த புலவருக்கு அது செய்யாது கவரி வீசிய அரசன் ''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தகு நாகரிகம் வேண்டுபவர்'' என்னும் குறளுக்கு விளக்கமாகினான். புலவரே அரசனின் கண்ணோட்டத்தை வியந்து பாடிய புறநானூற்று அடிகள் இவை:—

''மாசற விசித்த
வார்புறுவள்பின்
மை படுமருங்கில்
பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி
யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு
பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை

**- புலவர் ம. பார்வதிநாதசிவம் -**

இக்குறளுக்கு முன்னால் இருக்கும் குறள்—

''ஒறுத்தாற்றும் பண்பினார்
கண்ணும்
கண்ணோடிப் பொறுத்
தாற்றும்
பண்பேதலை''

என்பது ஆகும்.

தம்மை ஒறுக்கும் இயல்புடையாரிடத்தும் கண்ணோட்டம் உடையவராய்க் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே தலையாயது.

எனவே திருவள்ளுவர் கண்ணோட்டம் என்பது ''பொறுத்தாற்றும் பண்பு'' என்று வலியுறுத்துகிறார்.

இக்குறளில் பொறுத்தாற்றும் பண்பே கண்ணோட்டம் என்று நேரடியாகக் கூறிய திருவள்ளுவர் பெயக்கண்டும் என்னும் குறளில் நஞ்சிடுதல் போன்ற செயலைச் செய்யினும் பொறுத்துக்கொள்வர் எனக் குறிப்பாகக் கூறினார்.

பெருஞ் சேரல்
இரும் பொறை

திருவள்ளுவர் கூறும் பெயக்கண்டும் நஞ்சுண்டமையும் கண்ணோட்டத்தை சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறை என்னும் அரசனிடத்துக் காணக்கூடியதாக உள்ளது.

மோசிகீரன் என்னும் புலவர் பெருஞ் சேரலிரும் பொறையைக் காண அவனது அரண்மனைக்குச் சென்றிருந்தார். புலவர் சென்ற நேரத்தில் அரசன் அரண்மனையில் இல்லை. முள்ளும் கல்லும் நிறைந்த பல காடுகளையும் கடந்து சென்ற மோசிகீரனார் நடந்ததினால் தளர்ச்சியும் களைப்பும் அடைந்திருந்தார்.

களைப்படைந்திருந்த அவர் அங்கே ஒரு கட்டில் இருந்ததைக் கண்டார். கழுவிவருவதற்காக முரசு வெளியே கொண்டு செல்லப்பட்டிருந்ததால் கட்டில் வெறுங் கட்டிலாக இருந்தது. அதனால் அது முரசுவைக்கும் கட்டில் என்பது புலவருக்குத் தெரியாது.

களைப்படைந்திருந்த புலவர் அசதிகாரணமாகக் கட்டிலிற் படுத்தார். சிறிதுநேரத்தில் உறங்கிவிட்டார். முரசு

யுருகெழு முரசம்
மண்ணிவாரா
வளவையெண்ணெய்
நுரை முகந்தன்ன
மென்பூஞ் செக்கை
அறியாதேறிய
என்னைத் தெறுவர
இருபாற் படுக்கு நின்
வாள்வாயொழித்ததை
அதூ உஞ்சாலுநற்
றமிழ் முழுதறிதல்
அதனொடுமமையா
தணுகவந்துநின்
மதனுடைமுழவுத்
தோளொச் சித்தண்ணென
வீசியோயே''

வித்தும் இடல்
வேண்டும் கொல்லோ

இந்தக் குறளுக்கும் நேர்ப்பொருள் கொள்ளாமல் குறள் மூலம் தன் உள்ளத்தைக் காணச் செய்துள்ளார்.

வித்தும் இடல் வேண்டும்
கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான்புலம்.

இக் குறளின் நேர்ப்பொருள் முன்னே விருந்தினரை உண்பித்துப் பின் மிச்சத்தை உண்பவனது வயலுக்கு விதை நெல் விதைக்கவும் வேண்டுமா? வேண்டாம் என்பதாகும்.

நெல் விதைக்காமல் வயலில் நெற்பயிர் வளருமா?

ஊரார் பிள்ளைக்கு எண்ணெய் தடவத் தன் பிள்ளை தானே வளரும் என்கிறார்கள். அப்படியானால் தன் பிள்ளை எண்ணெய் இல்லாமலே வளர்ந்து விடுமா?

புண்ணியத்தின் பயனாகத் தன் பிள்ளை வளரும் என்பது குறிப்புப் பொருள்.

விருந்தினரை உபசரிக்கும் புண்ணியத்தால் ஒருவனது வயல் செழித்து வளரும் என்பது குறிப்புப் பொருள்.

அதனால் நெல் விதைக்காமல் இருக்க வயலில் நெற்பயிர் வளர்ந்து விடுமா?

ஏரினும் நன்றால்
எருவிடுதல்
கட்ட பின்
நீரினும் நன்றதன் காப்பு.

என்பது உழவு என்னும் அதிகாரத்தில் வரும் குறள்.

இக் குறளில் உழுதலைச் சொல்லுகிறார். எருவிடுதலைச் சொல்கிறார். களை பிடுங்குதலைச் சொல்கிறார்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் பெற்றவர்கள் கட்டாய சமூகசேவை

## தென்னாபிரிக்காவில் சட்டம்

தென் ஆப்பிரிக்காவில் பட்டப்படிப்பு முடித்தவர்கள் கட்டாயம் சமூகப்பணி மேற்கொள்ள வேண்டும் என்று சட்டம் கொண்டுவர திட்டமிடப்படுகிறது. இது புதிய சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

தேசிய இளைஞர் கமிஷன் சமீபத்தில் அதிபர் நெல்சன் மண்டேலாவிடம் ஓர் அறிக்கையை அளித்தது. கட்டாய சமூகசேவை குறித்து இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 4 ஆயிரம் இளைஞர்களின் கருத்தை முன்னதாக அது கேட்டறிந்தது.

மருத்துவ பட்டதாரிகள் அனைவரும் ஒரு வருடம் கட்டாயம் சமூகப் பணிபுரிய வேண்டும் என்று சமீபத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த உத்தரவு இந்த ஆண்டே நடை முறைக்குவருகிறது.

இதுதவிர, பள்ளிப் படிப்பை பாதியிலேயே கைவிடுவோர், வேலை கிடைக்காத இளைஞர்கள் போன்றோரையும் தேசிய நீரோட்டத்துக்குக் கொண்டு வர திட்டம் தயாரிக்கப்படுகிறது. ★

# அறிவு பூர்வமான....

(VII ஆம் பக்கத்தொடர்ச்சி)

காமதேவனுக்கு உள்ள மகிமையே அதுதான்'' என்கிறார் துளசிதாசர்.

அதனால்தான் பெரியவர்களெல்லாம், ''எதையும் அளவுக்கு மீறி செய்யாதே'' என்று கூறுகிறார்கள்.

அப்பா, அம்மா, மனைவி, மக்கள் என்று அனைவரிடமும் அன்பு அவசியம் இருக்க வேண்டும்தான். ஆனால் அந்த அன்பு அறிவுக்குப் புறம்பாக இருந்துவிடக் கூடாது. அளவுக்கு மீறியும் இருக்கக் கூடாது. அப்போது தான் வாழ்க்கை சுகமானதாக இருக்கும். இல்லாவிட்டால் அவஸ்தைதான்!

'அளவுக்கு மீறிய அன்பு' —என்பது புரிகிறது. அது சரி...

'அறிவுக்குப் புறம்பான அன்பு' என்றால் என்ன?

ஒருதாய்க்கு ஜலதோஷம்... அல்லது, ஏதோஒரு தொற்று நோய் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த அம்மாவுக்குத் தன் குழந்தை மீது அளவு கடந்த அன்பு. தனக்கு நோய் இருக்கிறது... அது அடுத்தவர்களைத் தொற்றக் கூடியது என்று தெரிந்திருந்தும்... அன்பைக் காட்டுவதற்காக அந்தக் குழந்தைக்கு முத்தம் கொடுக்கிறேன் என்று தூக்கி வைத்துக் கொண்டு அந்தத் தாய் கொஞ்ச ஆரம்பித்தால் அது நன்றாக இருக்குமா? இதைத் தான் 'அறிவுக்குப் புறம்பான அன்பு' என்று பெரியவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

விலங்குகளிடம் அன்பாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதற்காக புலிக்கு முத்தம் கொடுக்க முடியுமா? அப்படி கொடுத்தால் அது அறிவுக்குப் புறம்பான அன்பு.

அதனால் 'அன்பு' கூட அறிவுபூர்வமாக இருக்க வேண்டும். ★

- தென்கச்சி சுவாமிநாதன்-

# பறப்பு முயற்சி

(VI ஆம் பக்கத் தொடர்)

லொன் பிறவுண் என்ற அறிவியலறிஞரினால் ஜேர்மனியில் வடிவமைக்கப்பட்டது. பின்னர் Opeation Paper Clip — (ஒப்பிரேசன் பேப்பர் கிளிப்) என்ற இராணுவ நடவடிக்கையின் போது அமெரிக்கப்படையினரால் இவர் கைது செய்யப்பட்டு அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னாளில் இவர் அமெரிக்காவின் விண்வெளிஆராய்சி நிலையமாகிய நாஸாவின் பிரதான றொக்கற் வடிவமைப்பாளராகத் திகழ்ந்தார்.

(முற்றும்)

# முல்லாவின் முட்டாள்...

(IV ஆம் பக்கத் தொடர்ச்சி)

திறமையானவர் யார்?'' — என்பதாகும். அதற்கு உரிய விடை ''இருவருமே'' என்பதாகும். இப்படிக்கு முல்லாவுக்கு விளக்கினார் ஊர் அதிகாரி. ஆனால் முல்லா தான் கூறவேண்டிய பதில்களை மட்டும் வரிசையாக மனதில் பதித்துக் கொண்டார்.

அரசர் வந்தவுடன் அவரைச் சந்திக்க முல்லா அனுப்பப்பட்டார். அரசர் அவரிடம் வழக்கத்திற்கு விரோதமாகக் கேள்வி வரிசையை மாற்றிக் கேட்கலானார்.

''நீர் சமய நூல்களை எத்தனை ஆண்டுகள் படித்துள்ளீர்?'' என்று கேட்டார்.

அரசர் என்ன கேள்வி கேட்டார் என்பதைக் கவனியாமல் முதற்கேள்விக்கு ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த விடையான ''ஐம்பது'' என்ற பதிலைக் கூறினார் முல்லா.

அவருக்கு ஒரே ஆச்சரியம். எனவே, தன்னுடைய சந்தேகத்தைத் தெளிந்து கொள்ள, ''அப்படியானால் உன் வயது என்ன?'' என்று முல்லாவிடம் கேட்டார்.

முல்லாவோ கேட்ட கேள்வியைப் பற்றிக் கவலைப்படாமல் ஏற்கனவே திட்டமிடப்பட்ட இரண்டாவது கேள்விக்குரிய விடையான, ''பத்து ஆண்டுகள்'' என்று பதில் கொடுத்தார்.

இப்பொழுது அரசருக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டு விட்டது. உடனே முல்லாவிடம், ''இப்படி விடை கூறும் நீ சரியான முட்டாளாயிருக்க வேண்டும் அல்லது கேள்வி கேட்கும் நான் முட்டாளாயிருக்க வேண்டும்'' என்று ஆத்திரத்தோடு கத்தினார்

அரசர் தனது மூன்றாம் கேள்வியைக் கேட்டு விட்டார் என்று நினைத்த முல்லா அமைதியாக, ''இரண்டு பேரும்'' என்று கூறி முடித்தார்.

அரசர் அதிகாரிகளைக் கோபித்து, ''இவன் என்ன பைத்தியமா? அழைத்துச் சொல்லுங்கள்'' என்று கூறித் திட்டினார்.

அதிகாரிகள் செய்வதறியாமல் விழித்தனர்.

கி. கல்கிராஜ்,
(ஆண்டு 7, மானிப்பாய் இந்துக் கல்லூரி)

# விம்பம் - ஓர் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம் மடம் வீதியில் இயங்கும் 'மனிதம்' கலந்தாய்வுக் குழுவினரால் இம் மாதம் முதல் வெளியிடப்படும் "ஆத்மா" சஞ்சிகையில் 'கலைக்காற்று' பகுதியில் 'ஜீவா' எழுதிய இந்த விமரிசனக் கட்டுரை இங்கு மறுபிரசுரமாகின்றது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 14 ஆம் 15 ஆம், 16 ஆம் — திகதிகளில் ஓவியக் கண்காட்சி ஒன்றை அனுபவிக்கக் கிடைத்தது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினதும், கலை வட்டத்தினதும் ஆதரவில், பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக் கண்காட்சியில் ஓவியர் ஆசை. இராசையாவின் ஐம்பது வரையிலான ஓவியங்களைப் பார்க்க முடிந்தது.

தூரிகையின் மொழி சிக்கலானது; வித்தியாசமானது; ஒவ்வொரு கோட்டுக்கும், ஒவ்வொரு நிறத்திற்கும் தனித்தனி அர்த்தப் பரிமாணங்களைக் கொண்டது. கருத்துக்களை ரேகைகளுடனும், வர்ணங்களுடனும் இணையவிட்டு வாழ்வில் உள்ளவற்றை உள்ளவாறே காட்ட அவர் நினைக்கிறார் என்பதை 'விம்பம்' சொல்லித் தந்தது.

இலகுவான பொருள் புலப்பாட்டினால், சாதாரண மனித உணர்வுகளையும் ஆகர்சிக்கக்கூடிய ஓவியங்களை வரைவதோடு, கனவுகளையும் நிஜங்களாக்கித் தருகிறார்.

ரேகைகளின் பிரயோகம், காரியக் கோலின் சுயாதீன அசைவு சாதனத்தை (நீட்ட பயன்படும் காகிதம்) கருத்துப்பட பூரணப்படுத்தல் வேண்டும் என்ற பொது விதிகளை ரேகை ஓவியங்கள் மூலம் காட்டியிருக்கிறார்.

ஓவியர் இராசையா அவர்களின் ஓவியங்கள் இயற்கையையும் அதனோடு இணைந்த இயல்பான மனித வாழ்வையும் சுமையில்லாத எளிமையான கோலங்களாக காட்டுகின்றன. சிதைப்புக் கொள்கை (DISTORTION THEORY) இல்லாது புகைப் படக் கருவிக்கூடாக பார்ப்பது போல தனது பார்த்து வரைதல் முறையில் மனப் படலங்களை புகைப்படமாகத் தர நினைக்கிறார். இப்படியான ஓவியங்களில் ரசனைத் தன்மை அதிகம் காணப்படுகின்றதே தவிர இன்றைய கால சிந்தனை வளர்ச்சிக் கோடுகள் ஏதும் காணக்கூடியதாக இல்லை. இருப்பினும் காலம் கடந்த நவீன ஓவியரான பப்லோ பிக்காசோ (மறுமலர்ச்சி ஓவியர்) வின் தன்மையில் பாணியில் சில மனித உருக்கள் காணப்பட்டன.

புவியின் மேற்பரப்பின் நில உருவங்களையும், நீர் நிலைகளையும் இவைகளோடு இணைந்த வனங்களையும் திட்டமிட்ட வர்ணப்பிரயோகத்தினால் வெளிப்படுத்தியிருக்கின்றார். இவரின் தைலவர்ணப் பிரயோக முறையும், மெய்யுரு ஓவியங்களும் சிறப்பாக உள்ளன.

இவரது பனைக்காட்சியில் பனை வளமும், நீர் நிலையும், இவைகளைத் தாங்கி நிற்கும் நில அமைவும் சூழலின் தாற்பரியத்தைக் காட்டி நிற்கின்றது. இது போன்ற இவரது ஓவியங்களில் காணப்படும் கறுப்பு நிறப் பாவனையானது ஓவியர் இராசையா அவர்களை ஓர் இருட்காட்சி ரசிகனாக அடையாளம் காட்டுகிறது. இவ்விருள் துயரத்தினதும், சோகத்தினதும், அச்சத்தினதும் குறியீடா? அல்லது விம்பத்தின் அடியிலிருக்கும் வீரிய சக்தியா? அல்லது இவரின் வாழ்வியல் பிணக்குகளின் தன்மையா?

வல்லை வெளியில் சில பெண்கள் தலையில் விறகுக் கட்டுகளை சுமந்தபடி ஒரு காட்சி. இதில் துவிச்சக்கர வண்டிகள் சென்ற சில்லின் அடையாளம் மிக நுட்பமாகக் காட்டப்பட்டுள்ளது.

இந்தப் படத்தின் பாணியில் ஓவியர் மைக்கல் ஆஞ்சலோவின் சாயல் தென்படுகிறது.

சிவனும், பார்வதியும், கர்ணன், கிருஷ்ணன் (பாரதப் போரில் அம்பினால் எய்யுண்ட கர்ணனுக்கு கண்ணன் மாறுவேடத்தில் காட்சி கொடுக்கும் ஒரு காட்சி) இதன் பாணி ஓவியர் மருதுவின் தன்மையைக் காட்டுகின்றது. சீனத்து ஓவியப் பாணியில் அமைந்த வர்ணப் பிரயோகம் ஓவியம் பற்றி அறிய வேண்டியவர்களுக்கு ஓர் அறிமுகமாக இருந்தது.

இராசையா அவர்கள் 'உருத்திரிபு' முறைகளை ஏற்க தாமதிப்பவராக — மேற்கிந்திய நவீன ஓவியப் பாதிப்புக்களை உள் வாங்க மறுப்பவராக — இருக்கிறார். பிரபல சிங்கள ஓவியரும் இயற்பண்பு வாதியுமான அமரசேகரா முதலியாரின் கருத்துப் பாதிப்பும், ஓவியப் பாதிப்பும், நெருங்கிய தொடர்பும் இவரது ஓவியங்களில் காணக்கிடக்கின்றது.

"கலை ஓர் உணர்வு. எப்போதும் அது ஒரு வடிவத்தை சுற்றிவாரது. எனவே வடிவத்தை எளிமையாக்க வேண்டியது அவசியம். எளிமையோடு படைப்பிற்காக மேற்கொள்ளும் பொருளின் உணர்வையும் கலைப் படைப்பில் கொண்டு வர வேண்டும். அதுவே கலைஞனுக்கு வெற்றி" என்றும் 'தேடலும் படைப்புலகமும்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகள் இங்கு கவனிக்கத் தக்கவையாகும்.

இறுதியாக, இந்த 'ஓவியக் கண்காட்சி'யை ஏற்பாடு செய்ததன் மூலம் யாழ், ஓவியத் துறையில் மீண்டும் ஒரு மெல்லிய அசைவை உண்டு பண்ணியதற்காக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரையும், கலை வட்டத்தினரையும் பாராட்டலாம். இது போன்ற முயற்சிகள் தொடரப்படுவது விரும்பத்தக்கது. ★

## அமெரிக்காவை..

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கினார்கள். லிப்டுகளை வில்லங்கமாகத் திறந்து உள்ளே அகப்பட்டவர்களை வெளியே எடுத்தார்கள். கல்லறைகளைத் திறப்பது போன்ற அச்சம் அவர்களிடம் தெரிந்தது.

ஒரு லிப்டில் 12 குழந்தைகளை ஒரு பொலிஸ் லெப்டினன்ட் மீட்டார். 13 ஆவது குழந்தையை மீட்க முனையும் சமயம் கட்டுப்பாடின்றி லிப்ட் அந்த 42 ஆம் மாடியில் இருந்து தளமாடி நோக்கி விழத்தொடங்கியது. அசுரவேகம் பிடித்ததும் நிலமையைச் சொல்ல முடியவில்லை.

தளமாடியில் அதன் தாங்கி சீராகச் செயற்பட்டதால் லிப்ட் தப்பிக்கொண்டது.

வேறொரு லிப்டில் தனித்து மாட்டிக்கொண்ட பொறியியலாளன் காள்செலிங்கர் இறப்பதற்கு முன்னான தனது செய்திகளைக் குடும்பத்தாருக்கு எழுதத் தொடங்கி இருந்தான். தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் ஆசிகளையும் எழுதி இருந்தான். பலமணி நேரம் காத்திருந்த விரக்தி அவனை எழுத வைத்தது.

தொடக்கத்தில் அவனது கடிதத்தில் விலாசமும் திகதியும் இவ்வாறு இருந்தன. "புகைக்கும் லிப்ட் — 66. (மாடி தெரியாது), 12.40.

(XI ஆம் பக்கம் பார்க்க)

## இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத்தொடர்ச்சி)

வரவும். வீடுமனைச் சுகம் செலவு இருந்து கொண்டு இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்:- புதன்.

விருச்சிகம்:- எந்த விஷயத்தையும் அதிகம் நிதானிக்க முடியாதநிலை இருக்கும். தொழில் ஸ்தானத்தில் சுழன்றபடி தான் இருப்பீர்கள். வேகமான தொழிற்பாடு இருக்கும். ஆனால் மேல், கீழ் நிலைதான் கொடுக்கும். அயலவர்கள் உதவுவர். மறைமுக விரோதிகள் வேதனையைத் தருவர். உஷ்ணபீடைகள், வயிறு, குடல், தலை சம்பந்தமான சுகவீனங்கள் கொடுக்க இடம் உண்டு. ஓய்வு அடிக்கடி எடுத்தால் நன்மைகள் ஏற்படும். தெய்வ வழிபாடு துயரங்களைக் குறைக்கும்.

★ அதிர்ஷ்டநாள்:வெள்ளி.

தனுசு:- உங்கள் காரியங்களை நாசூக்காகப் பாருங்கள். அல்லது தடைதாமதமாகத்தான் இருக்கும். அடிக்கடி உள்ளதை எல்லாம் பிறருக்குச் சொல்லி விடுவதனால் உங்களுக்கு உபத்திரங்கள் தேடிவரும். தொழில் ஸ்தானத்தில் மனதிற்குப் பிடியாதவர்களுடன் விலத்தி நடவுங்கள். வீணாகச் சண்டை போடுவதனால் என்ன இலாபம்? நீங்கள் சண்டை போட்டபடி இருக்க மற்றவர்கள் காரியங்களைப் பார்த்தபடி இருப்பார்கள். சளி, கைகால்நோ, விறைப்பு கொடுத்தபடி இருக்கும். உடல்நிலையைக் கவனித்து வரவும்.

★ அதிர்ஷ்டநாள்:-புதன்.

மகரம்: கொஞ்சம் மாற்றங்கள் தெரிகிறது? அவசரப்படாமல் நிதானமாகச் செயற்படுங்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் கொடுத்தாலும், போட்டி பொறாமைகளும் இடைக்கிடை கொடுக்கச் செய்யும். எதிர்ப்பாலாரால் நன்மைகளும் உதவிகளும் ஏற்படச் செய்யும். அயலவர்கள் உதவிக்கு வருவர்; ஆயினும் நிதானமாக இருக்கவும். இரத்தநோய், வாய்வு, கைகால் உளைவு, சளித்தொல்லைகள் இருக்கச் செய்யும். வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

கும்பம்:- உங்களுக்கு சலசலப்பான காலமாகும். எதிலும் நிதானமாகச் செயற்படவும். தொழில் ஸ்தானத்தில் நிதானமாக இருக்கவும். பொருள் கொடுக்கல் வாங்கலில் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவும். நரம்பு சளி, விறைப்பு கொடுக்கலாம். இடமாற்றங்களோ— பிரயாணங்களோ செய்ய வேண்டாம். தெய்வவழிபாடு செய்து வரவும். சனீஸ்வரனுக்கு பிரீதி செய்து ஏழைகளுக்குத் தானம் கொடுத்து வரவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

மீனம்: காலசக்கரத்தில் விதி சதி செய்யும். நாம் மதி கொண்டுதான் போராட வேண்டும். கொடுத்துக் கெடுப்பானாம் சனீஸ்வரன். துன்பத்தின் மத்தியில் மனச் சாந்தியைத் தேடும் உங்கள் நிலையை இறைபக்தி கொண்டு குறைக்க வழி உண்டு. தொழில் ஸ்தானத்தில் மனக்கருத்துக்கள் இருக்கும். நிதானமாகச் செயற்படவும். காலமறிந்து காரியமாற்றவும். சளித்தொல்லை, வலித்தொல்லை, இடமாற்றங்களால் பொருள் இழப்பால் மனவேதனை, கைகால் உளைவு, வாய்வு என வருந்தியபடி இருக்கும். எதையும் சமாளித்து வாருங்கள். சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்யுங்கள். சுகம் கிடைக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

## விமோசனம்...

(V ஆம் பக்கத் தொடர்)

"நான் வாங்கேல்லை அண்ணை. அவைதான் விரும்பித் தந்தவை. என்னைச் சொல்லுறியள் நீங்கள் கமலசேகரத்தின்ர பெட்டையின்ர காரியத்தைத் தாலி கட்டுற நேரம் குழப்பேல்லையோ? தரகுக்காசு தரேல்லை எண்டு இல்லாதது பொல்லாதது சொல்லி..."

"ஆறுமுகம் அந்தக் கதையை விடு. கிடந்து உலையிறன் காணாதே?... வெய்யிலுக்குள்ளாலை வந்திருக்கிறாய். குளிர ஏதாவது குடி. சுகுணா! எப்பன் தண்ணி கொண்டா" சங்கரப்பிள்ளை கதையைத் திசைமாற்றினார்.

"வேண்டாமண்ணை என்னைப் பாக்கத் தெரியேல்லையே. நல்லா அடிச்சுப் போட்டுத்தான் வந்திருக்கிறன். வைரமுத்தன்ர பெண்டில் 'கிபிர்' விக்கிறாள். சோக்கான வடி. ஒரு கொஞ்சம் அடிச்சா சொர்க்கம் தான்? உங்களுக்கும் வாங்கித் தரட்டோவே? உசாரா இருப்பியள்"

வாயைச் சுழித்தபடி ஆறுமுகம் சொன்னார்.

"நான் உதெல்லாம் விட்டிட்டன். ஆறுமுகம்! இப்ப விஷயத்துக்கு வா... சுகுணாவின்ர பேச்சுக்கால் என்ன மாதிரி? பாவம் பெடிச்சி" சங்கரப்பிள்ளை பேசிக்கொண்டிருக்கும் போது சுகுணா வந்தாள்.

"வேண்டாமடி பிள்ளை. நான் இப்பதான்... சரி கொண்டா குடிப்பம்" ஆறுமுகம் கோப்பையை வாங்கிக் கொண்டார். திரும்பிப் போகும் சுகுணாவையே பார்த்துவிட்டுச் சொன்னார்.

"அண்ணை! சும்மா [illegible] யும் சரி. உங்கட மூண்டு பெட்டையளின்ர வடிவுக்கு ஒருத்தியும் முன்னுக்கு நிக்காளவை."

"வடிவு இருந்து என்ன செய்யிறது ஆறுமுகம்? காசல்லே வேணும். நானும் பேய்த்தனமா ஊருக்க அறாவட்டிக்குக் குடுத்து எல்லாத்தையும் துலைச்சுப் போட்டன்... சரி. பழைய கதை என்னத்துக்கு? இப்ப சுகுணாவின்ர அலுவலைச்சொல்லு"

"அது அண்ணை... சரிவராது போல கிடக்கு" இழுத்தார் ஆறுமுகம்.

"ஏன்?" சங்கரப்பிள்ளை திகைத்துப் போய்க் கேட்டார்.

"அவங்கள் நாய்ச்சாதியள் அண்ணை. சரியான காசாசை பிடிச்சதுகள்."

"ஆறுமுகம்! நீதானே சொன்னாய் நல்ல குடும்பம் எண்டு"

"அப்பிடித்தான் நினைச்சன் அண்ணை, பேந்து குழப்பிப் போட்டாங்கள். சரி... என்ன செய்யிறதெண்டு அந்தப் பெடிக்கு நான் போய் மணியத்தின்ர பெட்டையை முற்றாக்கிப் போட்டன்"

"ஆறுமுகம் நான் தரகு வேலையிலை கரை கண்டனான். நீ என்னட்டையே விளையாட்டுக் காட்டிப் போட்டாய் என்ன? இந்தப் பேச்சை நீ தான் குழப்பியிருக்கிறாய்." சங்கரப்பிள்ளையின் குரல் உயர்ந்தது.

"இல்லையண்ணை நானேன் குழப்பிறன்? எனக்கேன் அந்தப் பழியை?"

"தேவையில்லாத கதைகளை விட்டுப் போட்டு ஏன் குழப்பினாய் எண்டு சொல்லு." ஆறுமுகம் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"அண்ணை! இந்தத்தரகு வேலையின் நுட்பங்களெல்லாம் உங்களோடை திரிஞ்சு பழகினது. நீங்கள் செய்யாத ஒண்டையும் நான் செய்யேல்லையே! இந்தச் சம்பந்தத்தை முற்றாக்கினா மாப்பிள்ளை பகுதியாலை ஒரு ரெண்டாயிரம் வந்தாலும் உங்கடபக்கம் ஒரு சதம் பெயராது. டுபாய் மணியம் பத்தாயிரம் தாறான். ஆரன் விடுவினமோ? சொல்லுங்கோ பாப்பம்"

சங்கரப்பிள்ளை மலைத்துப்போய் அமர்ந்திருந்தார்.

"அண்ணை! ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ. நான் இன்னொரு சம்பந்தம் கொண்டு வந்தனான். மாப்பிள்ளை கச்சேரியிலை கிளாக். வாறவரியம் பென்சன் எடுக்கிறான். வலு குணமான பெடியன்...ஒரு சதம் கேக்கான்"

"டேய் ஆறுமுகம்! வெளிக்கிடடா வளவாலை. இந்தப் பக்கம் கால் வைச்சியெண்டா நடக்கிறது வேறை"

சங்கரப்பிள்ளைக்குக் கோபத்தால் உடம்பெல்லாம் பதறியது. சுகுணா ஓடிவந்தாள்.

"அப்பாசும்மா இருங்கோ. எனக்குக் கலியாணமும் வேண்டாம். ஒரு மண்ணும் வேண்டாம். நீங்கள் பேசாமல் இருங்கோ" அழத் தொடங்கினாள்.

ஆறுமுகம் எழுந்து ஓசைப்படாமல் நழுவினார்.

அன்றிரவு நன்றாகயோசித்துக்கொண்டு படுத்த சங்கரப்பிள்ளையர் மறுநாள் எழும்பவேயில்லை. தான் செய்த பாவங்களுக்கு இறப்பின் மூலம் பரிகாரம் தேடிக் கொண்டுவிட்டார்.

சரோவும், சுமதியும் அவரை உலுக்கி உலுக்கி அழுது கொண்டிருக்க, சுகுணா விறைத்துப்போய் நின்றாள்.

(யாவும் கற்பனை) ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விடை

IV ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் வெளியான புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### வார்த்தை விளையாட்டு

மை, மைல், கோ, கோயில், கோல், கோது, கோதுமை, கோழி, கோன், கோன்மை, வா, வாயில், வால், வாது, வாழி, வான், துயில், துன், துன்மை, துழி, ஆல், ஆழி, ஆமை, ஆன், ஆயின்.

### மூளைக்குவேலை

1. எண்ணெயை சமமாகப் பங்கிடுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் அப்போது ஒவ்வொரு பாத்திரத்திலும் இருக்கும் எண்ணெயின் அளவும் வருமாறு:-

| நடவடிக்கை | 8 லீ. பாத்திரத்தில் | 5 லீ. பாத்திரத்தில் | 3 லீ. பாத்திரத்தில் |
|---|---|---|---|
| 1) ஆரம்பத்தில். | 8 | — | — |
| 2) 5 லீற்றர் பாத்திரத்தை நிரப்புக. | 3 | 5 | — |
| 3) 5 லீற்றர் பாத்திரத்திலிருந்து 3 லீற்றர் பாத்திரத்தை நிரப்புக. | 3 | 2 | 3 |
| 4) 3லீற்றர் பாத்திரத்தில் உள்ளதை 8 லீற்றர் பாத்திரத்துக்கு மாற்றுக. | 6 | 2 | — |
| 5) 5 லீற்றர் பாத்திரத்தில் உள்ளதை 3 லீற்றர் பாத்திரத்துக்கு மாற்றுக. | 6 | — | 2 |
| 6) 8 லீற்றர் பாத்திரத்தில் உள்ளதைக் கொண்டு 5 லீற்றர் பாத்திரத்தை நிரப்புக. | 1 | 5 | 2 |
| 7) 5 லீற்றர் பாத்திரத்தில் உள்ளதன் மூலம் மூன்று லீற்றர் பாத்திரத்தை நிரப்புக. | 1 | 4 | 3 |
| 8) 3 லீற்றர் பாத்திரத்தில் உள்ளதை 8 லீற்றர் பாத்திரத்துக்கு மாற்றுக. | 4 | 4 | — |

2) 16 மாணவர்கள்.

# அணுகுண்டு வெடித்தால்..

(VII ஆம் பக்கத் தொடர்ச்சி)

டியதாகக் கூறுகிறார்கள். இரும்பு 1536 சென்டிகிரேட் வெப்பத்தில் உருகி விடுகிறது.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து 52 ஆண்டுகள் முடிந்து விட்டன என்றாலும் இதனால் ஏற்பட்ட பின்விளைவுகள் இன்னும் மிககொடூரமாக உள்ளன. இந்தக் குண்டு வீச்சில் உயிர் தப்பிய பலர், இதன் கதிர் வீச்சுக்குஆளாகி, பலவிதங்களில் பாதிக்கப்பட்டு பட்ட அவதிகள் சொல்லிமாளாது.

அன்றுகாயத்துடன் தப்பிய 8000 பேர்களும் இன்று வரை சிகிசை பலன் தராமல் ஒருவர்பின் ஒருவராக இறந்து கொண்டேவருகிறார்கள். கதிர்வீச்சு காரணமாக ஏற்படும் காயங்களுக்கு எந்த மருத்துவமும் பலனளிக்காது. ஆகவே இவர்கள் சொல்லொணாத்துயருற்று பரிதாபமாய் மாண்டு போகிறார்கள்.

இவ்வளவையும் பார்த்தும் உலக அரசியல்வாதிகளுக்கும் ஆயுதப் பித்தர்களுக்கும் புத்திவரவில்லை. தற்போது உலகம் முழுவதும் 22 ஆயிரம் மெகாதொன் எடையுள்ள 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட அணுஆயுதங்கள் உள்ளன. ஒரே ஒரு மெகா தொன் மட்டுமே போதும்... உலக வரை படத்திலிருந்து பாரிஸ் நகரம் காணாமல் போய்விடும். ஒரு மெகா தொன் நியூயோர்க் நகரின் மக்கள் தொகையில் 14 சதவிகிதம் பேரை உடனடியாகத தீர்த்து விடும். குண்டுக்குத் தப்பியவர்கள் கதி செத்தவர்களை விட மகாமோசம். கொஞ்சம் கொஞ்சமாக துடித்துத் துடித்துச் சாவதுதான் அவர்கள் விதி. குண்டுவெடிப்பின் பயங்கரப் பின் விளைவுகள் அடுத்த சந்ததியை நிரந்தர ஊனமாக்கிவிடும்! ★

# அமெரிக்காவை உலுக்...

(X ஆம் பக்கத் தொடர்ச்சி)

பி. எம்., திகதி 26 பெப்ரவரி 1993.

அவர் செய்தியை எழுதி முடிக்கவும் லிப்ட் கதவு திறக்கப்பட்டது. புதிய உலகில் பிரவேசித்த அவரின் மகிழ்ச்சியை சொல்லவா வேண்டும்? செய்தி கையில் இருக்க அவர் வீடு திரும்பிய காட்சியை என்னென்பது?

பலரும் 50 மாடிகள் கீழே கூட படிக்கட்டுகளில் தூக்கி இறக்கி வரப்பட்டார்கள். சக்கர நாற்காலிகளில் வசதியாக லிப்டில் வந்தவர்கள் இறங்க வழியின்றித் தவித்தார்கள். அவர்களையும் தூக்கி இறக்கிவர வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மொனிக்காவின் கணவன் எட் ஸிமித் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த போது குண்டு வெடித்த சேதி கிடைத்தது. அவளுக்கு போன் செய்தான். தொலைபேசி ஒலித்துக்கொண்டே இருந்தது. பதில் இல்லை.

தொலைபேசி ஒலிப்பதால் அவளுக்கு ஆபத்து இல்லை. இடத்தைவிட்டு வெளியேறியதால் பதில் இல்லை என நினைத்தான் அவன். செயலிழந்த தொலைபேசிகளின் குளறுபடி மணியோசையை நம்பி ஏமாந்தான் அவன்.

மொனிக்கா தன்னை அழைப்பாள் என்ற எதிர் பார்ப்புடன் காரைக் கிளப்பினான். இடைக்கிடை காரின் தொலைபேசியில் அவளை அழைக்கவும் முயன்றான்.

நேரே வந்ததில் நிலமை சந்தேகத்தைக் கிளப்பியது. இருட்டியும் அவள் வீடு வரவில்லை. காயம்பட்டவர்களை வைத்திய சாலைகளில் தேடினான். இறந்தவர்களை சவச்சாலைகளில் பார்த்தான்.

ஈற்றில் கிடைத்தது மொனிக்காவின் சடலம். வயிற்றினுள் அவனது மகன். எத்தனை இனிய கனவுகள் பொடியாகிப் போயின? அவனுக்காக வாங்கிவைத்த பொருள்கள் கண்களைக் கசிய வைத்தன.

இத்தனை அனர்த்தத்தில் இறந்தவர்கள் ஆறு பேர் தான் என்பது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? வயிற்றுக் குழந்தையுடன் ஏழு உயிர்களுக்கு வாழும் உரிமை பறிக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் பலரகம். வாழ்க்கையில் மறக்க முடியாத — மறைக்க முடியாத வடுக்களைக் கண்டவர்கள் பலர். ஏங்கியவர்கள் பலர். அங்கே புகுந்து சாதனைகளைப் படைத்தவர்கள் பல உயிர்கள் காக்கப்பட்டன.

(தொடரும்)

# இதய அறுவை சிகிச்சை இனி இல்லாமல் போகும்?

மாரடைப்பு எதனால் ஏற்படுகிறது? இதயத்தில் உள்ள இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்படும் போது தான் மாரடைப்பு ஏற்படுகிறது. இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டவுடன் இருதய தசைக்கு (Heart Muscle) பிராணவாயு (ஒட்சிசன்) கிடைக்காமல் போய்விடுகிறது. இதனால் இருதய தசை துடிப்பதால் இருதய வலி, மாரடைப்பு போன்றவை வருகின்றன. இப்படி இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்படும் போது, அதைப் போக்க மூன்று வழிகள் உள்ளன.

(1) இலேசான அடைப்பாக இருந்தால் மருந்து உட்கொண்டாலே போதும். மருந்துகளே அந்த இரத்தக் குழாய்களை விரிவுபடுத்தி, இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து இதயத்திற்குத் தேவையான அளவு ஒட்சிசனைக் கிடைக்கச் செய்து மாரடைப்பைத் தடுத்து விடும்.

(2) இரத்தக் குழாயில் அடைப்புகள் அதிகமான இருந்தால் அடைப்பு இருக்கும் இடத்தில் கேத்திடர் பலூனை (Catheter Balloon Anglo Plasty) வைத்து இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்து அந்த அடைப்பை விடுவிக்க முடியும். இதனால் மாரடைப்பு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

(3) எல்லா இரத்தக்குழாய்களிலும் அடைப்பு இருந்தால் இதயத்தைப் பிளந்து 'பைபாஸ் ஒபரேஷன்' செய்தாக வேண்டும். காலில் உள்ள இரத்தக் குழாய்களை எடுத்து இதயத்தில் வைத்து 'பைபாஸ்' செய்து அதன் மூலம் இரத்தத்தை இதயத்திற்குச் செலுத்துகிறார்கள்.

இவை இல்லாமல், இப்போது இன்னொரு புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

லேசர் மூலமாக இதயதசைகளிலேயே நூற்றுக்கணக்கான மிக மிக நுண்ணியத் துளைகளைப் போட்டுஇரத்த ஓட்டத்தைத் திரும்பவும் வழமைக்குக் கொண்டு வந்துவிடலாம். இந்த சிகிச்சை முறைக்கு TMR (Trans Myo-Cardial Revascularization) என்று பெயர்.

முன்பு மார்பை பிளந்து தான் ஒபரேஷன் பண்ண முடியும்: ஆனால் இப்போது TMR சிகிச்சையில் மார்பை பிளக்க வேண்டிய அவசியமே இல்லை. வெளியில் இருந்தே இந்த 'லேசர்' மூலமாக ஒபரேஷன் செய்வதற்கு நிறைய ஆராய்ச்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

இந்த வகை சிகிச்சை இன்னும் ஓரிரு ஆண்டுகளில் வர இருக்கிறது. TMR வந்து விட்டால் இனி 'பைபாஸ் ஒபரேஷனுக்குக்' குட்பை சொல்லி விடலாம். ★

# சிங்கப்பூர் அரசு ஊதுவத்திக்குத் தடை!

சிங்கப்பூரில் ஊதுவத்தி விற்பனைக்கும் அதனைக் கொளுத்துவதற்கும் தடை விதித்திருக்கின்றார்கள்!

அங்குள்ள மக்கள் மத்தியில் ஊதுவத்தி கொளுத்துவதில் வந்த போட்டிதான் இத்தனைக்கும் காரணம்.

அந்நாட்டில் உள்ள சீன மக்களிடையே தான் இப்போட்டி அதிகம். யாருடைய ஊதுவத்தி உயரம் கூடியது; அதிக நேரம் எரிகின்றது என்றெல்லாம் போட்டியாம்.

ஒரு நாள், இரண்டு நாள் தொடர்ந்து எரியக் கூடியதாக — இராட்சத அளவுகளில் ஊதுவத்திகளைத் தயாரித்து தங்கள் மத வழிபாட்டுத் தலங்களில் கொளுத்தி விடுகின்றார்களாம்.

சில ஊதுவத்திகள் மூன்று மாடிக் கட்ட உயரம். அவற்றின் விலை இரண்டாயிரம் டொலர் வரை. கொளுத்தி விட்டால் ஊரெல்லாம் கமகம. அதே சமயம் ஊர் முழுவதும் புகையும் கூட.

பார்த்தது சிங்கப்பூர் அரசு. ஒரு புறம் மக்களின் பணம் கரியாகுகின்றது. மறுபுறம் சுற்றுப்புறச் சூழலும் பாதிப்பு. ஒரேயடியாக ஊதுவத்திக்கு தடை விதித்து விட்டது.

## பஞ்சாமிர்தம் பலரசஅமர்தம்

# மலையேறியவாறே திருமணம் செய்த ஜோடி!

அமெரிக்காவின் யுட்டா நகரில் ஒரு காதல் ஜோடி. புதுமையாகத் திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தது.

மலை உச்சியிலே கயிற்றைக் கட்டி அடித்தாழ்வாரம் வரைத் தொங்கவிட்டது. கயிற்றைப் பிடித்து மலை ஏறியவாறே திருமணமும் செய்து கொண்டார்கள். ஒருகை கயிற்றைப் பிடிக்க மறுகை மூலம் மோதிரம் மாத்திக் கொண்டார்கள்; முத்தமும் அப்படியே.

சாதாரண—மேற்கத்தைய கலியாண உடை தான். ஆனால் காலுக்கு மட்டும் மலையேறுவதற்கு அணியும் பூட்ஸ் அணிந்து கொண்டார்கள்.

மேலைத் தேசத்தில் இப்படியும் சில கிறுக்குத்தனங்கள்.

# பிரியங்காவுக்கு ரசிகர் மன்றம்!

ராஜீவ்—சோனியா தம்பதிகளின் மகள் பிரியங்கா.

நேருவுக்குப் பின் இந்திரா காந்தி. இந்திராவுக்குப் பின்னர் ராஜீவ் காந்தி. ராஜீவுப் பின்னர் சோனியா காந்தி. இப்போது சோனியாவின் காலம். சோனியாவுக்குப் பின்னர் பிரியங்கா வருவார் என்பது இந்திய தேசியக் காங்கிரஸின் குடும்ப 'ஃபோர் மூலா' ஆகிவிட்டது.

எனவே இப்போதே பிரியங்காவுக்குப் பந்தம் பிடிக்கத் தொடங்கி விட்டார்கள் காங்கிரஸ்காரர்கள். வயதுக்கு மூத்த—பழம் பெரும் காங்கிரஸ்காரர்களான— மூத்த தலைவர்கள் சிலரும் கூட தங்களின் தனித்துவம், ஆளுமை போன்றவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு பிரியங்கா புராணம் பாடத் தொடங்கி விட்டார்கள்.

அதன் ஒரு கட்டமாக உத்தரப் பிரதசத்திலே பிரியங்காவுக்கு ஒரு ரசிகர் மன்றமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ★

# ஏழை எளியவர்...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு, நாள் தோறும் மற்றவர்களால் சுரண்டப்பட்டு மனிதம் புதைக்கப்பட்ட— நீதி செத்து, அநீதி அகலக் கால்விரித்த — சமுதாய மக்கள் மத்தியிலே உரிமைக்காக, நீதிக்காக, மனித மாண்புக்காக குரல் கொடுக்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் காலந்தான் இத் தவக் காலம்.

எனவே இந்தக் காலத்தில் நாங்கள் செய்கின்ற நோன்பு முயற்சிகளும், பொருள், உறவு பகிர்வுகளும், தியாகங்களும் எங்களது சொந்தப் புகழ், பெருமை, சுயநலம் கருதி செய்யப்படாமல் எமது மீட்புக்காக தம்மையே சாவுக்குக் கையளித்த யேசுவினது மகிமைக்காகவே செய்யப்பட வேண்டும்.

"ஏதை சொன்னாலும், எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் யேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்." (கொலோசேயர் 3:17)

# கம்பீரம்...

(V ஆம் பக்கத்தொடர்)

நடந்ததில்லை.

"அவன் வெருட்டவில்லை..." "நான்தான் பயந்து விட்டேன்" என்று நினைத்துக் கொண்டார்.

நேரம் நெருங்கி விட்டதால் ஒருவர் வந்து அன்புத்துரை மாமாவை தேவாரம் பாட அழைத்தார்.

"...இலைத் தம்பி தலையிடிக்குது...வேறை ஆரையும் கேள்"

பாடக்கேட்டவர் அன்புத்துரை மாமாவை வித்தியாசமாகப் பார்த்தார். ★

(யாவும் கற்பனை)

# கவிதை...

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீர் பாய்ச்சுதலைச் சொல்கிறார். நெற் பயிரை மிருகங்களிலிருந்து பாதுகாத்தலைச் சொல்கிறார்.

இவ்வளவையும் சொன்ன திருவள்ளுவரா விதை நெல் இன்றி விருந்தோம்புவனின் வயல்விளையும் என்று சொல்வார்? இக்குறளின் குறிப்புப் பொருள் விருந்தோம்பும் உயர்பண்பும் தருமமும் நெல் செழித்து வளரத்துணையாகும் என்பதாகும்.

உள்ளதை உள்ளவாறு தருவது புகைப்படம். உள்ளதை உணர்ந்தவாறு தருவது ஓவியம். கவிதையும் ஓவியம் போன்றதே. கவிஞர் உணர்ந்ததை — உணர்த்த வந்ததை சில வேளைகளில் குறிப்பாகவும் புரிந்து கொள்ள வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகர் பதவிக்கு ஏற்பட்ட போட்டி
# அரசியல் பலப்பரீட்சையின் ஆரம்பம்

## பாரதீய ஜனதாக்கட்சி அரசுக்கு அ.தி.மு.க.கூட்டணியே பின்னடைவு

சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுபவர் ஆளும் கட்சி உறுப்பினராக இருப்பது தான் மரபு.

ஒருமித்த கருத்து அடிப்படையில் போட்டி இல்லாமலேயே இந்த தெரிவு நடைபெறுவது வழக்கம்.

நீண்டகாலமாகக் கடைப்



வாஜ்பாய்

பிடிக்கப்படும் நடைமுறை இதுதான்.

ஆனால்இம்முறை 12ஆவது மக்களவைக்கான சபாநாயகர் தெரிவில் போட்டி ஏற்பட்டது. அரசியல் பலப்பரீட்சையின் ஆரம்பமாகக் கருதப்படுகிறது.

### எதிர்க்கட்சிகள் சல்மாவை நிறுத்தின

சபாநாயகர் தேர்தலில் காங்கிரஸும் ஐக்கிய முன்னணியும் கூட்டாக முன்னாள் சபாநாயகர் பி. ஏ. சல்மாவை நிறுத்தின.

சல்மாவை நிறுத்துவதற்கு முன் பாரதீய ஜனதாக் கட்சியுடன் ஆலோசனை கலக்கப்படவில்லை.

பாரதீய ஜனதாக்கட்சி, தெலுங்குதேச உறுப்பினர் ஜீ. எம். ஜீ பாலயோகியை சபாநாயகர் வேட்பாளராக நிறுத்தி தெலுங்கு தேச உறுப்பினர்களின் ஆதரவுடன் சுலபமாக வெற்றி பெற்றது.

### தெலுங்கு தேசத்தின் நிலைப்பாடு

கடந்த மக்களவைத் தேர்தலில் ஐக்கிய முன்னணியில் இணைந்து போட்டியிட்டது தெலுங்கு தேசம்.

தேர்தல் முடிவடைந்து காங்கிரஸுக்கும் பாரதீய ஜனதாவிற்கும் இடையில் ஆட்சி அமைப்பதில் போட்டி ஏற்பட்டபோது நடுநிலைமை வகிக்கப்போவதாக அது அறிவித்தது.

நடுநிலைமை வகிக்கப் போவதாக தெலுங்கு தேசம் விடுத்த அறிவிப்பும்—

பாரதீய ஜனதாக்கூட்டணியில் இணைய அ. தி. மு. க. எடுத்த முடிவுமே—பாரதீய ஜனதா அரசு அமைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

தற்பொழுது தெலுங்கு தேசம் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகிவிட்டது.

சபாநாயகர் பதவிக்கு பாலயோகியை தெரிவுசெய்த போது, தெலுங்கு தேசத்துக்கும் பாரதீய ஜனதாவுக்கும் இடையில் ஏற்பட்ட பேரத்தின் விளைவே ஐக்கிய முன்னணியில் இருந்து தெலுங்கு தேசம் வெளியேறக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சபாநாயகர்தெரிவில் எத்தகைய நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பது என்று முடிவு செய்வதற்காகத் தனது கட்சிக் கூட்டத்தை அதன் தலைவரும் ஆந்திர மாநில முதலமைச்சருமான சந்திரபாபு நாயுடு கூட்டியிருந்த சமயம் பாரதீய ஜனதா பாலயோகியை தனது வேட்பாளராக நிறுத்த இணங்கியது.

தனது நடுநிலைமைக் கொள்கையில் இருந்து வழுவி எதிர்க்கட்சி வேட்பாளர் சல்மாவை தெலுங்கு தேசம் ஆதரிக்க முற்பட்டிருந்தால் சல்மாவுக்கு வெற்றி வாய்ப்பு ஏற்பட்டிருக்கும் தெலுங்கு தேச உறுப்பினரை சபாநாயகர் வேட்பாளராக நிறுத்தி இதனை முறியடித்தது பாரதீய ஜனதா.

பாலயோகி சபாநாயகர் பதவிக்கு நியமிக்கப்பட்டதோடு தெலுங்கு தேசம், ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேறி இருப்பதால் தனது நடுநிலைமைக் கொள்கையை அது கைவிட்டு பாரதீய ஜனதா அரசில் இணையலாம் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

எனினும் அரசில் இணைவதைவிட வெளியில் இருந்து செயற்படுவது மூலம் தனது பிராந்திய நலன்களைப் பாதுகாக்கலாம் என்று தெலுங்கு தேசத் தலைவர் சந்திரபாபு நாயுடு கருதுகின்றார்.

தெலுங்கு தேசம், அ. தி. மு. க., அஸாம் கணபரிஷத் போன்ற பிராந்தியக்கட்சிகளின் வளர்ச்சியே மத்தியில் ஸ்திரமான ஆட்சி அமைவதற்கு தடங்கலாக இருந்து வருகிறது. 1970 களின் முற்பகுதியில் இருந்து இந்த நிலை இந்திய அரசியலில் இருந்து வருகிறது.

தற்பொழுது மத்தியில் ஏற்பட்டுள்ள பாரதீயஜனதா அரசு 1996 இல் பாரதீய ஜனதா அமைத்து 13 நாள் மட்டும் உயிர் வாழ்ந்த அரசை விட பலமானது.

### புதிய அரசு நீடிக்குமா?

தற்போதைய அரசு ஐந்து வருடங்கள் நீடிக்கும் என்று பிரதமர் வாஜ்பாய் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனினும் பாரதீய ஜனதா கூட்டணியில் இடம் பெற்றுள்ள அ. தி. மு. க. கூட்டணியின் நிலைப்பாடு இன்னும் கேள்விக் குறியாகவே இருந்து வருவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

கடந்த மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதாவையும் இணைத்து கூட்டணி அமைத்து தமிழகத்தில் அ.தி.மு.க.போட்டியிட்டது.

இந்தக் கூட்டணிக்கு கிடைத்த மொத்த ஆசனங்கள் 30.

அதில் பாரதீய ஜனதாவின் 3 ஆசனங்கள் போக மிகுதி 27 உறுப்பினர்களின் பலம் ஜெயலலிதாவுக்கு உண்டு.

பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்து ஜெயலலிதா போட்டியிட்டாலும் தேர்தல் முடிந்து அரசமைப்பதில் காங்கிரஸுக்கும் பாரதீய ஜனதாவுக்கும் இடையில் போட்டி ஏற்பட்ட போது பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு அளிப்பதற்கு தனது அரசியல் லாபம் கருதி நிபந்தனைகளை விதித்தார் ஜெயலலிதா.

பாரதீய ஜனதா ஆட்சி அமைப்பதற்கு பெரிய தடையாக இருந்தார் ஜெயலலிதா. 27 உறுப்பினர்களைக் கொண்ட தம்மை நிராகரித்துவிட முடியாது என்பதை பாரதீய ஜனதாத் தலைமைக்கு மிக தெளிவாக உணர்த்தி இருந்தார்.


கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு கலைக்கப்பட வேண்டும். தம்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் இருந்து தாம் விடுவிக்கப்பட வேண்டும் என்று ஜெயலலிதா நிபந்தனை விதித்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன.

ஆனால் ஜெயலலிதா இவற்றை ஏற்க மறுத்திருந்தார்.

ஆனால் கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட அமைச்சரவையை நோக்கும் போது ஜெயலலிதாவுக்கு பாரதீய ஜனதா பணிந்து விட்டது போன்றே தெரிகிறது.


ஜெயலலிதா கேட்டபடியே சட்டத்துறை அமைச்சு அ. தி மு. க. விடம் வழங்கப்பட்டுள்ளது.

தமது கூட்டணியைச் சேர்ந்த தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்திக்கே சட்டத்துறை அமைச்சை வழங்கும்படி ஜெயலலிதா கேட்டிருந்தார். ஆனால் பிரதமர் வாஜ்பாய் ஒரு படி மேலே சென்று சட்டத்துறை அமைச்சராக அ தி. மு. க. வைச் சேர்ந்த பி. ஏ. தம்பித்துரையை நியமித்தார்.




### தம்பித்துரையின் கருத்து ஏற்படுத்திய சர்ச்சை

தம்பித்துரை அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் தமிழ்நாடு திரும்பி வெளியிட்ட கருத்து தற்பொழுது அரசியல் சர்ச்சை ஒன்றைக் கிளப்பி விட்டிருக்கிறது.



சந்திரபாபு நாயுடு

ஜெயலலிதா மீது பொய்யான வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதாக தம்பித்துரை தெரிவித்திருந்தார்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள வழக்குகளில் இருந்து தாம் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கையை சமாளிப்பதற்காகவே தம்பித்துரைக்கு சட்ட அமைச்சை வாஜ்பாய் வழங்கினார் என்று நம்பப்படுகிறது.

தம்பித்துரை தமிழ்நாட்டில் அவசரப்பட்டு வெளியிட்ட கருத்துக்கள் ஜெயலலிதாவுக்கு வக்காலத்து வாங்குவதற்காக தெரிவிக்கப்



ஜெயலலிதா

பட்டிருக்கலாம். ஆனால் பாரதீய ஜனதா அரசுக்கு தர்ம சங்கடமான நிலையை இது ஏற்படுத்தி விட்டது.

### ஜெயலலிதா மீதான வழக்குகள்

ஜெயலலிதா மீது தமிழக அரசினால் எட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஆறு வழக்குகளில் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்கு, வருவாய்க்கு மீறி 66 கோடி ரூபா சொத்தைச் சேர்த்த வழக்கு ஆகியவையும் அடங்கும்.

அ. தி. மு. க. வுடன் கூட்டணி அமைக்க முன்னர் சுப்பிரமணிய சுவாமியினால் இந்த இரு வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்த சமயம் ஆளுநர் சென்னாரெட்டியின் அனுமதியுடன் சுப்பிரமணிய சுவாமியால் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு அதன் மீது நீதிமன்றம் பிறப்பித்த ஆணைப்படி புலன் விசாரணை செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மத்திய தரை வழி போக்குவரத்து அமைச்சராக பதவி ஏற்றுள்ள அ.தி.மு.க வைச் சேர்ந்த சேடப்பட்டி முத்தையா மீதும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு உண்டு.

வழக்குகளில் இருந்து விடுபடுவதற்காகவே சட்டத்துறை அமைச்சை கேட்டுப் பெற்றுள்ளார் ஜெயலலிதா.

நிதித்துறையை அளிக்காவிட்டால் அதில் இருந்து வங்கித்துறையைப் பிரித்து தனது கட்சிக்குத் தரும்படி ஜெயலலிதா கேட்டிருந்தார். அதுவும் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய பணியாளர் துறை, பொதுத்துறை ஆகியவையும் அ.தி.மு.க.விடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. சி.பி.ஐ இதன் கீழேயே வருகின்றது.

தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும்; தம்மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கை ஏற்கப்படாவிட்டாலும் அதற்கான வழிமுறைகளை உருவாக்கிக்கொள்ளும் வாய்ப்புக்கள் இந்த அமைச்சுக்கள் மூலம் அ. தி. மு. க. வுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தனது நோக்கங்களை நிறைவேற்றுவதில் தடங்கல் ஏற்படும் பட்சத்தில் பாரதீய ஜனதாவுக்கு அ. தி. மு. க. நெருக்கடியைக் கொடுக்கலாம் என்றே அவதானிகள் கருதுகின்றனர். ★

### உலக உலா
என்.பி.சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org